வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.




புத்தகம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 1993 தை திங்கள் 7-ம் நாள் (20—1—1964) ஞாயிற்றுக்கிழமை ஷஃபான் 23 | இதழ் 34

# பெப்ரவரி 4-உ துக்கதினம்

## கறுப்புக் கொடி உயர்த்தி அனுஷ்டியுங்கள்

### தமிழரசுத் தந்தை அறிக்கை

**1948ம்** ஆண்டு இந்நாட்டுக்கு வழங்கப்பட்ட சுதந்திரம், தமிழ் பேசும் மக்கள் அன்றுவரை அனுபவித்து வந்த உரிமைகளை இழக்கவே வழிவகை செய்து கொடுத்துள்ளது. ஆகவேதான் தமிழ் பேசும் மக்கள் அன்று முதல் பெப்ரவரி 4ம் திகதியைத் துக்கதினமாக அனுஷ்டித்து வருகிறார்கள். இவ்வருடமும் பெப்ரவரி 4ம் திகதி மலையகத்திலும், வட கிழக்கு மாகாணங்களிலும் துக்க தினமாக அனுஷ்டிக்கப்பட வேண்டும். அன்றைய தினம் தமிழ் பேசும் மக்கள் பிரார்த்தனையில் ஈடுபட்டு துக்கம் அனுஷ்டிக்க வேண்டும்.

இவ்வாறு ஓர் அறிக்கையைத் தமிழரசுத் தந்தை திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் சுதந்திரனுக்கு விடுத்துள்ளார்.

அவருடைய அறிக்கை மேலும் கூறுவதாவது:-

பெப்ரவரி மாதம் 4-ம் திகதியை ஒவ்வொரு வருடமும் தமிழ் பேசும் மக்கள் துக்க தினமாக அனுஷ்டித்து வருகின்றனர். இவ்வருடமும் பெப்ரவரி 4-ம் திகதி வடக்குக் கிழக்கு மாகாணங்களிலும், மலையகப் பகுதிகளிலும் துக்க தினமாக அனுஷ்டிக்க வேண்டும்.

தமிழ் பேசும் மக்கள் வதியும் இல்லங்களிலும், வர்த்தக ஸ்தாபனங்களிலும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட வேண்டும். அரசாங்கச் சார்பில் நடைபெறும் சகல கொண்டாட்டங்களையும் அனைவரும் பகிஷ்கரிக்க வேண்டும்.

பாடசாலைகளில் நடைபெறும் வைபவங்களையும் தமிழ் பேசும் பிள்ளைகள் பகிஷ்கரித்தல் வேண்டும்.

இழந்துவிட்ட மொழி உரிமை, குடியுரிமை, நில உரிமைகளை மீண்டும் பெற திட சங்கற்பம் செய்து கொள்ளுவதுடன் அன்றைய தினத்தை பிரார்த்தனையில் கழிக்க வேண்டும்.

இந்நாட்டின் பெரும்பான்மையினரான சிங்களச் சகோதரர்கள் தங்களுக்கு மட்டும்தான் சுதந்திரம் வழங்கப்பட்டது என்ற எண்ணத்தில் தமிழ் பேசும் மக்களை அடிமைகளாக்கிவிடத்தக்க வகையில் சட்டங்களை ஆக்கிவருகின்றனர். அத்தகைய ஒரு வாய்ப்பை அவர்களுக்கு நல்கிய நாள் தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு துக்க நாளாகும்.

இக் கரிநாளை தமிழ் பேசும் மக்கள் அனைவரும் துக்க நாளாக அனுஷ்டிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

#### தீர்மானம்

தமிழரசுப் பாராளுமன்ற உறுப்பினர்களும், உடுப்பிட்டி பிரதிநிதி திரு. எம். சிவசிதம்பரம் அவர்களும் சேர்ந்து பெப்ரவரி 4ம் திகதியை தமிழ் பேசும் மக்கள் அனைவரும் துக்க தினமாக அனுஷ்டிக்க வேண்டுமென்று தீர்மானித்துள்ளனர்.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், வவுனியா, ஆகிய பகுதிகளிலும் பெப்ரவரி 4-ம் திகதியை துக்கதினமாகக் கொண்டாட ஏற்பாடுகள் துரிதமாக நடைபெறுவதாகத் தெரிகிறது.

## இரும்பு மனிதர் கண்ணீர் விட்டார்



சிறிப் பாய்ந்த சிங்கள ஏகாதிபத்திய வெறியைச் சாடி சாய்த்துவிடத் துடித்த வீர இளைஞர்கள் நாட்டின் பல பாகங்களிலும் கிளர்ந்தெழுந்த வேளையிலே, மலையகத்திலேயிருந்தும் துடித்தெழுந்து தமிழ்த் தாயின் துயர்துடைக்க முன்னேறி வந்தனர் இளங்காளைகள் பலர். ஆணவத்தின் பாய்ச்சலையும், அடக்குமுறையின் அட்டகாசத்தையும் எதிர்த்து தம்மார்புகளிலே வெறிச் சூடேறிய துப்பாக்கி ரவைகளுக்கு இடங்கொடுத்து, வீர மரணம் அடைந்தனர் இரு இளைஞர்கள். தமிழ் பேசும் மக்கள் இதயங்களிலே என்றும் நிலையான தியாகத் தீபங்களாக விளங்கும் ஐயாவு பிரான்சிஸ் ஆகிய இருவருடைய சமாதியின் முன்னே தமிழரசுத் தலைவர்களும், இலங்கைத் தொழிலாளர் கழகத் தலைவர்களும் தலைவணங்கி நின்றனர். மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

அப்பொழுது அஞ்சா நெஞ்சுரமும், கொள்கை உரமேறிய உடலும் கொண்ட தொழிலாளர் கழகத் தலைவரும், தமிழரசுக் கட்சி பொதுச் செயலாளருமான டாக்டர் நாகநாதனின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடி கல்லறைகளின் கட்டுகளை நனைத்தன. சூழ்ந்திருந்தோர் அனைவரும் நெஞ்சுருகி கண்ணீர் மல்கினர்.

## கல்வி மந்திரி ராஜினுமா செய்யக்கூடும்?

கல்வி மந்திரி ஜனுப் பதியுதீன் மஹ்மூது தமது பதவியை ராஜினுமாச் செய்ய உத்தேசித்திருப்பதாக நம்பகமான தகவல் கிடைத்துள்ளது. அண்மையில் அரசாங்கக் கொள்கைகளுக்கு மாறாக பத்திரிகையாளர்கள் மத்தியில் தெரிவித்த கருத்துக்கள் அவர் பதவி நீண்ட நாள் நீடிக்காது என்பதை எடுத்துக் காட்டுவதாக அரசியல் வட்டாரங்களில் கருதப்படுகிறது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் கல்வி மந்திரி ஜனுப் பதியுதீன் மஹ்மூத் ஓர் பத்திரிகையாளர் மாநாட்டை நடத்தினர். அந்த மாநாட்டில் அரசாங்கத்தின் போக்கில் அதிருப்தி தெரிவிக்கும் வகையில் சில கருத்துக்களை வெளியிட்டிருந்தார் என்று தெரிகிறது.

பத்திரிகையாளர் மாநாட்டில் மந்திரி வெளியிட்ட கருத்துக்களையிட்டு பிரதம மந்திரி சிறிமாவோ பண்டாரநாயக்கா மந்திரி மஹ்மூதுவிடம் சில கேள்விகள் கேட்கவிருக்கிறாராம். கல்வி மந்திரியாரை மந்திரிப் பதவியிலிருந்து விலகும்படி பிரதமர் கேட்கக்கூடும் என்றும் நம்பப்படுகிறது.

பிரதம மந்திரி தன்னை ராஜிநாமாச் செய்யும்படி கேட்குமுன்னர் தாமாகவே பதவியை ராஜினுமாச் செய்யக்கூடும் எனவும் பலத்த வதந்தி அடிபடுகிறது.

கொழும்பு நகரத் தெருக்களிலெல்லாம் கல்வி மந்திரியாரின் "துரோக"ச் செயல்களின் பட்டியல்களை வரிசைப்படுத்தி அச்சிடப்பட்டுள்ள பெரிய சுவரொட்டிகள் தென்படுகின்றன. மந்திரியின் போக்கைக் கண்டிப்பதற்காக பொதுக் கூட்டங்கள் நடத்தவும் ஏற்பாடுகள் செய்யப்படுவதாகத் தெரிகிறது.

### தமிழ்க் கிராமங்களுக்கு ஆபத்து?

தோப்பூர்- மல்லிகைத்தீவு ஆகிய கிராம சபைகளுக்குச் சேர்ந்த கிராமங்கள் பண்டு தொட்டே தமிழ் பேசும் மக்கள் வதியும் பகுதிகளாகும். இப்பகுதிகளை சேருவிலை கிராம சபையுடன் இணைத்துவிட அரசாங்கம் முயற்சி எடுத்து வருவது மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்திக் கொண்டே வருகிறது. இம் முயற்சியை தோப்பூர் கி. சபை எதிர்த்துள்ளது.

அண்மையில் திருமலை உபஸ்தல ஸ்தாபன கமிஷனர் காரியாலயத்தில் ஓர் மகாநாடு நடைபெற்றது. மூதூர் முதல்வர் ஜனுப் எம். ஈ. எச். முகம்மதலி தோப்பூர் கி. ச. தீர்மானத்தை ஒட்டி பரம்பரை பரம்பரையாக தமிழ் பேசும் மக்கள் வசித்துவந்த பகுதிகளை, சிங்களப் பகுதிகளுடன் இணைக்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார்.



பொலவத்தலாவையில் தமிழ் தியாகிகள் ஐயாவு, பிரான்சிஸ் ஆகியோரின் கல்அறைக்குத் தமிழரசுத் தந்தை மலர் தூவி அஞ்சலி செலுத்துகிறார்.

# அமைதியும் உறுதியும் வாய்ந்த போராட்டமே

## தமிழ்பேசுமினத்தின்போராட்டம்

## பிறக்கவிருக்கும் தமிழகம் தன்னிறைவு பெற்றதாக அமைய வேண்டும்

[ அவ்வப்போது உணர்ச்சிமிக்க கட்டுரைகளை எழுதி, தமிழ் பேசுமினத்துக்கு உற்சாகம் ஊட்டி வரும் 'அறிவழகன்' சமஷ்டி ஆட்சியில் பிறக்கும் தமிழ்ச் சுயாட்சியில், தமிழகம் எவ்விதம் அமைய வேண்டும் என்றும், போராட்டம் வெற்றிகரமாக நடக்க, தமிழ் பேசும் மக்களும், தமிழரசுக் கட்சியும் எவ்வித முயற்சிகள் எடுக்க வேண்டுமென்பதையும் இக் கட்டுரையில் சிறப்பாக எடுத்துரைக்கிருர். ]

பதினைந்து ஆண்டுகளுக்கு முன் மாசிமாதம் நான்காம் நாள் தமிழ் பேசுமினம் தனது இன்றைய நிலைபற்றிக் கனவு கூடக் காணவில்லை. இலங்கை வாழ் மக்கள் அனைவருமே இன்ப சுதந்திரம் பெற்றதாகத்தான் அனைவரும் எண்ணி மகிழ்ந்தனர். "இது எல்லோருக்கும் வாழ்வுதர வந்துற்ற விடுதலையல்ல, தமிழ் பேசுமினத்தைப் பொறுத்த மட்டில் ஆட்சிபீட மாற்றமே தவிர வேறெதுவுமில்லை". என்று சில தீர்க்கதரிசிகள் எடுத்துரைத்தனர். புதிதாக வந்த சுதந்திரத்தைக் கண்ட எமது சமுதாயம்-விளையாட்டுப் பொம்மையைக் கண்ட குழந்தை சகலதையும் மறந்துவிடுவது போல், அன்னையின் எச்சரிக்கைகளை ஏற்க மறுப்பதுபோல்—தன்னைச் சூழ்ந்துவரும் பேராபத்தைக் காணத் தவறியது. எடுத்துரைத்தவர்களையும் வகுப்புவாதிகளெனக் கூறியது. 'ஒற்றையாட்சி மோகம்' என்னும் கொடிய பிணி பீடித்த ஒரு சுய நலவாதிக் கும்பலைத் தமிழ் பேசுமினம் தலைவர்களாகத் தெரிந்தெடுத்துத் தனக்குத்தானே புதைகுழி தோண்டிக் கொண்டது.

'முட்டாளின் சுவர்க்கத்திலே' மிதந்து கொண்டிருந்த தமிழ் பேசுமினம் முதல் முதலாக 1954—1955 ல் விழித்துக்கொண்டது. தன் நிலை உணர்ந்தது. அது தன்னலம் பிடித்த தலைவர்கள் தன்னை அழிவின் வாசலுக்கு அழைத்துச் சென்றுவிட்டதை அறிந்தது. தனது அறியாமையை எண்ணி எண்ணி நொந்தது.

முன்பு தம்மை மாற்ருன் அழிக்க வரும்போது மக்கள், கையிலே வாளெடுத்து, வேலெடுத்து, வில்லேந்திச் சென்று களத்திலே பொருதுவர். இன்றைய நிலைமை வேறு. அன்று மக்களை வழி நடத்துவது மன்னன். இன்று வழி நடத்துவது மக்களாலேயே தேர்ந்தெடுக்கப்படும் மக்கள் தலைவன். 1956 லே தமிழ் பேசுமினம் 'வாக்கு' என்னும் வாளெடுத்து அறிவென்னும் கேடயமேந்தித் தேர்தல் களத்திலே குதித்து நல்ல தலைவர்களைத் தேர்ந்தெடுத்தது.

### சத்திய யுத்தம்

அன்றிலிருந்து இன்று வரை தமிழ்பேசுமினம் கத்தியின்றி ரத்தமின்றி ஒரு சத்திய யுத்தத்தை ஆட்சிபீடத்திற்கெதிராகத் தொடுத்துக் கொண்டிருக்கிறது. இவ்வளவு காலமும் என்ன சாதித்தீர்கள் என்று கேட்கிருர்கள் 'தோழர்கள்'. 'தோழர்களே! எவ்வளவோ சாதித்துவிட்டோம் நாம். 'A slave who is conscious of his slavery is half-free' (தான் அடிமை என்ற விழிப்புணர்ச்சி அடிமைக்கு ஏற்பட்ட போது அவன் விடுதலைப் பாதையில் பாதிதூரத்தைக் கடந்தவனுகிருன்)என்ற உங்கள் லெனினின் கூற்றுப்படி பார்த்தால் நாம் விடுதலைப் பாதையில் வெகு வேகமாக முன்னேறி வந்து கொண்டிருக்கிருேம்.'

அந்தக் காட்டிக் கொடுக்கும் கூட்டம் கேட்கிறது மீண்டும் 'இனிமேல் யாது செய்யப் போகிறீர்கள்? இவ்வளவு காலமாகச் சாதிக்க முடியாததை இனிமேலா சாதிக்கப் போகிறீர்கள்? ஆகவே ஒற்றையாட்சியை அணைத்துக் கொள்ளுவோம்' என்று. 'ஒற்றையாட்சி'ச் சுவர்க்கத்திலே சன்னிகண்டு பிதற்றும் இவர்கள் அந்தச் சுரத்தின் கொடுமையால் செயலிழந்து செத்துக் கொண்டிருக்கிருர்கள், (அரசியல் உலகிலிருந்து). ஆகவே இவர்களுடைய அர்த்தமற்ற கேள்விகளுக்குப் பதில் கூறுவதிலே காலத்தை விரயமாக்க வேண்டாம் நாம். ஒன்றைமட்டும் கூறுவாம், 'மகாத்மாவின் வாழ்க்கை வரலாற்றைத் தரும் நூலொன்றைப் புரட்டுங்கள். ஒரு மாபெரும் சாம்ராச்சியத்திற்கெதிராக அவர் தொடுத்த அகிம்சை யுத்தம் எத்தனை வருடங்களாக நீடித்தது என்பதைப் படித்தறியுங்கள்.'

சிலர் நேரடிப் போராட்ட நேரங்கள்தவிர ஏனைய நாட்களிலே தமிழ் பேசுமினம் ஆமைகளாக அடங்கிக்கிடப்பதாக எண்ணுகிருர்கள். இதன் எதிரொலிதான் 16-12-62 தேதித் 'தமிழனி'லே வெளியாகிய இக் கவிதைக் கேள்வி:

அறப்போரில் வீரரென
ஆணவமாய்ப் பேசியவர்
புறம் போந்து புதர்களிலே
புகுந்தொதுங்கி விட்டாரா?
சிந்தோங்கு செந்தமிழா?
சிரழிந்த அன்னவரை
மறங்காத்த தமிழினம்
வழிகாட்டக் கொள்ளுவதா?

போராட்டத்தின் தன்மை உணராத ஒருவருடைய

**'அறிவழகன்'**

கேள்வி இது. இதற்குக் கொடுக்கப்பட்ட பதில் நமக்கு அனுவசியம்.

### போராட்டத்தின் இரு பிரிவுகள்

இன்றைய எமது போராட்டத்தை இரு பெரும் பிரிவுகளாகளாகப் பிரிக்கலாம். ஒன்று நேரடிப் போராட்டம். மற்றது அமைதியான அன்ருடப் போராட்டம்.

இந்த அன்ருடப் போராட்டத்தின் தன்மையுணர்ந்து நடப்பவர்கள் சிலரே. இதன் சக்தியின் கடுமையை உணர்ந்தால் தமிழ் பேசுமினம் தனது—சமுதாயத்தின் விடுதலையை வெகு விரைவிலே காணலாம். ஒரு மனிதனைப் பல லட்சக்கணக்கான குண்டூசிகள் ஏககாலத்திலே குத்தினுல் அவன் எப்படி வலியின் கொடுமையால் செயலற்றுப் போவானே அது போலவே மக்கள் தொடுக்கும் இந்த அமைதியான போராட்டமும் ஆட்சிபீடத்தை அதிரச் செய்யும்.

அன்ருட வாழ்க்கையிலே தமிழ் பேசுபவன் தமிழ் பேசுவபனுகவே நடந்தால் ஆட்சியாளரின் ஆணவத்தை அடக்கலாம். அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ளும்போதெல்லாம் தமிழிலேயே எழுத வேண்டும். தமிழிலெழுதினுல் பதில் கிடையாதே! கால தாமதமேற்படுமே? என்றெண்ணி ஆங்கிலத்திலே தொடர்பு கொண்டால் தமிழ் தனக்குரிய பதவியைக் கட்டாயம் இழந்துவிடும். எம்முடைய இந்தத் தாக்குதலுக்கு எதிர்த் தாக்குதலாக அரசாங்கம் தமிழிலே வரும் தபால்களை விண்ணப்பங்களைத் தாமதித்தோ அல்லது கவனியாமலோ விடலாம். தாக்குதலைப் பொறுமையுடன் சமாளிப்போம். அப்போது அரசாங்கம்பணிந்தேயாகவேண்டும். அரசாங்க அலுவலகங்களிலே தமிழ் ஊழியர்களை ஒழித்துத் தமிழிலேயும் காரியங்களைக் கவனிக்கும் நிர்ப்பந்தம் ஏற்படும். தந்திகள் தபால்கள் யாவும் தமிழ் மயமாகவேண்டும். சகல விதமான விண்ணப்பத் தாள்களையும் தமிழிலேயேயன்றிப் பெற்றுக்கொள்ளக் கூடாது. இந்த உரிமை மறுக்கப்பட்டால் இது பற்றித் தெரிவிக்க வேண்டிய இடத்திலே தெரிவித்து நீதி பெற வேண்டும். இந்த ஆட்சியிலா நீதி கிடைக்கப் போகிறது? என்றெண்ணி அலுத்துச் சலித்துக் கொள்ளக் கூடாது. பலன் கிடைக்கும் வரை போராடுவோம். ஒருவர் இருவராயின் அரசாங்கமும் அதிகாரிகளும் புறக்கணிக்கலாம். ஆயிரமாயிரம் மக்கள் ஒன்று சேர்ந்துவிட்டால் புறக்கணிக்க முடியுமா? அலுப்பும் சலிப்பும் ஏற்பட்டால் அழிவுப்பாதையில் அடியெடுத்து வைக்கிருேமென்று அர்த்தம்.

### அமைதியும், உறுதியும் வேண்டும்

இன்று ஆசிரியர்களனைவரையும் சிங்களம் படிக்கும்படி வற்புறுத்தும் அரசாங்கம் நாளை மாணவர்களை வற்புறுத்தும். அதை ஒவ்வொருபெற்ருேரும்எதிர்க்க வேண்டும். எமது குழந்தைகள் அடிமைகளாவதை அனுமதிக்கோம் என்று தெளிவாகக் கூறிவிட வேண்டும். அதோடு வருங்கால ஈழத் தமிழகத்தை உருவாக்கும் சிற்பிகள் 'உயிர் போகினும் கற்போம் சிங்களம்' என்று கூறி மறுத்து நிற்க வேண்டும் இந்த மறுப்பை அமைதியாக நடத்திவெற்றி காண்போம். வகுப்புகளுக்குச் சிங்கள ஆசிரியர் வந்தால் எதுவும் கூருது வாயைத் திறவாது மௌனமாயிருந்து பொறுமையோடு அமைதியாக ஆனல் உறுதியாக இருந்தால் சிங்கள ஆசிரியர்கள் மூட்டையைக் கட்ட வேண்டியதுதான். பாடசாலையிலிருந்து விலக்கி விடுவார்களோ என்ற பயம் தேவையில்லை. ஒருவர் இருவராயின் விலக்கலாம். பாடசாலை முழுவதுமே எதிர்க்கும்போது, எல்லோரையும் விலக்கிவிட்டு யாரை வைத்துக் கொண்டு பாடசாலை இயங்கப் போகிறது?

இதுபோலவே ஆசிரியர்கள் முதல் அரசாங்க ஊழியர்கள் வரை அனைவரும் சிங்களம் படிப்பதில்லை என்று உறுதியாக இருக்க வேண்டும்.

தமிழ்ப் பிரதேசங்களிலேயுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் யாவும் தமிழிலேயே செயலாற்றவேண்டும். இங்கு தலைமை வகிக்கும் 'பெருந் தலைகள்' சுய நலம் காரணமாக இதைச் செய்ய மறுத்தால், பொது மக்கள் தமது அயராத முயற்சியால் தமிழிலேயே செயலாற்றும்படி செய்ய முடியும்: மக்களுக்காகத்தான் நிர்வாகம். ஆகவே அது அவர்களுடைய மொழியிலேதான் நடைபெற வேண்டும்.

### அன்னையின் நிலை

கருவுற்றிருக்கும் தாய் பிறக்கப்போகும் குழந்தையை எண்ணி எண்ணி உவகையடைகிருள். கருப்பையிலே கண்டுகளிகொள்ளுகிருள். அது மட்டுமல்ல தனது குழந்தை ஆரோக்கியமும் திடகாத்திரமும் உள்ளவனுயிருக்க வேண்டுமென்றெண்ணித் தனது உடல் நலத்தைப் பேணுகிருள். வரப்போகிற குழந்தைக்கு வசதிகள் பல செய்கிருள். ஒவ்வொரு கணமும் குழந்தையின் நலமே கருதித் தியாகம் பல புரிகிருள். வேண்டுமானுல் உயிரையும் கொடுக்கத் தயங்கமாட்டாள்.

இந்தத் தாயின் நிலையிலே தான் இன்று ஈழத் தமிழ் பேசுமினம் இருக்கிறது. பல காலமாகத் தவமிருந்து, என்று பிறக்குமோ என்று ஏங்கிக்கிடந்து எதிர்பார்க்கும் விடுதலை என்னும் வாழ்வு தரும் குழந்தை பிறக்கப்போகிறது. அந்தக் குழந்தை ஆரோக்கியமும் அறிவும் நிறைந்து திடகாத்திரமாய் நீடுழி வாழ நாம் இப்போதிருந்தே ஆவன செய்யவேண்டும். அதற்காகத் தியாகங்கள் புரிவோம். உயிரையும் தருவோம்.

### புதிய தமிழகம் காணுவோம்

சுதந்திர ஈழத் தமிழரசிலே வறுமை இருக்கக் கூடாது. பிணிகள் பரவக் கூடாது. அறியாமை நிலவக் கூடாது. தீயசக்திகள் உலவக்கூடாது.

வறுமை அகல நாடு வளம் பெற வேண்டும். தமிழ்ப் பிரதேசங்கள் நிலவளமும், தொழில் வளமும் பெருகி வளர வேண்டும். பணம் படைத்தவர்கள் புதிய தொழிற்சாலைகளைத் தமிழ்ப் பிரதேசங்களிலேயே நிறுவ வேண்டும். இதனுலே புதிய நகரங்களும் உருவாகும். பலருக்கு வேலையும் கிடைக்கும். இன்றைய இலங்கை அரசு போல வரியாலேயே வாழ நினைக்காது தமிழரசு. ஒவ்வொரு குடிமகனுக்கும் வயிருர உணவு, மானம் காக்க உடை குந்தியிருக்க நல்ல குடிசை இவை மூன்றையும் தவருமல் தர இன்றிலிருந்தேஉழைக்கவேண்டும்.

அறியாமைதான் பல தீமைகளுக்கும் மூலகாரணம். ஆகவே ஒவ்வொருவரும் போதியளவு படிப்பறிவு பெற்றிருக்க வேண்டும். இதற்காக முதியோர்களுக்குக் கல்வியறிவு புகட்ட ஆர்வமிக்க இளைஞர்களும் யுவதிகளும் முன் வந்து தமிழரசுக் கட்சியின் உதவியோடு இரவுப் பாடசாலைகளை நிறுவ வேண்டும். மக்கள் அறிவாளிகளாகவும், நோய் பிணி அற்றவர்களாகவும் வாழும் படியான நிலைமையை ஏற்படுத்துவதவசியம். அறிவும், ஆரோக்கியமும், நல்லொழுக்கமுமுள்ள ஒரு சமுதாயம் தான் வெற்றிப் பாதையிலே வேகமாக முன்னேற முடியும்.

### கட்சி ஆற்ற வேண்டிய கடமை

இப்படிப்பட்ட அன்ருடப் போராட்டத்தைச் செவ்வனே செய்வதற்கும்—விடுதலையை வரவேற்கமக்களைத் தயார்ப் படுத்துவதற்கும்—போதிய தலைமையுதவி வேண்டும். இதைத் தருவதற்கு ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் தமிழரசுக் கட்சிக் கிளைகள் இருப்பது போல் நகரங்களிலேயும் கிராமங்களிலேயும் உபகிளைகள் தோன்ற வேண்டும். அப்போதுதான் போதிய பிரச்சாரத்திற்கு வசதி ஏற்படும். இன்றுள்ள நிலையிலே கட்சியின் அடுத்த நடவடிக்கை பற்றிப் பலருக்குத் தெரிய வாய்ப்பு இருப்பதில்லை.

தமிழரசுக் கட்சியின் கிளைகளும் மக்களுக்கு இன்றைய எமது நிலைமை பற்றித்தெளிவாகத் தெரியத்தருவதோடு போராட வேண்டிய முறைகள்பற்றியும் விளக்கி, வேண்

(11-ம் பக்கம் பார்க்க)

தொலைபேசி 693. HIRATA தந்தி "சேகரன்"
உறுதியான நைலோன், தருலோன் நூல்களும், வலைகளும்

கிடைக்குமிடம்:
சேகரம் & சன்ஸ்
74, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.




மூ. சுப்பிரமணியம்,
மாவிட்டபுரம்.

கே: எனது நண்பன் ஒருவன் புத்தமதத்தில் சேர்ந்துள்ளான். அவன் என்னையும் அந்த மதத்தில் சேரும்படி வற்புறுத்துகிறான். நான் புத்த மதத்தில் சேர்வதா? இன்றேல் நட்பைக் கைவிடுவதா?

ப: புத்த மதத்தில் சேர்ந்த நண்பனுக்கு நிர்வாணம் கிடைத்துவிட்டதா? முதலில் அதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

கே: உங்களைப் போல நானும் கேள்விகளுக்குப் பதிலளிக்க விரும்புகிறேன். இதற்கு வழி...?

ப: முதலில் உங்கள் இல்லத்தரசியின் ஆயிரமாயிரம் கேள்விக்குப் பதிலளித்துப் பழகுங்கள்.

கே: சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் இனி என்ன செய்யப் போகிறார்கள்?

ப: அது தெரியாமல் தானே விழிக்கிறார்கள்.

ஃ

என். எம். அக்பர், கிண்ணியா.

கே: தனது படம் அச்சிடப்பட்ட காலண்டர் அட்டைகளைத் தொகுதி மக்களிடம் விற்கும்படி மூதூர் இரண்டாவது மந்திரி தனது ஆதரவாளர்களிடம் கொடுத்திருக்கிறாராம். இது ஏன்?

ப: மக்களை நேரடியாகச் சந்திக்க பயப்படுகிறார் போலும்! மக்கள் தம் கோபத்தை அட்டைப்பட உருவத்தின் மீதாவது செலுத்தட்டுமே என்ற எண்ணந்தான்.

ஃ

சி. பொ. ஈழத்துமணி,
யாழ்ப்பாணம்.

கே: தி. மு. க. தலைவர்கள் பிரிவினை கோரிக்கையைத் தற்போதைக்கு நிறுத்திக் கொண்ட பின்னரும் இந்திய அரசாங்கம் பிரிவினைத் தடைச் சட்டம் கொண்டுவர முயற்சி செய்வதேன்?

ப: நிறுத்தியிருக்கும் போது தடுப்பது சுலபமல்லவா? தி. மு. க. கவனத்தை இமயத்தின் பால் திருப்பிவிட்டு, காரியத்தை நிறைவேற்றும் தந்திரம் இது.

ஃ

சூ. மரியதாசன்,
உருத்திராபுரம்.

கே: எனக்கு உத்தியோகமொன்றும் கிடைக்கவில்லை. ஒரு மந்திரியைப் பிடித்தால் ஏதாவது உதவி செய்வாரா?

ப: உதவி பெற ஒரு கையால் பிடியுங்கள் (கறுப்புக் கொடியை அல்ல-மந்திரியை) அதே சமயத்தில் மற்றக் கையால் உங்கள் சட்டைப் பையைத் தட்டிக் காட்டுங்கள்.

கே: உங்களுக்கு சுவீப் டிக்கட் முதற் பரிசு கிடைக்கக் கனவு கண்டேன். எனக்கும் ஏதாவது தருவீரோ?

ப: ஏதாவதென்ன? பரிசு முழுவதையும் உங்களுக்கே கொடுக்க நானும் கனவு கண்டேன்.

கே: அடுத்த வீட்டுச் சண்டையை விலக்கப்போன அம்மாவை சீனக்காரன் பலமாக வரவேற்றானே! இதில் ஏதாவது சூழ்ச்சி......?

ப: அடேயப்பா! நேரு சீனுவுக்குப் போன போது இதைவிடப் பத்து மடங்கு பலமாக அவரையுந்தான் வரவேற்றான் சீனக்காரன்! பிறகு அவர் முதுகில் ஓங்கிக் குத்திவிட்டானே! அந்த மாதிரி சமயம் வரும்போது அம்மாவுக்கும்......?

ஃ

"குமாரச் செல்வன்",
ஏழாலை மேற்கு.

கே: பிரதமமந்திரியின் பீக்கிங் பயணம் குடும்ப யாத்திரையா? அல்லது சமாதான யாத்திரையா?

ப: மாமி, மருமகன், மருமகனின் மனைவி, தம்பி என்ற இந்தக் குடும்பப் படையெடுப்புக்கு முன்னைய தங்களின் இராணுவப் படையெடுப்பு தூசிக்குச் சமானம் என்று கருதுகிறார்களாம் சீனர்கள்.

ஃ

"தாமரையாள்",
ஏழாலை மேற்கு.

கே: பருத்தித்துறைக்கு விஜயம் செய்த சிங்கள மந்திரிக்குக் குடை பிடித்து, மாலை போட்டு, ஆடிய ராசாவுக்குப் பலன் கிட்டியதா?

ப: அதனால்தான் அவர் நகரசபைக்குச் செலுத்த வேண்டிய ரூ. 45,000 "ஸ்வாஹா" செய்ய முடிகிறதாம்.

ஃ

எம். ஏ. ஜப்பார், ஏறாவூர்.

கே: குயுக்தியாரே இனிமேல் வரும் பாராளுமன்றத் தேர்தலுக்கு நீரும் ஒரு கட்சியின் அபேட்சகராகப் போட்டியிடுகிறீரா? வேண்டிய செலவுகளையெல்லாம் நான் தருகிறேன்.

ப: சபாஷ்! உங்கள் தியாகத்தை மெச்சினேன். தேர்தல் செலவுக்கான பணத்தை உடனடியாக எனக்கு அனுப்பி வையுங்கள்.

ஃ

எம். லூர்துமேரி, மூதூர்.

கே: 6-1-63 தினசரிகளில் ஒன்றில் யாழ் நகரில் நடந்த ஆர்ப்பாட்டம் பற்றி அப்படியே எழுதியிருந்தது! மற்ற தினசரி அதற்கு நேர் விரோதமாக எழுதியிருந்தது, அது ஏன்?

ப: புளுகினிக் கேசரி மந்திரிகளுக்குப் பந்தம் பிடிக்க கட்டுக் கதை புனைந்தது அதன் வண்டவாளம் அம்பலத்துக்கு இழுக்கப்பட்டு இன்று சந்தி சிரிக்கிறது.

ஃ

எஸ். எஸ். எஸ். பிள்ளை,
ஹாலி-எல.

மலைநாட்டுத் தமிழன் நாட்டின் உயிர் நாடி. அவன் உரிமையைப் பறித்த யு. என். பி. யும் சுதந்திரக் கட்சியும் கூட அவன் தயவை நாடுகின்றனவே, ஏன்?

ப: அவன் எழுச்சி பெற்றால் அவனிடமிருந்து பறிக்கப்பட்ட உரிமைகளை அவன் பறித்துவிடுவான். எனவே அவன் வெகுண்டெழுவதைத் தடை செய்யவே யூ. என். பியும், சுதந்திரக் கட்சியும் அவனைத் தேடி ஓடுகின்றன.

ஃ

க. சுப்பிரமணியம், காரைநகர்.

கே: 'ஒருத்தி ஒருவன்' என்ற ரீதியில் அன்றைய பெண்கள் நெற்றியில் ஒரே ஒரு திலகம் இட்டார்கள். இன்று மேலே ஒன்றும், கீழே ஒன்றுமாக இரண்டு திலகங்கள் இடுகிறார்கள். அப்படியானால், காதலிக்க ஒருவன், கல்யாணத்திற்கு ஒருவன் என்ற அர்த்தமா?

ப: இல்லை. சாப்பாடு போட ஒருத்தன், உதைக்க ஒருத்தன் என்று அர்த்தம்.

ஃ

பி. செல்லத்துரை, காவத்தை.

கே: உலகில் ஒருவன் எதைப் பற்றி அதிகமாகத் தெரிந்து கொள்ள வேண்டும்?

ப: தன்னைப்பற்றி.

ஃ

மு. சிவசுந்தரம்,
வல்வெட்டித்துறை.

கே: 'துரோகி' என்ற பத்திரிகை ஆரம்பிக்க எண்ணியுள்ளோம். இதற்கு ஆசிரியராகப் பணி புரிய, பத்திரிகை அனுபவம் வாய்ந்த ஒருவரைத் தாங்கள் சிபார்சு செய்ய முடியுமா?

ப: கேசரி தயாரிக்கும் எமகாதக எட்டப்பனே அதற்குத் தகுந்தவர்.

திருவாளர்
**குயுக்தியார்**
மே/பா சுதந்திரன்
தபால் பெட்டி இல. 1183
கொழும்பு-12.

ஃ

வி. சண்முகலிங்கம், நாரந்தனை.

கே: சிறிது காலமாக இலங்கை முற்போக்குக் குஞ்சுகளின் ஆட்டத்தைக் காணுமே?

ப: சீன-இந்திய யுத்தம் அவர்களை மட்டந்தட்டி விட்டது.

ஃ

"கேக்கே", அக்கரப்பத்தனை.

கே: நம் நாட்டில் பாட்டாளி மக்கள் மத்தியில் ஒரு பேச்சும் பாராளுமன்றத்தில் ஒரு பேச்சும் பேசும் பச்சோந்தி யாராவது உண்டா?

ப: ஏனில்லை? அம்மாதிரி இரட்டை நாக்கு உடையவர் தானே உங்கள் நியமனப் பிரதிநிதி.

ஃ

மெ. முத்துலிங்கம்,
தெல்தொட்ட.

கே: குயுக்தியாரே! ஒரு நண்பர் மூன்று ஆண்டுகள் வரை என்னுடன் அன்பாகப் பழகினார். ஆனால் அவர் என்னை இடையில் ஓர் அபாயமான வழியில் ஏமாற்றிச் சென்றார். நான் அதிலிருந்தும் தப்பிக் கொண்டேன். பிறகும் அவர் என்னோடு அன்பாக பழகுகிறார். மீண்டும் அவர் எனக்கு துன்பம் விளைவிப்பாரா?

ப: ஓகோ! அவர் நம்ம தனிப்பெரும் தலைவரைப் போன்றவராக்கும்! ஜாக்கிரதை! மீண்டும் காலை வாரி விடுவார்.

ஃ

செல்வி ஜெயராணி, வேலாயுதப் பிள்ளை, பொறளை.

கே: வாழ்வு வளம்பெற எது முக்கியம் தேவைப்படுகிறது?

ப: திடீர் பணக்காரனாக ஒரு குறுக்கு வழி தேவை.

கே: தங்கள் நினைவில் நின்று நீங்காத நினைவு?

ப: யாழ்ப்பாணத்தில் சத்தியாக்கிரகத்தின் போது தமிழ் மக்கள் பட்ட அடியும், வேதாரணியம் கடற்கரையில் உப்பு சத்தியாக்கிரகத்தின் போது தமிழ் மக்கள் பட்ட அடியும்.

கே: சிரிப்பவர் அழுவார்கள் என்று கூறுகின்றார்களே, ஆனால் நீங்கள் சதா சிரித்துக்கொண்டு இருக்கின்றீர்களே. இதன் மர்மம் என்ன?

ப. நீங்கள் சிரிப்பையே என்னிடம் எதிர்பார்க்கிறீர்கள். எனவே நான் அழுதாலும் சிரிப்பதாகவே உங்களுக்குத் தோன்றும்.

ஃ

க. இ. கண்ணப்பன்,
திருக்கோவில்.

கே: ஒரு ஏழை விவசாயிக்கும் ஒரு விஞ்ஞானிக்குமுள்ள வேறுபாட்டை விளக்குவீர்களா?

ப: வயிற்றுக்கும் மூளைக்குமுள்ள வேறுபாடு தான். வயிற்றுக்கு உணவளிக்கிறான் விவசாயி, மூளைக்கு அறிவளிக்கிறான் விஞ்ஞானி.

ஃ

"வண்ணையூர்க்கலைஞன்",
வண்ணார்பண்ணை.

கே: "சுதந்திரக்" கட்சியின், எதிர்காலம் எப்படி இருக்கும்?

ப: இக் கட்சியின் எதிர்காலம் பயங்கரமானது. பதவி இழந்தன்று இக் கட்சி மூன்று துண்டுகளாக முறித்து விழும்; வலதுசாரி, இடதுசாரி, இடைச்சாரி என்று.

ஃ

செல்வி ஜெயராணி, சபாபதிப் பிள்ளை, மல்லாகம்.

கே: யூ. என். பி. யின் அமோக வெற்றி எதைக் குறிக்கிறது?

ப: அம்மாவின் அழுகைக்கு கிராக்கியில்லை என்று தெரிகிறது.

கே: உமக்குத் துப்பறியத் தெரியுமா?

ப: ஓ! தெரியுமே! துப்பறிந்த செய்தியொன்று உங்களுக்கு சொல்லட்டுமா? மந்திரிகள் யாழ் கோட்டையினுள் தங்கியிருந்தபோது ஓர் எம். எம். வியின் காரில் இரு இளம் பெண்கள் 'விர்'ரென்று பறந்து சென்றார்களே, இது தெரியுமா உங்களுக்கு?

## அலங்காரம் பெண்மைக்கு அணியாமோ?

ச. அமிர்தநாதர்

மதிமுகத்தாள் மான்விழியாள் என்பார் ஏற்றி
வண்ணமயில் சாயல் அவள் வடிவு என்பார்
கவிவடிப்பார் பெண்ணழகை எண்ணி எண்ணி
கற்பனையின் காவியத்தின் ஊற்று என்பார்
நிதியாகப் போற்றிடும் பெண் புற அழகில்
நிலையான பெண்மை ஒளி செய்யுமாமோ
துதிபாடும் நாற்குணமும் கற்பும் அன்றோ
துலக்கிடுமே பெண் எழிலைத் தூயதாக.

அலங்கார உடையணிகள் யாவும் சேர்ந்து
ஆகுமோ பெண்மைக்கு அணிகலனாய்
துலங்காது பெண்மை என்றும் துருவிப்பார்ப்பீர்
தூயவழி நடந்துலகம் வாழ வைப்பீர்
நலங்காப்பீர் தாய்க்குலத்தீர் அறங்கள்யாவும்
நன்முறையில் வளர்வதும் நும் பணியால் அன்றோ
சினங்காப்பீர் இவையாவும் தேர்ந்த உண்மை
செய்திடுவீர் பெண்மை எழில் செகத்தில் ஓங்க.

தாய்மைகண்டு மகிழ்தாலும் கடமையுண்டு
தரவேண்டும உத்தமரைத் தரணியோர்க்கு
சேய்மையிலே நின்று நித்தம் இறைவன்பாதம்;
செய்திடுவீர் மனைமாட்சி சீராய் ஓங்க
வாய்மையுடன் வளர்த்திடுவீர் தூய காதல்
வழங்கிடுவீர் நற்குணங்கள் வையத்தார்க்கு
தூய்மை செய்வீர் நும்பணியால் துடைத்து ஞாலம்
துலக்கிடுவீர் உங்கள் குலப்பெருமைவாழ்க!



ராஜ பீடி ஸ்பெஷல்
இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும்
எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்
ராஜ பீடி ஸ்பெஷல்
ஒன்றே தான்
புகைத்து பல்லாவடைபுங்கள்
ராஜா பீடி கம்பனி
கொழும்பு-14.
டெலிபோன் : 2739

# சந்தித்து வந்தவை

காலகண்டன்

சோதிடம் பார்ப்பது, ஜாதகம் கணிப்பது, ரேகை பலாபலன்களை அறிவது ஆதியனவற்றில் சிங்கள மக்கள் மிகுந்த ஈடுபாடும், அசைக்கமுடியாத நம்பிக்கையும் உடையவர்கள். சிங்களவர்களிலும் பிரசித்தி பெற்ற சாத்திர கணித விற்பன்னர்கள் பலர் இருக்கின்றனர்.

சிறிமாவோ பண்டாரநாயக்கா 1960-ம் ஆண்டு இறுதியில் திடீரென இந்தியாவுக்குத் தனது புத்திரனுடன் பிரயாணமானுர் அல்லவா? அது சாத்திரங்கேட்டதின் விளைவுதானும்.

ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் அம்மையாரும் அவருடைய மகன் அனுராவும் இலங்கையில் இருக்க நேர்ந்தால் அவர்களிருவருக்கும் தீங்கு ஏற்படக்கூடும் என்று சோதிடர் ஒருவர் குறிப்பிட்டிருந்தாராம். அதைக் கேள்வியுற்று துயரப்பட்ட சிறிமாவோ அம்மையார் தமது புதல்வனை அழைத்துக்கொண்டு இந்தியாவுக்கு ஓடினுராம்.

முறை அலசி ஆராய்ந்த அந்த சோதிடர் தனது கணித முடிவை வெளியிடத் தயங்கினுராம்.

உள்ளதை உள்ளபடி கூற வேண்டும் என்று அந்த உயர்தர அதிகாரி கேட்டதும் நிலைமையைத் தயங்கித் தயங்கி சோதிடர் வெளியிட்டாராம். சோதிடர் கூறிய முடிவில் இலங்கை அரசியலின் எதிர்கால நிலை தெளிவாக விளக்கப்பட்டதாம்.

சோதிடர் கூறிய முடிவு பின்வருமாறு:—

எதிர்காலத்தில் தமிழ் பேசும் இனத்தின் உரிமைப் போராட்டம் மிகவும் உக்கிரமடைந்து, இலங்கை இரு அரசியற் கூறுகளாகப் பிரிக்கப்பட்டேதிரும். இவ்விரு பாகங்களுக்குமிடையில் ஒரு மத்தியஸ்தராக இந்த ஜாதகர் இருப்பார்.

இவ்வாறு இந்த சோதிடர் கூறிய 'கூற்றை அந்த அதிகாரி மட்டுமல்ல, அரசியலில் அக்கறைகொண்ட சிங்களப்பிரமுகர்கள் அனைவரும் ஒதுக்கொள்ளவேண்

கசிப்பு எத்தனையோ வகையில் மக்களுக்குப் பெருந்தீங்குவிளைவிப்பதாயிருந்துங்கூட அதையே மக்கள் பெரிதும் விரும்புகின்றனர்.

எமது இலங்கை மக்கள்— அதிலும், இந்நாட்டின் பெரும்பான்மையினர் தீங்கு விளைவிக்க ஏதுவாகும் எந்தக் காரியத்திலும் முன்னேடியாகத் திகழுகின்றனர்.

கசிப்பு வியாபாரத்தில் கிழக்கு மாகாணத்திலுள்ள வாடி வீடு ஒன்றும் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறது என்ற செய்தி அம்மான் காதுகளுக்கு எட்டியிருக்கிறது. பிரசித்திபெற்ற இந்த வாடி வீட்டின் நிர்வாகி ஒரு பெரும்பான்மை சமூகத்தவர்தான். இவரிடம் கசிப்பு கிடைக்கும் என்பது பகிரங்க இரகசியம். கலால் இலாகாவரை இக் கசிப்பு வியாபாரம் பற்றிய சகல விவகாரங்களும் நன்கு தெரியும். ஆனல் இந் நபர் எவருக்கும் அஞ்சாத சூரராகத் தனது வியாபாரத்தைப் பகிரங்கமாகவே நடத்திவருகிருர்.

## ★ சோதிடத்தில்—தமிழரின் எதிர்காலம்

## ★ கசிப்புக்கு கலால் அதிகாரி உடந்தை!

## ★ பொங்கல் விழாவில் சிங்களப் பிரசாரம்

## ★ விளம்பர வியாபாரம் செய்யும் எம். பி.

இதே காலத்தில்தான் இலங்கையிலுள்ள சகல பாடசாலைகளையும் அரசாங்கம் கையேற்றது. அதைத் தொடர்ந்து நாட்டின் பல பாகங்களிலும் பல தரப்பட்ட கிளர்ச்சிகள் ஏற்பட்டுக்கொண்டிருந்தன.

★

சோதிடத்தில் நம்பிக்கை வைத்திருக்கும் இன்னுமொரு பிரபலஸ்தரின் குடும்பத்தில் ஏற்பட்டுள்ள சலசலப்பு பற்றிய ருசிகரமானதும், தமிழ் பேசும் மக்களுக்கு ஓரளவு மகிழ்ச்சி ஊட்டக் கூடியதுமான செய்தி அம்மானுடைய காதுகளுக்கு எட்டியிருக்கிறது.

அரசாங்க இலாகா ஒன்றில் உயர்தர பதவி வகிக்கிருர் ஒருவர். அவருடைய மகனுடைய ஜாதகக் குறிப்பை ஒரு பிரபல சோதிடரிடம் காண்பித்தார்களாம், கிரக நிலைகள் முதலியவற்றை பல

டியிருக்கிறதாம். இலங்கை சிங்கள அரசியலார் வட்டத்தில் மிகவும் மதிப்பும், செல்வாக்கும், நம்பிக்கையும் பெற்ற அந்தச் சோதிடரின் வாக்கு எதுவும் இதுவரை பொய்யானதே கிடையாதாம்.

இலங்கை வாழ் மக்கள் அனைவரையும், ஒரேமொழி, ஒரே மதம், ஒரே இனமாக்கிவிடக் கனவு கண்டுகொண்டிருக்கும் சிங்கள எதேச்சாதிகார அரசியல்வாதிகளுக்கு இந்தச் சோதிடரின் முடிவு பெரிய தலை வேதனையை ஏற்படுத்தியிருப்பதில் ஆச்சரியம் எதுவுமில்லையல்லவா?

★

நாட்டில் பரவரும் கசிப்புத் தொல்லையைத் தொலைக்க வழி தெரியாது அரசினர் தவிக்கின்றனர். தீங்கு விளைவிக்கும் பொருட்களையே மக்கள் மென்மேலும் விரும்பி மோகிக்கின்றனர்.

கிழக்கு மாகாணத்திலுள்ள ஒரு பட்டணத்திலுள்ள கலால் அதிகாரி ஒருவர் இந்த வாடி வீட்டுக்கு வந்து சாவகாசமாகத் தங்கிப் போகிருராம். இந்த அதிகாரியின் திருவிளையாடல்களுக்கு இந்த வாடி வீட்டு நிர்வாகியின் உதவி நன்ருகக் கிடைக்கிறதாம். அதனலேதான் அங்கு கசிப்பு வியாபாரம் பகிரங்கமாக நடைபெறுகிறது என்ற சந்தேகம் ஊர்ஜிதமாகிறது.

இவ்வாடி வீட்டுக்கு அருகாமையிலுள்ள பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த அதிகாரிகள் சிலரும் கூட இவ்வாடி வீட்டின் 'வாடிக்கைக்காரர்கள்'தான். ஆகவே அங்கு நடைபெறும் சட்டவிரோதச் செயல்கள்யாவும் சட்டமாகின்றன.

★

பொங்கல் விழா சிறப்பாக எங்கும் நடைபெற்றது. வீட்டுக்கு வீடு பொங்கி, இன்சுவையுடன் உண்டு மகிழ்ந்தார்கள் பலர். பால் பொங்கியது போல வருங்கால வாழ்வும் பொங்க வேண்டும் என்று எல்லோரும் வேண்டிக் கொண்டிருப்பார்கள்.

மட்டக்களப்பு பகுதியில் ஒரு இடத்தில் பொங்கல் விழா நடைபெற்றது. இளம் விவசாயிகள் கூடியே இந்த விழாவை ஏற்பாடு செய்தனராம். இந்த விழாவில் ஒரு மதப் புலவர் பேசினுர். பொங்கல் விழாவில் பேசிய அந்தப் புலவர் பெருந்தகை, 'தமிழர்கள் ஒவ்வொருவருடைய வாழ்வும் சிறக்க வேண்டுமென்ருல், சிங்களம் கட்டாயம் படிக்கவேண்டும்' என்று திருவாய் மலர்ந்தருளினுராம்.

ஆளும் கட்சியாளர்களின் அடிவருடிகளுக்குப் பந்தம் பிடித்து தனது இடமாற்றத்திற்கு வழிதேடி அலையும் இவர் போன்ருேர் இப்புனித பொங்கல் நன்னுளில் விஷமப் பிரசாரம் செய்வதில் ஏதாவது நன்மை காணப் போகின்றனரா?

★

ஒரு பாராளுமன்ற உறுப்பினர்—சுய விளம்பரத்திற் பிரசித்தி பெற்றவர்—புது முறையில் விளம்பரம் தேட முனைந்துள்ளாராம். வியாபார வர்த்தக ஸ்தாபனங்கள் விளம்பரத்திற்காக ஆண்டுதோறும் நாள்காட்டிகளை (கலண்டர்) அச்சிட்டு வெளியிடுவதுண்டு. இதே போன்று இந்த பாராளுமன்ற உறுப்பினரும் தமது நிழலுருவம் பொறித்த கலண்டரை வெளியிட்டுள்ளாராம்.

வர்த்தக ஸ்தாபனங்கள் தாங்கள் அச்சிடும் கலண்டர்களை இலவசமாகவே விநியோகிப்பதுண்டு. ஆனல் இந்த எம். பி. தனது புகைப்படம் பொறித்த கலண்டரை விற்பனை செய்யத்திட்டமிட்டுள்ளாராம். தமது ஆதரவாளர்களிடமும், தம்மிடம் உதவிகள் கோரி வருபவரிடமும் ஒவ்வொரு கலண்டரையும் ரூ. 2-00க்கு விற்று விடுகிருராம். இந்த விசித்திர விளம்பர—வியாபாரத் திட்டத்தைக் கண்ணுற்ற பலர் மூக்கின் மேல் விரலை வைத்து ஆச்சரியப் படுகின்றனராம்.

இந்தியா செல்ல 'விசா', 'பாஸ்போட்' பெறுவோர் கூட்டமும் இந்த எம். பியின் இல்லத்தில் தினசரி பலமணி நேரம் காத்துக் கிடக்க நேரிகிறதாம்.

'விசா', 'பாஸ்போட்' முதலியவற்றை வழங்குவதில் இந்த எம். பி. காட்டும் கருணைப் பெருக்கு அகில இலங்கையிலும் பிரசித்தமாகியதன் காரணமாக தினசரி சம்பந்தப்பட்டவர்களின் படையெடுப்பு அதிகமாகிக் கொண்டே வருகிறதாம்.

ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் அச்சு வேலைகள் எவையாக இருந்தாலும் சரி— அவை கவர்ச்சிகரமாகவும் உங்களுக்குத் திருப்தி அளிக்கும் முறையிலும் செய்து தரப்படும்.

பாடப் புத்தகங்கள், மலர் வெளியீடுகள், சஞ்சிகைகள், துண்டுப் பிரசுரங்கள், அழைப்பிதழ்கள், வர்த்தக ஸ்தாபனங்களுக்குரிய சகல வேலைகள் யாவும் கச்சிதமாகத் தயாரிக்கப்பட வேண்டும் என்று விரும்புபவர்களுக்கு இதே அதற்கு உரிய இடம்:

**சுதந்திரன் அச்சகம்,**

தபால் பெட்டி 1183.
194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த,
கொழும்பு-12.

தந்தி : சுதந்திரன் — போன் : 3411

## கவிதைப் பூங்கா

# பொங்கல் பொருள்..!

—'சுபத்திரா'—

பொங்குநீ மகிழ்விேைடு
  புதைகுழி போகுமட்டும்
இங்குநீ வாழ்ந்திருந்து
  அளந்திடும் வருடமெல்லா
ஆண்டொரு நாளில் வந்து
  அழகுற உனது வாழ்வின்
தாண்டவ முடிவைக் கூறும்
  தத்துவப் பொங்கல் பூசை

பொங்கிடக் குத்தும் பச்சை
  அரிசியும் ஒருநாள் இங்கு,
தங்கிட வந்த ஆவி
  தனியாக உடலை விட்டுப்
பிரிந்தபின் சவத்தின் வாயில்
  பிடியரிசிடவும் கூடும்.
அரிக்கத்தில் ஆடி வந்தாள்
  பொங்கலாகிடவும் கூடும்

பொங்குதற் கெடுத்த பானை
  பொங்கலுக் குதவும் வேளை
அங்கொரு சவம் விழுந்தால்
  அமுதாக்க எடுத்த பானை
சவத்துக்குக் குடமுடைக்க
  சுமந்தவர் சுடலை செல்வார்
அவனியில் இருந்த போது
  சோறிட்ட பானையந்தோ!

முற்றத்தில் கோல மிட்டு
  மூக்கனி பாலும் வைத்து
அற்புதப் பொங்கல் செய்ய
  அடுப்பினை மூட்டுதற்கு
விறகிலே நெருப்பு ஏற்றி
  விழாவது எடுக்கும் வேளை
இறப்பேதும் நிகழ்ந்து விட்டால்
  இவையெல்லாம் பிணமெரிக்கும்.

விழாவது எடுக்கும் வேளை
  வீதியில் பறையொலிக்கும்
இழவேதும் விழுந்து விட்டால்
  அவையெல்லாம் துயரொலிக்கும்
பொங்கலுக் கெடுத்த பூக்கள்
  பிணத்துக்கு அழகு செய்யும்
பொங்கலின் தோரணங்கள்
  பிணத்துக்குப் பாடைசெய்யும்

புத்தாடை வாங்கிவைப்பார்
  பொங்கலுக் குடுப்பதற்கு
செத்தாலும் புதிய சோடி
  சேலைதான உடுத்துவைப்பார்
பொங்கிட மென்றுவைத்த
  புதுநீரைப் பிணத்திலூற்றி
அங்கவர் கத்திப்பாடி
  அழுங்கண்ணீர் பொங்குதம்மா!




# ஒரு கொடிக் கீழ் தமிழ் மக்கள் ஒன்று சேர வேண்டும்

மலையக மக்களின் நலிவைப் போக்கி நல்வாழ்வளிக்க நாளெல்லாம் தொழிற்சங்கங்கள் உழைக்கின்றன. ஆனால் நாள்தோறும் உழைக்கும் உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கிடைக்கவில்லை என்ற முழக்கத்தை தான் இதுவரை அப்பெருஞ் சங்கங்கள் முழங்கி வந்திருக்கின்றனவே தவிர தமிழர் பண்பாடு உயர, கலைவளர, வாழ்க்கைத் தரம் ஓங்க, எதை மலையகத்து மக்கள் கடைப்பிடிக்க வேண்டும், எப்படி ஒழுக வேண்டும் என்ற போதனைகளை அச்சங்கங்கள் போதிக்க இதுவரை முன் வரவில்லை.

மலையகத்து மக்களில் கட்டிய உடை கந்தலானாலும் கசக்கிக் கட்டி, சுகாதார முறையோடு சுக ஜீவியாக வாழ வழி என்ன என்பதை இதுவரை அவர்களுக்குக்கற்றுக் கொடுக்கவில்லை.

சம்பள உயர்வைப் பற்றி மேடை ஏறிக் கூறும் அவர்கள் சரிந்த அவர்களின் வாழ்வைச் சரிப்படுத்த மலையகத்து மக்களுக்கு வழி கூறவில்லை.

தொழிற் சங்கங்கள் தொழில் முறையின் பின்னணியிலே மலையகத்தில் வலம் வந்து கொண்டிருக்கின்றன. தமிழ்ப் பண்பாடுடன் தன் இனங்காக்க தன் உரிமையைப் பெற்று தலை நிமிர்ந்து வாழ வழி காண உழைக்கும் தமிழரசுக் கட்சி, மலையகத்தில் சீர்திருத்தக் கட்சியாக

**தமிழ்ப்பித்தன்**

விளங்கி, மக்களின் சீரழிந்த வாழ்வை நேர் சீராக்கினால் அதுவே சிறந்ததாகும்.

### ஒரேயொரு கட்சிதான்

தமிழரசுக் கட்சி மலையகத்தில் ஓர் சீர்திருத்தக் கட்சியாக விளங்கினால் யாழ்ப்பாண மக்களுடன் மலையகத்து மக்களும் சமத்துவம் கண்டு வாழலாம். இதனால் தமிழினமே ஒன்றுகி காலப் போக்கில் இலங்கையின் சிறுபான்மையினரான தமிழர்களுக்கு 'ஒரே ஒரு கட்சிதான்' என்றுகி உரிமை கொண்டு உளமகிழ்ந்து வாழலாம்.

இன்று கல்வித் தரத்தில் உயர்ந்த யாழ்நகர் மலையகத்தோடு இணைந்து, மட்டு நகருடன் திருகோணமலையோடு கூடினால் கல்வித்தரம் எப்பகுதியிலும் வளர்ந்து அறிவொளி தமிழினத்தில் பரவி, எண்ணற்ற எழுத்தாளர்கள் தோன்றி எழுதிக் குவிக்கும் எண்ணக் குவியல்களால் மறுமலர்ச்சி பெற்ற தமிழினம் விழிப்புணர்ச்சியால் உந்தப்பட்டு, ஒரு விடுதலை இயக்கமாக விளங்கி தமிழினத்தைக் கட்டியவர்களை—சட்டத்தால் சஞ்சலப் படுத்தி வருபவர்களை—தம்

(13-ம் பக்கம் பார்க்க)

# பொங்குக இன்பம் தங்குக உரிமை என்றும்

—கே. நடராஜ், கண்டி—

பத்துணைக் காலம்தான் பதவிப்பித்தர்களின், பாராளுமன்ற பக்தர்களின் பகல் வேஷக்காரர்களின் பகடுகளில் பல்லாயிரம் மக்கள் மயங்குவார்கள். பாட்டாளியின் தோழன், தொழிலாளர்களின் தொண்டன் இப்படியாகப் போற்றி வந்த மலை மக்கள் இன்று மாறிவிட்டார்கள்.

ஆமாம், பகலிரவாய்ப் பாடுபடும் பண்புள்ள தொழிலாளிகளின் துயர் துடைக்க இரத்த வியர்வை சிந்தும் இந்தியத் தொழில் மக்களின் துன்பங்களைத் துடைக்க, பொங்கும் பொங்கலின் இன்பம் பெறும் எம்மைமென் மேலும் இலங்கை தொழிற் கழகம் இன்பக் கடலில் ஆழ்த்த வீறு நடைபோட்டுபுறப்பட்டுவிட்டது.

தமிழ் மக்களே! தைப் பொங்கலில் புத்துணர்ச்சி பெறும் தோட்டத் தொழிலாளிகளே! இத்துணைக்காலமும் துன்பம் பட்டதை மறந்து விடுங்கள். சுய நலக் கும்பலை, சோம்பேறிக் கூட்டத்தை மறந்து விடுங்கள். பாவமன்னிப்புக் கொடுத்து விடுங்கள்!

இலங்கைத் தமிழர்களெல்லாம் ஒன்று சேர்வோம், உரிமையைப் பெறுவோம்.

இந்த 63-ம் ஆண்டு பொங்கல் எங்களின் இதயத்தில் தமிழ் உணர்ச்சியையும், விடுதலை வேட்கையையும் ஊட்டிவிட்டுள்ளது. இதற்கு காரணம் இலங்கைத் தொழிற் கழகம் என்பது உள்ளங்கை நெல்லிக் கனி.

மலைநாட்டு மக்கள்வெற்றி வீரர்களாக, உரிமை உள்ளவர்களாக, இருக்க வேண்டும் என்னும் நோக்கத்துடன் எழுந்த இக் கழகம் எம்மை—தோட்டத் தமிழ் மக்களை ஏமாற்ருது, எம்மத்தியிலே எத்துணைப்பிரச்சினை உண்டோ அத்துணைக்கும் முடிவு காணும் என்பதில் ஐயமில்லை.

(13-ம் பக்கங் பார்க்க)

# வெற்றி நிச்சயம்

(தமிழோவியன்)

காட்டு மிருகமாய்(த்) தோட்டத்து மக்களைக்
கருதிடுங் கூட்டங்களே!—உங்கள்
கோட்டையை நொறுக்கிடும் வேட்டுகள் வைத்திடக்
குமுறி எழுந்தனர் பார்!

மேடையில் தொண்டராய் நாடக மாடியே
மேதினி சுற்று வோரே!—உங்கள்
வேடங் கலைந்து ஓடவேத் துரத்திடும்
வேளையும் வந்ததைப் பார்!

நாட்டின் வளர்ச்சிக்குத் தேட்ட மளித்தவர்
நாடற்றவ ராவதுண்டோ?—அவர்
வீட்டை யிழந்தும் வாட்ட மடைந்தும்
வீதியில் சாவதுண் டோ?

தோட்டங்கள் செழிப்பதில் நாட்டங்கள் கொண்டு
தொல்லைக ளேற்றோரை—அனுதைக்
கூட்டங்களாய் யெண்ணி ஓட்ட நினைத்திடும்
கொடுமைகள் சகிப்ப துண்டோ?

செங்கதிர் அறிந்திடும் எங்கள் தமிழினம்
செந்நீர் வடித்த கதை—அதை
எங்கணும் சொல்லியே பொங்கி எழுந்ததே(தே)
எங்கள் இளைஞர் படை!

திங்க ளறிந்திடும் மங்கை தமிழ்க்குலம்
திண்டாடி மடிந்த கதை—அவர்கள்
தங்கள் துணைவர்கள் இங்கடைந்த வதைத்
தரணி அறியு மதை!

பிஞ்சுக் குழந்தைகட்கும் கஞ்சி கொடுக்காமல்
பெரும்பாடு பட்டவர்கள்!—அன்னோர்
நெஞ்சங் கொதித்தெழு மிஞ்சிடும் வேதனை
நிம்மதி யழிக்குமடா!

நெஞ்ச மறிந்திட வஞ்சக மின்றியே
நித்தலு முழைத்தவர்கள்—அந்த
வஞ்சியர் கரங்கள் கொஞ்ச மாடாவிடில்
வாடுவர் நாட்டு மக்கள்!

தஞ்ச மடைந்த தால் நெஞ்ச முடைந்தவர்
தலைகள் குனியு மடா!—நாம்
வெஞ்சினங் கொண்டினி துஞ்சுதல் விடுத்தே
வீறிட்டு எழுவோமடா!

அஞ்சி யடங்கியே கெஞ்சிப் பிழைத்திடும்
ஆசையோ நமக்கில்லை!—இனி
நெஞ்சம் துணிந்தவர் கொஞ்சமு மடங்கிடோம்
நிச்சயம் வெற்றி யடா!

# வேற்றுமைகள் மறந்து ஒற்றுமையை வளர்ப்போம்

—(வீ. தர்மலிங்கம், கொட்டகலை)—

வேற்றுமைகளை மறந்து ஒற்றுமையுடன் ஒரு கொடியின்கீழ் ஒன்றுகூடிப் போராடினால், நாம இழந்த உரிமைகளைப் பெற முடியும். இதை ஒவ்வொரு தொழிலாளரும் உணரவேண்டியது அவசியமாகும்.

ஈழ நாட்டின் முதுகெலும்பாய்த் திகழும் தோட்டத் தொழிலாளர் பெருங்குடி மக்கள் இன்று உரிமைகளை இழந்து பல இன்னல்களுக்குள் ஆளாக்கப்படும் வேதனையை இந்நாட்டில் நல்ன் கருதும் எவரும் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியாது.

காடுகளை அழித்து ஈழத்தை செழிப்பான நாடாக்கிய சிறப்பையும் பொறுப்பையும் ஏற்றவர்கள் இலங்கைத் தோட்டத் தொழிலாளர்களே. இவர்களுக்கு இன்று நேர்ந்துள்ள கதி சொல்லுந் தரமன்று, எழுதும் தரமன்று.

யாரோ ஒரு சில இனவிரோதிகள் 1947-ம் ஆண்டு முதல் மனித உரிமைகளைப் பறிக்கும் சட்டத்தை பிறப்பித்தார்கள்.

இனத் துரோகிகளால் இனி எதுவுமே செய்ய முடியாது, ஆனல் அவர்களையே வாழ வைக்கும் வேறு சில இனத் துரோகிகளும் இன்னும் நம்மிடையே நடமாடுகின்றனர்.

தமிழ் மொழியும் இனமும் தவிக்கிறது. அம் மொழி பேசும், அந்த இனத்தைச் சேர்ந்த சில அரசியல் அப்பாவிகள் அந்த தன்னிகரற்ற இனத்தையும் மொழியையும் காட்டிக் கொடுத்துவிட்டனர். அவர்களுக்கு காலம் தந்த பாடம், கற்றவர் எவரும் மறுக்கமாட்டார், பிறந்த வீட்டின் பெருமையை மறந்தவன், பெற்ற சுதந்திரத்தை எங்ஙனம் பேணிக் காப்பான்?

சுதந்திரநாட்டின் சோர்வு அகற்றி நீர் தந்து வாழ்வளிக்கும் மலையகத்து மக்களை மறந்தும் வெறுத்தும் எந்த அரசும் ஆட்சி புரிந்தால் அது பூண்டோடு அழியும் என்பது உண்மையிலும் உண்மை!

## அ. எ. வி. ச. மூன்ருவது வழக்கு

சிங்கள மொழித் தேர்வில் சித்தியடையாதவர்களுக்கு சம்பள உயர்வு கொடுக்கப் படாததை ஆட்சேபித்து அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் சார்பில் தொடரப்பட்ட மூன்ருவது வழக்குக்கு இம்மாதம் 25-ம்திகதி அட்டோர்ணி ஜெனரல் மறுமொழி தாக்கல் செய்யப் பட வேண்டுமென கோர்ட்டால் கேட்கப்பட்டுள்ளார்.

இந்த வழக்கை சங்கச் செயற்குழு உறுப்பினர் திரு. கோமலேஸ்வரன் தாக்கல் செய்துள்ளார். மனுதாரின் சார்பில் திரு. எம். திருச்செல்வம் கியூ. சி, வழக்கறிஞர்கள் திருவாளர்கள் ஜீ. ரி. சமரவிக்கிரமா, சி. ரங்கநாதன், எஸ். சர்வானந்தா, ஆர். ஊரசியான் பெரேரா ஆகியோர் தெரிபடுவர் எனத் தெரிகிறது.

இந்த வழக்கையும், ஏனைய இரு வழக்குகளையும் வெற்றிகரமாக நடத்துதற்கு வேண்டிய பொருளைத் திரட்டுவதில் சங்கம் மும்முரமாக ஈடுபட்டுள்ளது. தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களின் சட்டபூர்வமான உரிமைகளுக்காக நடைபெறும் இவ்வழக்குகளுக்கு தமிழ் பேசும் மக்களின் பொருளுதவி என்றும் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

ஆகவே பாட்டாளி வர்க்கமே! பட்டொளி வீசிப்பறக்கும் மூவர்ணக் கொடியின் கீழ் ஒன்று கூடி, முத்தமிழ் பெருமையும், மூத்த நம் தமிழ் குலப் பெருமையும் முழங்கிட ஒன்று கூடுவீர்!

நமக்கென நாளையும் போராடப்போகும் இலங்கைத் தமிழரசுத் தொழிலாளர் கழகம் அனைவரையும் அழைக்கிறது, ஆதரவு காட்டுங்கள், அகிம்சை வெல்லும். ஆனல் ஒன்று. மாற்றுக் கட்சியினர் மயக்கு மொழிகளால் மீண்டும் மயங்கிச் செயல் மறக்காதீர்!!

**கைவசமுள்ளது**

செம்புத் தகட்டுடன் பூரணமான, என்ஜின் இணைக்கப் பெருத, எஸ்லாண்டர் செய்கை முறையுடன் கூடிய புத்தம் புதிய

**மீன்பிடிப் படகுகள்**

ஒன்றின் விலை ரூ. 8000/-

மற்றும்:-

**நைலோன் மீன்பிடி வலைகள்**

(எல்லா அளவுகளிலும்)

**மீன்பிடி தூண்டில்கள்**

**நேறு லாங் லைன்கள்**

இன்னும் பிற மீன்பிடி உபகரணங்களுக்கு:-

தொடர்பு கொள்ளுங்கள்:-

**ஜபர்ஜி பிரதர்ஸ்,**

161, குமார வீதி,
கொழும்பு-11.

போன்: 78501.

# நாடு இன்றுள்ள நெருக்கடி நிலையில்
## பேச்சைவிட அமைதியேதேவை

# மதுரையில் தி. மு. க. தலைவர் அண்ணாத்துரை பேச்சு

**நாம்** எடுத்திருக்கின்ற முயற்சி ஒரு கட்சிக்காக, அல்ல; ஒரு நாட்டுக்காக இந்த முயற்சியை எடுத்திருக்கிறோம். எனவே நம்மைப் பற்றிக் காங்கிரசு என்ன சொல்கிறதென்று நாம் கவலைப்பட வேண்டாம். நாம் செய்கின்ற முயற்சிகளுக்கு காங்கிரஸ்காரர்கள் நன்றி காட்டுவார்கள் என்று எதிர்பார்த்தால் அது நம் மனப் பாங்கைக் காட்டுவதாகாது.

நாட்டில் நிலவ வேண்டிய அமைதியைக் குலைக்கும் வண்ணம் பலர் நமது கவனத்தை வேறு திசையில் திருப்ப நினைக்கிறார்கள்; மற்ற பிரச்னைகளை இப்போது கவனிக்கக் கூடாது என்பது தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் எண்ணம் ஆகும். இதற்காக கேட்கப்படும் கேள்விகளுக்கு திராவிட முன்னேற்றக் கழகத்திடம் பதிலில்லை என்று யாரேனும் கருதுவார்களேயானால் அவர்கள் இறுதியில் ஏமாந்துதான் போவார்கள் என்பதை இக் கூட்டத்தின் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா அவர்கள் மதுரையில் நாட்டுப் பாதுகாப்பு நிதியளிப்புக் கூட்டத்திலும், தியாகி பொற் செழியன் நினைவு மன்றக் கூட்டத்திலும் கலந்து உரை நிகழ்த்துகையில் கூறினார்.

நாடு இப்பொழுதுள்ள நிலையில், பேச்சை விட அமைதியே அதிகம் தேவை. அதிலும் நாட்டை நோக்கிப் பேராபத்தும் நெருக்கடியும் சூழ்ந்து கொண்டிருக்கின்ற இந்த நிலையில், பேச்சைக் குறைத்து செயலைப்பெருக்க வேண்டுமென்று பெரிதாகப் பேசி வருகிறார்கள் சிலர். ஆனால் என்னைப் பொறுத்த வரையில், போர் ஆரம்பித்த பிறகு குறைவாகவேதான் பேசி வருகிறேன்.

நாட்டில் நிலவவேண்டிய அமைதியைக் குலைக்கும் வண்ணம் பலர் பிறர் கவனத்தைத் திருப்பப் பார்க்கிறார்கள். மற்றப் பிரச்சினைகளை இப்போது கவனிக்கக் கூடாது என்பதுதான் தி.மு. கழக எண்ணமாகும்.

### மக்கள் பிரச்சினை நாம் அறிவோம்

ஆனால் இதற்காகக் கேட்கப்பட்ட கேள்விக்கு தி. மு. கழகத்திடம் பதிலில்லை என்று யாரேனும் எண்ணினால் அவர்கள் இறுதியில் ஏமாந்து போவார்கள்.

குழந்தை அழுதால் பிறர் 'ஏன் இது இப்படி அழுது தொலைகிறது?' என்பர். தாய்க்குத்தான் அழுகையின் காரணம் தெரியும். தாயாக உள்ள தி. மு. கழகம்தான் விலைவாசி உயர்வுக் கொடுமையை-மக்கள் துன்பத்தை—உணர்ந்து, கண்டித்துச் சிறை புகுந்தது. தியாகம் செய்தது. அதனால் நம் தோழர்கள் சிறையில் வாடிக் கொண்டிருக்கையில் தான், சிறையில் சரியாகக் கவனிக்கப்படாத நம் தோழர் பொற்செழியன் இறக்க நேரிட்டது.

### எவர் முடிவானாலும் கவலையில்லை

நாம் காங்கிரசுக் கட்சியின் நன்றியறிதலைப் பெற்றாக வேண்டுமென்பதில்லை. நாம் காங்கிரசுக்காரர்களின் நன்றியை எதிர்பார்த்திருந்தால், கடந்த தேர்தலில் காமராசரைப் பெரியாரை விட வேகமாக ஆதரித்திருக்கலாம், அப்படிச் செய்திருந்தால் நம்மைக் கண்டவுடன் காங்கிரசுக்காரர்களும் வரவேற்பார்கள்.

ஆனால் நாம் எப்போதும் நன்றியை எதிர்பார்த்துச் செயல்படவில்லை. எனவே, அது கன்னியாகுமரி முடிவானாலும் சரி, காசி முடிவானாலும்சரி-அதைப் பற்றி நாம் ஏன் கவலைப்பட வேண்டும்?

### வரலாற்றில் நாம் நிலைப்போம்

நாம் வரலாற்றிலேதான் நன்றியறிதலை எதிர்பார்க்கிறோம்; வந்து போகும் அமைச்சர்களிடமிருந்தல்ல!

இன்றைய தினம் காங்கிரசுக்காரர்கள் நம்மைப் பாராட்டினாலும், நாளைய தினம் அவர்கள் நம்மிடம் வம்புக்கு வரலாம்.

எனவே, நிரந்தரமற்ற பாராட்டை—நன்றியறிதலை எதிர்பாராதீர்கள்! காலத்தின் பாராட்டை எதிர்பாருங்கள்!

### நாட்டின்நிலையை நன்றாக உணர்ந்துள்ளோம்

நாட்டிற்கு ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடியையும் பேராபத்தையும் உணர்ந்த தி. மு. கழகம் அந்த நிலையை மாற்ற ஓரளவாகிலும், தான் உதவ வேண்டும் என்று தான் இந்தப் பாதுகாப்பு நிதி நிகழ்ச்சிக் கூட்டத்தை ஏற்பாடு செய்திருக்கிறது.

போர்ச் செலவுகளுக்கு எவ்வளவு தேவைப்படுகின்றதென்று நம் நாவலர் அவர்கள் சொன்னார்கள். நாம் சேர்த்துக் கொடுக்கின்ற சில பல ரூபாய்கள், போருக்குத் தேவைப்படுகின்ற பெருந் தொகையை நிறைவு செய்து விடுமென்பதில்லை. இந்திய அரசின் முயற்சிகளுக்கு நாம் தருகின்ற ஒத்துழைப்பைக் காட்டுவதற்காகத்தான் இது போன்ற கூட்டங்களை நடத்துகிறோம்.

### நமது ஆதரவு சர்க்காருக்கே

இந்திய அரசின் போர் முயற்சிகளுக்காக நாம் இவ்வளவு கஷ்டப்பட்டும் கூடக் காங்கிரசுக்கட்சி நம்மீது கசப்புக் காட்டுகிறதென்று சொன்னார்கள் — இங்கே பேசிய நண்பர்கள். நாம் காட்டும் ஆதரவு தனிப்பட்ட ஒரு காங்கிரசுக் கட்சிக்கில்லை; ஒரு சர்க்காருக்குத்தான் ஆதரவு காட்டுகிறோம். எனவே காங்கிரசுக் கட்சியார் கூறுவது பற்றிக் கவலைப்படவேண்டியதில்லை.

### நமது விரதம்

இன்று ஏகாதசி விரதம் என்பதை நீங்களறிவீர்கள். பரமபதம் அடைய வேண்டுமென்றால் இன்று முழுப் பட்டினி இருக்க வேண்டும் என்று வைதிகர்கள் சொல்வதை நீங்கள் கேட்டிருப்பீர்கள். யாராவது பார்க்காத நேரத்தில்—பசி தாங்க முடியாது—இரண்டு இட்டலியை பிட்டுப் போட்டுவிட்டால் பரமபதம் கிடைக்காது.

இன்று நமது கழகத்திற்குப் பட்டினி இருக்க வேண்டிய நிலை; நன்றியை எதிர்பாராது உழைக்க வேண்டிய நாள்.

ஏகாதசிக்குப் பின் துவாதசி வரும்; அன்று சுவையான விருந்து கிடைக்கும்; இன்று கழகத் தோழர்களாகிய நாம் பட்டினி கிடந்தால், நாளை நாம் நிச்சயம் வெற்றி விருந்து உண்போம்.

இப்படி நாம் தற்போதைக்கு நம் காரியங்களை ஒதுக்கி வைத்து விடுவதால், கட்சி வளர்ச்சி கெட்டு விடும் என்று யாரும் எண்ண வேண்டாம்.

'லால்பகதூர்சாஸ்திரி காரமான சட்டினி தருகிறாரே என்பதற்காக, சாஸ்திரியார் தரும் காரச் சட்டினியை விட்டு விடுவதா?' என்று கருதி, யாரும், தெரியாமல் இரண்டு இட்டிலியை பிட்டுப் போட்டு விடாதீர்கள்; பின் விரதம் முறிந்துவிடும்.




# ரிஷி
# அஜமாமிச லேகியம்

ஆட்டிறைச்சியின் சுத்தமான சத்துக்களோடு பல விலை உயர்ந்த மூலிகைகளையும் சேர்த்து தயாரிக்கப்பட்ட சிறந்த லேகியம். இதை பாவித்து வந்தால் தேக புஷ்டியும், வீரியமும், திடகாத்திரமும், கெம்பீர தோற்றமும் உண்டாகி சரீரத்தில் உள்ள சகல வியாதிகளையும் சூரியனைக் கண்ட பனிபோல மறைத்து விடும். ஆண், பெண் இருபாலரும் சாப்பிட உகந்தது. இல்லற வாழ்க்கைக்கு இன்றியமையாதது. பத்தியமில்லை.

விலை 1 ருத்தல் ரூபா 35/00
" ½ " ரூபா 22/50

[தபாற் செலவு 95 சதம்]

ஆயுர்வேத டாக்டர்:
**T. H. மதுரநாயகம் வைத்தியராஜ்**
**ஞானசுந்தர வைத்தியசாலை,**
187, செட்டியார் தெரு, கொழும்பு.


# மக்கள் குரல்

### சாகித்திய மண்டலமும் திரு. சதாசிவமும்

சாகித்திய மண்டல உறுப்பினராய கலாநிதி சதாசிவம் அவர்களின் 'சாகித்திய மண்டலமும் தமிழ் இலக்கிய வளர்ச்சியும்' என்ற ஒரு கட்டுரை— தினசரிப் பத்திரிகைகளில் வெளியாகியிருந்தன.

தமிழனியல்பு யாது? இலக்கியமென்றால் என்ன? சங்கச் சான்றோர்கள் ஆராய்ந்தது தமிழா, தமிழ் இலக்கியமா? இலக்கியமென்ற வார்த்தை எப்பொழுதெழுந்தது? அதன் விசேட இயல்புயாது? என வினவுவாக்கு அக்கட்டுரையில் விடை கிடைப்பது அரிது எனினும் இலக்கியமென்றெடுத்துக் கொண்டு சுவபக்கமும் பரபக்கமுமாகச் சில கருத்துக்கள் வெளிவந்திருக்கின்றன. அக்கருத்துக்கள் பெரிதும் கலக்கம் விளைக்கின்றன. அன்றி, சுவபக்கத்தினும் பரபக்கமே மேலானது என்ற கருத்தையும் அக்கட்டுரை தரலாம் போலும். இங்கே பரபக்கம் பொதுவுடைமைக் கொள்கை.

கட்டுரையில் இருபக்கங்கள் பற்றியும் வருங்கருத்துக்களில் உயிரான சிலகருத்துக்கள் வருமாறு:—

(1) "புலவன் தான் விரும்பிய பொருளில் இலக்கியத்தைப் படைக்கலாம்".

(2) "கருத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பது தப்பு".

(3) "கருத்தில் எமக்கு ஈடுபாடு இல்லாவிட்டாற் கூட அவனது இலக்கியத்தை நாம் இரசிக்க முடியும்".

இனிப்பரபக்கம்:—

(1) "இலக்கியத்தின் கருத்து முக்கியமானது, அதன் உருவம் முக்கியமற்றது என்ற கருத்தைச் சில முற்போக்கு வாதிகள் இளம் எழுத்தாளர் களிடையே பரப்பிவிட்டனர்".

(2) 'சமுதாயத்தை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு இலக்கியம் எழ வேண்டும் என்றும் இலக்கியத்திற்கு நோக்கம் மிக முக்கியமானது என்றும் பிரசாரம் செய்தனர்".

(3) "பொதுவுடைமைக் கருத்தே இலக்கியப் பொருளாக வேணமென்பது தப்பு".

(4) "இலக்கியத்துக்குக் கருத்து முக்கியமென்போர் இலக்கியத்தை ஒரு பிரசாரக் கருவியாக்குகின்றனர்".

கட்டுரையாற் கலக்கந் தரும் கருத்துக்கள் வேறும் பல. இவ்வளவில் இருக்கட்டும்.

சுவபக்கத்தாரின் பிரசார விழாக்கள் கால்கோள் கொள்ளுகின்றன.

"பல்வகைத் தாதுவின் உயிர்க்குடல் போற் பல, சொல்லாற் பொருட்கிடனாகி" என்ற நன்னூற் சூத்திரம் பிரசித்தமானது.

கருத்து முக்கியம் என்பதைச் சாகித்திய மண்டல மன்றி உலகத்திலெந்த மண்டலந்தானும் மறுக்குமோ என்பது சிந்திக்கத்தக்கது.

கருத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பது தப்பு. விரும்பிய பொருளில் இலக்கியம் படைக்கலாம். கருத்தை விலகியும் இரசனை உண்டு என்பவர்களின் திருவிழா, கருத்துடை விழாவாகுமோ என்பதை கருதுங் கருத்துடையோர் கருத்திற் பதிப்பராக.

விரும்பிய பொருளில் இலக்கியம் படைக்கலாம் என்போர், ஒரு பகுதியாரிற் பாய்வதேனோ!

சுவபக்கத்தாரின் இலக்கியப் பிரசாரம் எதற்குங் கருவியாகாது போலும்.

"யாழ் நாட்டுத்தமிழன்"
சுன்னாகம்.

---

(யாழ்ப்பாணத்திற்கு அண்மையில் விஜயம் செய்தஇரு மந்திரிகளுக்கும் எதிர்ப்புக் காட்டுமுகமாக நடைபெற்ற அமைதியான ஆர்ப்பாட்டத்தின்போது பொலிசார் நடந்து கொண்ட விதம் அருவருக்கத்தக்கதாகும். பொலிசாரின் செயலும், உண்மையில் நடந்ததைத் திரித்துக் கூறிய தினசரி ஒன்றின் நடத்தையும், தமிழ் பேசும் மக்களுக்கு ஆத்திரத்தை ஊட்டியுள்ளன. இதற்குச் சான்றாக எமக்குப் பல அன்பர்களிடமிருந்தும் கடிதங்கள் வந்து குவிகின்றன. அவற்றுள் ஒரு சிலவற்றை இங்கு பிரசுரித்துள்ளோம். —ஆ-ர்.)

### சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்

மந்திரிமாரின் வருகையை எதிர்த்து வடக்கில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்களையும், பாராளுமன்ற அங்கத்தவர்களையும் பொலிசார் தாக்கிய செயல், ஒழுங்கற்றதும், சட்ட விரோதமானதுமாகும்.

இந்தக்கடுமையான தவறு தலைப் பாராளுமன்றமும், பொது மக்களும தமது கவனத்துக்கெடுத்து, நடைபெற்ற தவற்றுக்கான பரிகாரம தேடுவதுடன், இவ்வித சம்பவங்கள் இனிமேலும் நடைபெறாத வண்ணம் தடுக்க வேண்டும்.

இவ்விஷயத்தில் எவ்வித தாமதமுமின்றி செயற்பட வேண்டிய தனிப் பொறுப்பு அரசாங்கத்தையும், எல்லா அரசியற் கட்சிகளையும் சார்ந்துள்ளது.

அத்துடன், தேவையான சட்ட நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்படுமென நம்புகிறோம் இது அவசியமும் அவசரமானதும் மட்டுமல்ல; உடனடியாகச் செய்யப்பட வேண்டியதாகும்.

எஸ். சிவசுப்பிரமணியம்,
103/2, ஹல்ஸ்டோர்ப் வீதி,
கொழும்பு-12.

---

### நெஞ்சு பொறுக்குதில்லையே

தமிழ் சமுதாயத்தையே அடிமைகளாக்கி அழித்து, ஒழித்துக்கட்ட கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் தீவிரவாதிகளான சில மந்திரிகளுக்கு தன்மானமிழந்த காக்கை வன்னியர் கூட்டத்தைச் சேர்ந்த சில அடிவருடிகள் வேண்டுமென்றே வரவேற்பளித்து எம்மவர்களுக்கே அடி, உதை வாங்கிக் கொடுப்பதை நினைத்து நெஞ்சு பொறுக்காமல இரத்தக் கண்ணீர் சிந்துகிறேன்.

ஐயோ! என்ன கொடுமை! அடிவருடிகளே, துரோகிகளே! உங்கள் கண்ணுக்கு முன்னாலேயே உங்கள் சகோதரர்களையும், சகோதரிகளையும் மானபங்கம் செய்து,

(11-ம் பக்கம் பார்க்க)

இலக்கியம்:

# நோக்கினாள் - நோக்கி இறைஞ்சினாள்!

— தேனீ —

நான் பார்க்காதபோது அவள் பார்த்தாள். நேரில் பார்க்க அவளுக்கு நாணம் போலும்!

சரிதான்—நேரிலே பார்க்க நாணமுற்றவள், நான் பார்க்காத போது, பார்த்து விட்டும் பிறகு ஏன் நாணித் தலை குனிய வேண்டும்?

அதற்கும் காரணம் இருக்கத்தான் செய்கிறது!

அது என்ன?

அவள் என்னைப் பார்த்ததும், அவளுக்கு எமது அன்புப் புணர்ச்சியின் குறிப்புத் தென்பட்டது.

எனது பார்வையில் தான் அக்குறிப்பினைக் கண்டனளோ?

எங்களிருவருக்குமிடையே வளர்ந்த அன்புப் பயிருக்கு அவள் ஊற்றிய நீரே அக்குறிப்பு.

எமது இன்பத்தின் குறிப்பினை மனதினில் உட்கொண்ட அவளுக்கு வெட்கம் மேலிட்டது.

தலை குனிந்தாள்; பார்வையை என்மீதிருந்தும் அப்புறப்படுத்திக் கொண்டாள்.

நேரில் பார்க்க நாணியவள், கள்ளப் பார்வை பார்த்தும் கூட, நாணித் தலை குனிய வேண்டியிருந்தது.

பெண்ணென்றாலே நாணத்தின் உருவம் போலும்!

அதுவும், தமிழ்ப் பெண்ணென்றால்.........நாணமே தமிழ்ப் பெண், தமிழ்ப் பெண்ணே நாணம் என்ற அளவுக்கு அவளிடம் நாணம் ஊறியிருக்கின்றதல்லவா?

எனது குறிப்பை என் பார்வையில் செலுத்துகிறேன்.

அவள் கண்டும் காணாத மாதிரி இருக்கிறாள்.

பிறகு......தானும் சம்மதம் என்று தெரிவிக்கிறாள், தனது ஓரப் பார்வையினால்!

நாங்கள் இருவரும் ஒன்றாக இணைகின்றோம்.

அதன் பின்.........நடந்ததை எண்ணி, அவளுக்கு மீண்டும் நாணம்!

ஆனாலும், தலைவனுக்கு இந்த நாணம் இன்ப உணர்ச்சியையே ஊட்டுகிறது!

ஏன்? வள்ளுவன் பதில் சொல்கிறான்:

நோக்கினா ளோக்கி யிறைஞ்சினா ளஃதவள்
யாப்பினு ளட்டிய நீர்.

# நெய்தல் நிலத்தில் காதலர் கொண்டாட்டம்

—புதுமைச்சிற்பி—

(சென்ற வாரத் தொடர்ச்சி)

கடலும், கடல் சார்ந்த இடமும் நெய்தல் எனப்படும்.

அந்திப் பொழுது, காதலனோ வரவில்லை. காதலி ஏங்குகிறாள். இதைக் காட்டுவது நெய்தற் கலி.

வள்ளுவர் கூறினாரே,

“காலை அரும்பிப் பகல்
எல்லாம் போதாகி
மாலை மலரும் இந் நோய்”

என்று? அதுவேதான்!

காதலனைக் காணவில்லை. நேரம் செல்கிறது. ஆம்! காமநோய் அதிகமாகிறது.

கடல் சார்ந்த இடமல்லவா நெய்தல்? எனவே கடற்கரை; அங்கே காதலருக்கு ஒரு கொண்டாட்டம்.

காதலன் வரவில்லையென்றால்......? தண்மதியும், கடலும், இளம் தென்றலும் அவர்கள் நோயை — இல்லை —துய[illegible]ர மேலும் பெருக்குகின்றன.

இவற்றை—நெய்தல் நில மக்களின் வாழ்வைக் காட்டுவது நெய்தல் கலி.

எனவே, கலித்தொகையில் நாம் பழந் தமிழ் சமுதாய அமைப்பு முறையைப் பார்க்கிறோம், அவர்கள் வாழ்க்கையைக் காண்கிறோம்; அன்று வாழ்ந்த மக்களின் வாழ்வில் உள்ள நெகிழ்ச்சியை, உணர்ச்சியைப் பார்க்கிறோம்; இதற்கும் மேலாக, அன்றைய இயற்கை வளத்துடன் ஒன்றி நாம் எங்கோ பறந்து செல்கிறோம்.

இவற்றையெல்லாம் நமக்கு ஒவ்வொரு வரியும் உணர்த்துகின்றன.

எனவே, ஒவ்வொரு பாடலையும் பார்ப்போம், படிப்போம், பகருவோம், கவி நயத்தைக் காண்போம், வருணனைகளைக் கண்டு வியப்போம், இவற்றிற்கும் மேலே சென்று அன்றைய மக்களின் மன நிலையையும் காண்போம்.

(முற்றும்)

# குறுந்தொகைக் குறுநகையும் கிராமியத்துக் கிண்டலும்!

—பாண்டியூரன்—

கிராமிய இலக்கியம்என்றதும் கிண்டல் செய்யும் காலம் மறைந்துவிட்டது! மண்வளம் தோய்ந்த பொன்மணிக் கவி மலர்கள் கிராமிய இலக்கியச் சோலையிற் பூத்துக் கமழ்கின்றன. மட்டக்களப்பு மண்ணுக்கு மாண்புதரும் அக் கவிமலர்கள் சங்க இலக்கியங்களுக்கு சளைத்தவையல்ல என்பதை நாம் இங்கு ஒப்பு நோக்குவதிலிருந்து உணரக் கிடக்கின்றது.

அகப்பொருள் தோய்ந்த சுவைக்கருவி பலவற்றைக் குறுந்தொகைக் குறுநகையில் நாம் காண முடியும். அவற்றுள் ஒன்றை நாம் இங்கு ஒப்புநோக்க உதவுகின்றோம். தராசில் இட்ட தங்கப் பவுண்போல் அவை இரண்டும் எடையில் ஒன்றுக்கொன்று தளராது நிறைவதும், ஒளிர்வதும், உற்று நோக்குமிடத்து உவப்பூட்டுகிறது.

நறுமணம் கமழும் அறுசுவையுண்டி சமைக்கும் அணங்குகளை, இருதுறை இலக்கியங்களிலும் எடுத்துக் கூறப்படுவதை இங்கு காணலாம்.

★

திருமணம் முடிந்து விட்டது! புதுமனை புகுந்து புதுக் குடித்தனம் நடாத்தத் தொடங்குகின்றனர் தம்பதிகள். அன்னைத் தந்தையர் ஊட்டிய அறுசுவை அமுதம் உண்டு களித்தவர்களல்லவா? இன்று அவள் சமைத்துப்போட அவன் உண்ண வேண்டிய உல்லாச காலம்!

அனுபவம் இல்லாதவள்! அட்டிலில் அவள்படும் கஷ்டம்தான் என்னே! சுவையான உணவு சமைத்துச் சொந்தக்காரனுக்குப் பரிமாற வேண்டுமென்பது அவளது ஒரே நோக்கம்! தரமான தயிர்க் குழம்பு தயாரிக்கும் வேலையில் மும்முரமாக முனைந்து கொண்டிக்கிறாள். அப்பப்பா! அடுப்புப் புகைந்து கொட்டுகிறது. அவளது குவளை விழிகள் குளமாகிவிட்டன-கோவைக் கனியின் குடல் போலக் கலங்கி விட்டன. அதையிட்டு அவள் அணுக்கூடக் கவலை கொண்டதாகத் தெரியவில்லை. காந்தள்விரல்கள் கட்டித் தயிரைப் பிசைந்து கொண்டிருக்கின்றன. முந்தானைச் சீலை இடையிலிருந்து நழுவி நிலத்தில் விழுகின்றது. காந்தள் விரலைக் கழுவாமலே தானையை எடுத்துத் தன் இடையில் சொருகி விடுகிறாள். இதற்குள் எத்தனை இன்னலைத் தான் அனுபவித்து விட்டாள்!

அப்பாடா!ஒருவாறு சமைத்து விட்டாள். கணவனுக்கு உணவு பரிமாறிக் கொண்டிருக்கிறாள். கறியை அவன் சுவைத்து உண்கின்றான். “ஆஹா! என்ன சுவையாக இருக்கிறது” என்று அவனை அறியாமலே வாய் சொல்லி விட்டது. அவ்வளவு தான்! அவள் முகத்தில் நாணம் நெளிந்து விளையாடுகிறது. உள்ளத்தில் உவகைப் பெருக்கு ஊற்றெடுக்கின்றது. இந்தச் சொல்லொன்றுக்காகத்தானே அவள் தவம் செய்தாள். குறு நகை புரியும் அக் குறுந்தொகைப் பாடல் இதோ,

“முளிதயிர் பிசைந்த காந்தள்
மென்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது
உடீஇக்
குவளை உண்கண் குய்ப்புகை
கமழத்
தான்துழந் தட்ட தீப்புளிப்
பாகர்
இனிதெனக் கணவன்
உண்டலின்
நுண்ணிதில் மகிழ்ந்தன்
றொண்ணுதல் முகனே”

★

மேற்கூறிய சிறப்பியல்புகள் கிராமிய இலக்கியத்திலும் பெறப்படாமல் இல்லை. ஏட்டில் எழுதப்படாமையால் அவை இலைமறை காய்போல் இலங்காதொழிகின்றன. எண்ண எண்ண இன்பம் பெருகும் அப்பாடலையும்தான் பார்ப்போமே!

இருவரும் இளந் தம்பதிகள்! காதலித்துக் கடிமணம் செய்தவர்கள். புதுக்குடித்தனம் நடாத்துகின்றனர். அவளது கையால் 'ஆர்ப்புக்' குருணலிற் காய்ச்சிய கஞ்சியாக இருந்தாலும் அவனுக்கு அது அமுதம்! கைபடக் கறி சமைத்தால் வழமையை விட ஒரு 'வட்டி'ச் சோற்றைக் கூடுதலாக வெட்டி விடுவான். அவ்வளவு சுவை அவள் சமைக்கும் கறி!

அன்று ஏதோ விசேஷம் போலும்! அருமையாக நெய்த்தாளிதம் செய்து கறி சமைத்து விட்டாள். அவனும் நன்றாகப் போட்டுப் பிடித்துவிட்டான். பட்டிப் பசு தந்த கட்டி நெய்த்தாளிதம் அல்லவா? முட்ட முட்ட உண்பதற்குத் தடைதான் என்ன? அளவுக்கு மிஞ்சி அருந்தியதால் 'திரக்கம்' எடுத்துத் திண்ணையிற்படுத்துப் புரள்கின்றான். புரள்வதோடு விட்டானா? கறியின் சுவையைக் கவி வடித்துக் காட்டுகிறான்.பாருங்களேன்!

கன்றுக் கிளியாள் கையால்
கறியாக்கி வைத்த செப்பம்;
தின்றவுடன் திமுக்கித்
திண்ணையில் போட்டிருக்கு!

# மன்னனிடம் மனம் பறிகொடுத்த பாவை!

—தமிழ்மாறன்—

உலா வந்த மன்னன் போய் விட்டான், மங்கைக்கு காதல் நோயைப் பரிசாக தந்துவிட்டு!

மன்னனைத் தான் குற்றம் சொல்லி என்ன பயன்?

அவன் வந்தது, ஆரணங்கு மீது ஆசை வலை வீசவா?

கிடையவே கிடையாதே!

நாட்டு மக்களின் சுக நலன்களை அறிந்து, [illegible]வர்கள் குறைகளைப் போக்க அல்லவா அவன் வந்தான்!

'குடி தழீக் கோலோச்சும்' அரசனல்லவா அவன்?

அவனைப் பார்த்தவுடன் அழகிக்கு ஆசைநோய் ஏற்படுமென அவன் அறிவானா என்ன?

மன்னனைக் கண்டது முதல் மாதுக்கு மனம் அமைதியடையவில்லை!

வானத்தில் தண்மதி வந்தது!

நிலவு மங்கையைக் கண்டதும் நமது மங்கைக்கு எரிச்சலாக வந்தது!

'எனது நிலையைக் கண்டு சிரிக்கவா வந்தாய்?' என நிலவிடம் சீறினாள்.

வெண்ணிலவிடம் சீ[illegible] என்ன பலன்?

முதல் நாள் குளிர்ந்த வெண்ணிலவு இன்று இவளுக்கு மட்டும் சுடுகிறதே!

அதற்கு நிலவு என்ன செய்யும்?

'ஜிலு ஜிலு' வெனத் தென்றல் அவள் தனிருடலைத் தழுவியது!

'மன்னன் தழுவ வேண்டிய உடலில் உனக்கென்ன உரிமை? என்னைத் தீண்டாதே' என்றாள் தலைவி.

பாவம், தென்றலுக்கு, காதிருந்தால் அல்லவா இவள் சொல்வது கேட்கும்!

தினமும் இவளுக்கு தென்றல் இதமாக இருந்தது! இன்று துன்பமாகப் படுகிறது.

'வாம்மா, சாப்பிட' என்றழைத்தாள் தாய்க் கிழவி!

'எனக்குப் பசிக்கவில்லை' என்ற தலைவி, படுக்கையில் போய் விழுந்தாள்.

ஈன்ற தாய்க்கு மகளின் நிலைமை புரிந்தது. அவளுக்கோ ஒரே கவலை.

மகளுக்கு வந்திருப்பது, 'காமசுரம்' என்பது அவள் அறிந்தது தானே!

மன்னனைப் பார்க்க வேண்டாம் என்று எவ்வளவோ தடுத்தும், இவள் கேட்கவில்லையே!

இரவு முழுவதும் படுக்கையில், புரண்டாள். தூக்கம் வந்தால் தானே!

கண் முன்னால், மன்னன் கோதையின், மதி வதனம் அல்லவா வந்து மாயாஜாலம் காட்டுகிறது! நெஞ்சுக்குள் காமத்தீ கொழுந்துவிட்டெரிகையில் தூக்கம் எப்படி அவளை அரவணைக்கும்?

மறுநாள் காலை.

தலைவியைப் பார்க்க தோழி வந்தாள்!

வைகறையில் எழுந்து, நீராடி, மைவடியும் கண்களுடன் காணப்படும் தலைவி, அன்று காலை எட்டு மணிக்கு மேலாகியும் படுக்கையை விட்டு எழுந்திராதது தோழிக்கு வியப்பாக இருந்தது.

“என்னடி இது, இரவு தூங்கவில்லையா?”

“தூக்கம் யாருக்கு வேண்டுமடி?

'என்னடி இப்படிச் சொல்கிறாய்? திடீரென்று உன் உடம்புக்கு என்ன?

“உடம்புக்கு ஒன்றுமில்லையடி......ஆனால்......”

“என்னடி ஆனால்? இந்தா, கற்கண்டு போட்டுக் காய்ச்சிய பால் சாப்பிடு”

“சீ, என்ன இது கசக்கிறதே!”

“ஓஹோ கசக்கிறதா? அப்போ இந்தக் கனிரசத்தைச் சாப்பிடு”

'சேச்சே, இதென்ன கனிரசமடி? புளிக்கிறதே”

“புரிகிறதடி, புரிகிறது, பால் கசக்கிறது, பழம் புளிக்கிறதது, படுக்கை நோகிறது.

“உன் நோய் தெரிந்துவிட்டது. யாரடி உன்னை இந்த நோய்க்கு ஆளாக்கியவர்?”

“தோழீ! நேற்று இந்த வழியாக வந்தாரே ஒரு உள்ளங்கவர் கள்வர்? தெரியுமா?”

“யார் நமது மன்னவரா?”

'ஆமாமடி அவரேதான்! அவர் தான் என்னை இந்த நிலைக்கு ஆளாக்கியவர். நீ எனக்கு ஒரு உதவி செய்வாயா?”

“என்ன செய்ய வேண்டுமடி? சொல், கட்டாயம் செய்வேன்!”

'மன்னன் கோதையிடம், அவரைக் கண்டது முதல் நான்படும் காதல் வேதனையை எடுத்துச் சொல்ல தூது போக வேண்டும்!'

'அதற்கென்னடி நிச்சயம் போகிறேன்'!

அன்று மாலை தோழி அரண்மனைக்கு சென்றாள். மன்னன் கோதையைக் கண்டான்.

'மலை போன்ற வைர நெஞ்சுடையவனே! வணங்காத தலைகளை வணங்கச் செய்ய வேல்களைச் செய்து குவித்திருக்கும், மாந்தை எனும் ஊருக்கு இறைவனே!

என் தலைவி நும்மீது, காதல் கொண்டிருக்கிறாள். அவளுடைய காதலை நீ அறியாதது ஏன்?

வளையல்களை யணிந்த வஞ்சியின் உடல் நலனையும் உள்ளத்தையும் கெடுப்பது உம் போன்ற வேந்தனுக்கு அழகல்லவே!

அவளைப் பெற்றெடுத்த தாய் உம்மைச் 'செங்கோலன் அல்லன்” என்கிறாள். இது உமக்கு நல்லதா?

கைவளை சோர்ந்து விழ, காதல் நினைவுடன், கண் தூங்காது எம் தலைவி அல்லல் படுகிறாளே. இதை உம்மால் தான் தீர்க்க முடியும்” என்றாள் தோழி.

அவள் தலைவி காதல் கொண்டாளே தவிர, மன்னன் அவளைக் காதலிக்க வில்லையே!

அவன் என்ன செய்ய முடியும்? பாவம் தலைவி!

வரை பொரு நீள் மார்ப வட் கார் வணங்கும்
நிரை பொரு வேல் மாந்தைக் கோவே— நிரை வளையார்
தங்கோலம் வவ்வுதல் ஆமோ; அவர் தாயர்
செங்கோலன் அல்லன் என.

—முத்தொள்ளாயிரம்.

சுதந்திரன்
SUTANTIRAN

1963 ஜனவரி மாதம் 20-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு - 12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183

# விழிப்புடன் இருக்க வேண்டும்

துரோகக் கும்பல் மீண்டும் சுறுசுறுப்பாக இயங்கத் தொடங்கியுள்ளது. தமிழ்ப் பிரதேசத்தில் அவர்களின் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன.

சொந்த இனத்தையே காட்டிக்கொடுக்கும் எட்டப்பர் கூட்டம் இது. துரோகிகளில் பல வகை உண்டு.

உரிமைப்போர் பொங்கியெழும் வேளையிலே போராட்டத்தில் முன்னணியில் நிற்கும் விடுதலை வீரர்களைக் காட்டிக் கொடுப்பவர்கள் ஒரு சாரார். அவர்கள் இரகசியமாகத் திட்டமிட்டு வேலைசெய்பவர்கள். தங்கள் துரோகங்களை மறைக்க அவர்கள் அடிக்கடி தேசபக்தர் வேடம் தரித்து மக்கள் மத்தியில் உலாவுகிறார்கள்.

சுய நலத்துக்காக என்றும் எதிரிகளுடன் கைகோர்த்து நிற்கும் ஒரு துரோகக் கும்பலும் உண்டு. அவர்களின் துரோகச் செயல்கள் பகிரங்கமாகவே நடைபெறும். ஆனால் அத்துரோகங்களை மக்கள் நலன்களுக்காகச் செய்வதாகவே அவர்கள் காட்டிக் கொள்வார்கள்.

பிறிதொரு சாரார் நண்பர்களைப்போல நடித்து சந்தர்ப்பம் பார்த்துக் கழுத்தறுப்பவர்கள். இந்தத் துரோகிகள் புல்லுருவியைப் போன்றவர்கள். விடுதலை இயக்கத்துக்கு ஆதரவு காட்டுவதைப்போல நடிப்பார்கள். நெருக்கடியான சமயத்தில் எதிரிகளுடன் சேர்ந்து இயக்கத்துக்கு வெடிவைப்பார்கள்.

உபாயம், தகடுதத்தம், பித்தலாட்டம், சூழ்ச்சி, தந்திரம், மாய்மாலமெல்லாம் செய்து, மக்களை ஏமாற்றி, அவர்களையே கருவியாக உபயோகித்து உயர்பதவிகளைக் கைப்பற்ற பகீரத முயற்சி செய்யும் ஒரு எத்தர்கள் கூட்டமும் உண்டு. அவர்களில் ஒரு சிலர் மக்கள் அரங்கத்தில் செல்லாக் காசான நபர்கள். இந்தத் துரோகிகள் பல்வேறு வேடந்தாங்கி அடிக்கடி மக்கள் முன் நடிப்பார்கள். சொந்த இனம் அழிந்தாலும் சரி, தாங்கள் பதவியில் அமரவேண்டும்—அதுவே அவர்களின் இலட்சியம். அதற்காக ஆட்சியாளருக்கு அடிவருடவும் அவர்கள் தயார். பதவியில் அமர்ந்து விட்டாலோ ஏறிய ஏணியை எட்டி உதைப்பார்கள்.

இச்சந்தர்ப்பவாதிகள் இன்று எங்கும் நடமாடுகின்றனர். முதலைக்கண்ணீர் வடித்து, நன்மை புரிபவர்களைப் போல நடித்து மக்கள் கண்ணில் மண்ணைத் தூவுகின்றனர். மந்திரிகளுக்குப் 'பந்தம்' பிடித்துப் பதவியைப் பிடிக்க பகீரத முயற்சி செய்கின்றனர்.

துரோகக் கும்பலின் பாச்சா இன்று தமிழ் பேசும் மக்களிடம் பலிப்பதில்லை. சமயத்திற்கேற்ப பல்வேறு வேடந்தாங்கி வந்தாலும், மக்களை இன்று ஏமாற்ற முடியவில்லை. அவர்கள் எப்படியோ உண்மை உருவத்தைத் தோலுரித்து காட்டிவிடுகின்றனர்.

தமிழ் பகுதிகளில் மந்திரிகளின் படாடோப பவனியோ, எட்டப்பர் கூட்டத்தின் விருந்துபசார வரவேற்பு நாடகங்களோ, மக்களுக்காக வானத்தை வில்லாக வளைப்போம் என்ற பகட்டுப் பேச்சுகளோ, தமிழ் பேசும் மக்களை ஏமாற்ற இன்று பயன்படா.

"சமஷ்டி சாத்தியமன்று, சிங்கள வகுப்புவாதிகளுடன் ஒத்துழைப்பதே ஒரே வழி" என்று அறிக்கைமேல் அறிக்கைவிட்டாலும் மக்கள் அவற்றை தூசியளவுகூட மதிப்பதாயில்லை.

காரணம், தமிழ் பேசும் மக்கள் இன்று அடைந்துள்ள அரசியல் விழிப்புதான். உரிமைப் போராட்டங்கள் அவர்களிடையே விழிப்பை ஏற்படுத்தியுள்ளன. உரிமை உணர்வையூட்ட தமிழரசுக் கட்சி செய்த இடைவிடாத பிரசாரமும் அவர்களின் அரசியல் அறிவை வளர்த்துள்ளது.

ஆகவே தமிழ் பேசும் மக்கள் இன்று ஏமாளிகளல்ல. எத்தர் கூட்டம் அவர்களை ஏமாற்றுவதும் சுலபமன்று.

ஆனால் மக்களிடையே அரசியற் சூடு தணிந்திருக்கும் சமயத்தைப் பயன்படுத்தி காக்கை வன்னியர் கூட்டம் கைவரிசையைக் காட்டும்—துரோக வலையை விரிக்க முற்படும்.

மக்கள் எழுச்சி பெற்றுவிட்டாலோ, துரோகக் கும்பல்கள் புறமுதுகிட்டோடும். வெளியே தலைகாட்டாது பதுங்கிவிடும். மக்களின் கோபம் கொடியது என்பது அவர்களுக்குத் தெரியும்.

துரோகப் பட்டியலிலே சில தமிழ் பத்திரிகைகளும் இடம் பெறுகின்றன.

இப்பத்திரிகைகளின் ஒரே நோக்கம் எப்படியும் ஆட்சியாளரின் தயவைப் பெற வேண்டுமென்பதே. அதற்காக அவை தமிழ் பேசும் மக்கள் மீதே போர்தொடுத்துவிடுகின்றன. அவர்களின் உரிமைப் போரை உதாசீனம் செய்து, அவர்களின் கட்சியையும் எதிர்த்துப் பிரசாரம் செய்கின்றன.

சுயநலமிகளின் கையில் சிக்கித் திணறும் இப்பத்திரிகைகளின் துரோகம் தமிழ் பேசும் மக்களிடையே ஆத்திரத்தையும் கோபத்தையும் கிளறிவிட்டுள்ளது.

விரைவில் அப்பத்திரிகைகள் மக்களிடம் சரியான பாடம் கற்றுக்கொள்ளும் என்பதில் ஐயமில்லை. துரோகப் பத்திரிகைகளைக் கையால் தீண்டுவதுகூட அவற்றின் துரோகப் பிரசாரத்துக்கு ஆக்கமளிப்பதாகும்.

தமிழ்பேசும் மக்கள் துரோகிகளை ஒதுக்குவதைப்போல துரோகப் பத்திரிகைகளையும் ஒதுக்கித் தள்ள வேண்டும். உரிமைப் போராட்டம் அண்மி வரும் வேளையிலே மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டியது மிக மிக அவசியமாகும்.


# பத்திரிகா தர்மம் பறக்கிறது: வீரகேசரி விஷமத்துக்கு ஆப்பு

இம்மாதம் 5ந் திகதி கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டத்தைத் தமிழ் மக்கள் தமிழ்ப் பிரதேசத்திலேயே நடத்தினர். பொலிஸ் குறுந்தடிப் பிரயோகமும் தமிழ் மக்கள் மீதுதான் நடத்தப்பட்டன. இச் செய்தியைப் படுமோசமாகத் திரித்து தமிழ் பேசும் மக்களால் வாசிக்கப்படும் தமிழ்த் தினசரியான வீரகேசரி மக்களை தவறான பாதையில் இழுத்துச் செல்லக்கூடிய விஷமத்தன தப்பான தலைப்புடன் பிரசுரித்திருந்தது.

இச் சம்பவத்தை வீரகேசரியை வாசிக்கும் தமிழ் மக்களே நேரடியாகக் கண்டிருப்பதால் இந்தப் பத்திரிகை வெளியிட்ட விஷமச் செய்தியைக்கண்டு அவர்கள் பெரிதும் ஆத்திரமடைந்துள்ளனர் என்று எமக்குக் கிடைத்துள்ள செய்திகள் கூறுகின்றன.

சிங்கள மந்திரிகளுக்குப் பந்தம் பிடிக்கும் நோக்கத்துடன் தமிழ் பேசும் மக்களின் உரிமை உணர்ச்சியை மட்டந் தட்டுவதற்காகவே செய்திகளைத் தலைகீழாகத் திரித்து விஷமத்தனமான தலைப்புகளுடன் பிரசுரித்திருக்கிறார்கள்.

இழந்த உரிமைகளை மீட்பதற்காக தமிழ் பேசும் மக்கள் ஒரு ஜீவ மரணப் போராட்டத்திலீடுபட்டுள்ள வேளை இது. இந்த உரிமைப் போராட்டத்திலே அவர்களுக்குப் பக்கபலமாக நிற்கிறது "சுதந்திரன்". சுதந்திரன் அவர்களின் உரிமைக் குரல்.



பொகவந்தலாவையில் நடைபெற்ற இலங்கைத் தொழிலாளர் கழகப் பிரசாரக் கூட்டத்தின் ஆரம்பத்தில் செல்வன் அருளானந்தன் தேசிய கீதம் பாடுவதையும், தலைவர்கள் எஸ்.ஜே.வி. செல்வநாயகம், டாக்டர் இ.மு.வி. நாகநாதன் ஆகியோரையும் காண்க.

### விஷமத்தை வெட்டி வீழ்த்தும்

தமிழ் பேசும் மக்கள் கையிலுள்ள வலுவுள்ள ஓர் ஆயுதமே "சுதந்திரன்". எனவே தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைப் பாதிக்ககூடிய, உரிமைப் போராட்டங்களுக்குக் குந்தகம் விளைவிக்க கூடிய எத்தகைய பொய்ப் பிரசாரத்தையும் "சுதந்திரன்" வெட்டி வீழ்த்தி தமிழ் பேசும் மக்களைப் பாதுகாப்பதே அதன் கொள்கை.

எனவே தமிழ் பேசும் மக்களின் உரிமைப் போராட்டத்தைப் பலவீனப்படுத்தும் நோக்கத்துடன் எந்தப் பத்திரிகை, செய்திகளைத் திரித்து பித்தலாட்டம் செய்தாலும், அவற்றையெல்லாம் அம்பலப்படுத்தி, இத்தகைய போலிப் பிரசாரங்களில் ஏமாற வேண்டாமென்று மக்களை எச்சரிப்பது சுதந்திரனின் கடமையாகும்.

### தலைகீழாக நிற்பதேன்?

வாரம் ஒரு முறை ஒரு சிலர் தலைகீழாக நிறுத்தப்படுவதாகப் பேசிக்கொள்ளப்படுகிறது. செய்திகளைத் தலைகீழாகத் திரிக்க தலைகீழாக நிற்பது அவசியம் போலும்!

விஷமப்பிரசாரம் செய்து, தமிழ்பேசும் மக்களிடையே அடிமை மனப்பான்மை வளர்க்க வீரகேசரி செய்யும் எந்த முயற்சியையும் சுதந்திரன் நிச்சயமாக அனுமதிக்காது.

உருட்டல் மிரட்டல்களுக்கு அஞ்சித் தமிழ் பேசும் மக்களிடமிருந்து உண்மையை மறைத்து வைக்கும் பத்திரிகையல்ல சுதந்திரன்.

வீரகேசரியாக இருந்தாலும் சரி, வேறு எந்தக் கேசரியாக இருந்தாலும் சரி, கட்சிகளாக இருந்தாலும் சரி, தனி நபர்களாக இருந்தாலும் சரி தமிழ் பேசும் மக்களின் உரிமைப்போராட்டத்தை வலுவிழக்கச் செய்யக் கூடியதாக பொய்த் தகவல்களை வெளியிட்டுப் பித்தலாட்டம் செய்வதைச் சுதந்திரன் இறுதி வரை எதிர்த்துப் போராடியே தீரும்.

### பத்திரிகா தர்மம் பறக்கிறது

வீரகேசரி முன்பெல்லாம் இம்மாதிரிச் செய்திகளைச் சிலேடையாகத் திரித்தது. "பொடி" கலந்து பிரசுரிக்கவுமில்லை பத்திரிகா தர்மத்துக்கு நேர் மாறான அத்தகைய பாரம்பரியமும் வீரகேசரிக்கு இருந்ததுமில்லை.

கொஞ்ச காலமாகத்தான் நடுவுநிலைமை மாற, வீரகேசரியை விட்டுப் பத்திரிகா தர்மம் விடை பெற்றுக் கொண்டதாம்.

### எச்சரித்தும் பயனில்லை

இம்முறை மட்டுமின்றி, இதற்குமுன்பும் இம்மாதிரி விஷமத்தனங்கள் வீரகேசரியில் இடம் பெற்றுள்ளன.

மட்டக்களப்பில் ஏப்ரல் 17ந் தேதி நடந்த தமிழரசுக் கட்சிக் கூட்டத்திலிருந்து திரு. இராசதுரை எம். பி. வெளி நடப்பு செய்ததைப் போன்ற ஒரு விஷமத்தனமான செய்தியைப் பிரசுரித்து, தமிழரசுக் கட்சியினுள் ஏதோ பிளவு ஏற்பட்டு விட்டதாக பொது மக்களுக்கு எடுத்துக் காட்டுவதற்கு வீரகேசரி முயன்றதென்பது வாசக நேயர்களுக்குத் தெரியும்.

இந்த விஷமத்தனமான செய்தியைத் திரு. இராசதுரை மறுத்தும்கூட அந்த மறுப்பை வீரகேசரி வெளியிடவில்லை. 'தினகரன்' தான் வெளியிட்டது.

இதே மாதிரி மன்னார் மகாநாட்டுச் செய்திகளை வெளியிடுவதிலும் வீரகேசரி விஷமத்தனம் செய்தது என்பது பகிரங்க இரகசியம்.

'திரு. இராசதுரை பதவியை, ஏற்க மறுத்தது ஏன்?' என்ற பித்தலாட்டத் தலைப்பிட்டு செய்தியைத் திரித்து வெளியிட்டது. அதனைச் சுட்டிக்காட்டிய 'சுதந்திரன்' தன் பிழையான போக்கை

(9-ம் பக்கம் பார்க்க)

# சுவாமி விவேகானந்தரின ஜெயந்தி விழா

## நூறு ஆண்டுகள் பூர்த்தியாகின

இவ்வாரம், சுவாமி விவேகானந்தரின் நூற்றாண்டுப் பிறந்த தின விழா உலகெங்கும் கொண்டாடப்பட்டது. அவர் ஜனவரி மாதம் 12ம் திகதி, 1863ம் ஆண்டில் பிறந்தார்.

சிறு வயதிலேயே தந்தையை இழந்து, வறுமையில் உழன்ற விவேகானந்தர், 1880ம் ஆண்டில் பரமஹம்ஸர் இராமகிருஷ்ணரின் தெய்வீகத் தொடர்பைப் பெற்றார். இந்தத் தொடர்பு விவேகானந்தரின் வாழ்க்கையையே மாற்றி அமைத்தது. பரமஹம்சரின் புதல்வரானார் விவேகானந்தர்.

1886ம் ஆண்டில் சுவாமி இராமகிருஷ்ணர் காலமானார். அவ்வமயம், அவர் தமது ஆத்மீக சக்தி அனைத்தையும் விவேகானந்தருக்குத் தாரை வார்த்துத் தந்துவிட்டுச் சென்றார்.

தனது குருவின் மறைவுக்குப் பிறகு, சுவாமி விவேகானந்தர் உலகெலாம் இந்து சமயத்தின் மகிமையைப் பரப்பினார்.

இராமகிருஷ்ண சங்கத்தை (மிஷன்)" உருவாக்கியவரும் சுவாமி விவேகானந்தரே.

சுவாமி விவேகானந்தரின் பேச்சிலும், செயலிலும், உறுதியும், உண்மையும் தொனித்தன. அவர் ஏழை, எளியவர்களுக்குச் செய்யும் கடமையையே, இறைவனுக்குச் செய்யும் கடமையாகக் கருதினார். அதையே எல்லா மக்களுக்கும் போதித்தும் வந்தார்.

அமெரிக்காவில் 1893ம் உலகச் சமயங்களின் பாராளுமன்றத்தில் இவர் பேசிய போது, அமெரிக்கா வியப்புற்றது. மாபெரும் தவப்புதல்வர் என அவரைப் போற்றியது.

நாற்பது வருடங்களுக்குத் தாம் உயிர் வாழ மாட்டார் என்று தம் சிஷ்யர்களிடம் அடிக்கடி சொல்லி வந்த சுவாமி விவேகானந்தர், தனது 39 ஆவது வயதில், 1902ம் ஆண்டு ஜூலை மாதம் 4ம் திகதியன்று சமாதியடைந்தார். அவரது உடலை விட்டு அவரது மகாத்மா விடுதலை அடைந்தது.

ஆனால், அவர் இன்றும் உலக மக்களிடையே வாழ்ந்து தான் வருகிறார்; என்றும் வாழ்ந்தே வருவார். அது மகாத்மாக்களின் தனிப் பெற்றி.

# நல்ல தலைமை உங்களுக்கு இருந்தது என்று எண்ணி வாளாவிருந்தோம்

# உங்கள் அவலநிலை உணர்ந்து இன்று வந்துள்ளோம்

## பொகவந்தலாவையில் திரு. எஸ். ஜே. வி.

மலையகத்தில் பத்து இலட்சம் தமிழ் பேசும் மக்கள் உள்ளனர். இருந்தும் உங்கள் இழந்த உரிமைகளைப் பெறுவதற்கு, உங்கள் மத்தியில் இரு காங்கிரஸ்வாதிகளும் தயாராக வில்லை. காரணம் அவர்கள் உங்கள் சக்தியை உணரவில்லை. அல்லது உங்கள் சக்தியையும், பலத்தையும் பயன்படுத்த விரும்பவில்லை. அவர்களுக்கெதிராக நாம் கூறும் குற்றச்சாட்டு இது தான், எனவே இலங்கைத் தொழிலாளர் கழகமாகிய உங்கள் இயக்கத்தில் பெருமளவில் சேருமாறு உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு கடந்தவாரம் பொகவந்தலாவையில் இலங்கைத் தொழிலாளர் கழகத் தலைவர் டாக்டர் இ. மு. வி. நாகநாதன் தலைமையில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்து உரை நிகழ்த்துகையில் தமிழரகத் தந்தை திரு. எஸ்.ஜே.வி. செல்வநாயகம் குறிப்பிட்டார்.

திரு. அருளானந்தத்தின் தேசிய கீதத்துடன் கூட்டம் ஆரம்பமாகியது.

தொடர்ந்து திரு. செல்வநாயகம் உரை நிகழ்த்துகையில் கூறியதாவது: 1958 ம் ஆண்டு எங்கள் பொதுச் செயலாளர் திரு. கிருஷ்ணசாமி அவர்கள் என்னிடம் வந்து மலைநாட்டுத் தமிழரின் உயர்வுக்கு உழைக்க முன்வருமாறு வேண்டினர். இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும், ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரசும் மலையகத்துமக்களின் வளர்ச்சிக்காக உழைக்கிறபடியால் தமிழரசுக் கட்சி தலையிட விரும்பவில்லையென்று அன்று கூறினேன். ஆனல் மலையக மக்களின் நிலையையும், அவர்கள் மத்தியில் உள்ள இயக்கங்களின் செயல் முறையையும் ஊன்றிக் கவனிக்கையில் நிலைமை மோசமடைந்து வருவதைப் பார்க்க முடிந்தது. எனவே உங்களின் அவல நிலையைப் போக்குவதற்கு, உங்களுடன் நெருங்கி உறவுகொள்வது அவசியம் என்று உணர்ந்தோம். ஆகவேதான் இலங்கைத் தமிழரசுக்கட்சி உங்கள் மத்தியில் இன்று வந்துள்ளது.

### நமது பண்பாடு

உங்கள் மத்தியில் உள்ள இயக்கங்கள், நமது பிரவேசத்தினல் இனக் கலவரம் ஏற்படுமென்று பிரசாரம் செய்து உங்களைப் பயப்படுத்தி வருகிறார்களெனத் தெரிகிறது. இப்படிப் பிரசாரம் செய்பவர்கள் நமது பண்பாட்டை அறியாதவர்கள் என்றே கூறவேண்டும். நமது பண்பாடு, வாழ்க்கை முறை அமைதியானது. எங்களது போராட்டவழி சாத்விகமானது. நமது ஆயுதம் அஹிம்சை. அஹிம்சையில் இரு அம்சங்கள் உண்டு. ஒன்று மற்றவர்களுக்குத் தீங்கு ஏற்படுத்தாது, மாற்ருர் மனதைப் புண்படுத்தாது இருப்பது. மற்றவர்கள் நமக்குத் தீங்கு விளைவிக்கும்பொழுது நாம் அஞ்சாது தைரியத்துடன் எதிர்க்க வேண்டும் என்பது மற்றதாகும். எனவே நமது பிரவேசத்தினல் இனக் கலவரம் ஏற்படும் என்று கூறுபவர்கள், நம்மைப் பற்றி அறிந்தும், நமது நிலையைப் புரிந்தும், வேண்டுமென்று நமது நிலையைப் புரியாதவர்களாக, தெரியாதவர்களாக கூறுகிருர்கள் என்றே சொல்லவேண்டும். எனவே ஆரம்பகாலந் தொடக்கம் உங்கள் உரிமைகளைப் பெறுவதற்கு உழைத்து வரும் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் ஒரு அங்கமாகிய இலங்கைத் தொழிலாளர் கழகத்தில் பெருமளவில் சேர்ந்து, உங்கள் இழந்த உரிமைகளைப் பெற உழைக்க முன்வருமாறு வேண்டுகிறேன்.

(டாக்டர். இ. மு. வி. நாகநாதன், திரு. வி. என். நவரத்தினம் எம். பி., திரு. எஸ். நாராயணசாமி ஆகியோரின் பேச்சு அடுத்த வாரம் இடம் பெறும்.)

## பத்திரிகா தர்மம் பறக்கிறது:

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

வீரகேசரி மாற்றிக்கொள்ள வேண்டுமென அப்பொழுதே அப்பத்திரிகைக்கு எச்சரிக்கை விடுத்தது.


ஆயினும் வீரகேசரி தமிழ் பேசும் மக்களை மாக்களெனக் கருதி மீண்டும் விஷமத்தனம் செய்யத் தொடங்கியுள்ளது.

ஆகையால்தான் பொது மக்கள் கொதிப்படைந்து வீரகேசரியைப் பகிஷ்கரிக்கத் தொடங்கியுள்ளனர்.

வீரகேசரியின் நிர்வாக நிலைபற்றி சுதந்திரனுக்கு அக்கறை கிடையாது. அது அவர்களின் சொந்த விஷயம். தமிழ் பேசும் மக்களின் உணர்ச்சியைப் பாதிக்கும் விஷயங்களிலேயே சுதந்திரன் சிரத்தை கொண்டுள்ளது.


**பூனைகள் எண்ணும் போட்டியில்**

**வெற்றிபெற்றோர்**



**எவரடி மினிமெக்ஸ்**

1வது பரிசு குருன்றிக் ரேடியோகிராம் ஆர். உடனிஸ்
யற்றவத்தா, கஹவல, பாதுக்க.

2வது ,, டேப் ரெக்கோர்டர் எஸ். தவப்பிரகாசம்
159/2, பீச் ரோட், பாஷையூர், யாழ்ப்பாணம்.

3வது ,, பிலிப்ஸ் டிரான்ஸிஸ்டர் ரேடியோ செட். செல்வி.எஸ். சிவலிங்கம்
40/1, ஹார்மர்ஸ் எவனியூ, வெள்ளவத்தை.

4வது பிலிப்ஸ் டிரான்ஸிஸ்டர் ரேடியோ செட் எம்.ஜீ.கொடிக்கார, பொல்ஹேன்வ, பட்டப்பொல.
5வது ,, ,, வி. சுபிரோசன், லாகவத். எஸ்டேட், மடுல்கெல்லே.
6வது ஹெலே பைசிக்கிள் (லேடாண்டார்ட்) கே. பி. பியதாச, புஜாகஸ்ஹேன, போகஹா சந்தி. எலபிட்டிய.
7வது ( ,, ,, ) ஜயதிலக நாயக, "நீலானா" குடும்புகே, கோணபொல சந்தி.
8வது ( ,, ,, ) செல்வி மாஹோட்டி விஜயலக்ஷ்மி, கோரபுரவ பாடசாலை, ரனஸ்கொட, மாத்தறை.
9வது ( ,, ,, ) தயா சமரசிக, "சோமிதியான" அக்கொட, பெந்தோட்டை.
10வது ( ,, ,, ) கே.எ. பியசேன, இல. 4, மொரட்டுபிட்டிய ரோட், மொரட்டுமுல்ல, மொரட்டுவை.
11வது ( ,, ,, ) ஜி. டி. ரோஸின் அப்புஹாமி, தொலமுல்லவத்த மடிகே, கம்புருகமுவ
12வது குருன்டிக் பாட்டரி ரேடியோ செட், டி. எம். ஜீ. பி. டீ. சில்வா, இஜுகபிட்டிய, பட்டப்பொள.
13வது ,, ,, வி. புஷ்பநாதன், அப்பொட்லேலே, அட்டன்.
14வது ,, ,, திருமதி. எம். இரத்தினவதி பொகவந்தலா எஸ்டேட், பொகவந்தலாவ
15வது ,, ,, மல்லிகா ஈவ்லின் டீ. சில்வா "சில்வர் கிரீன்" வட்டரக்க, காலி.
16வது லைமர் கடிகாரம் அன்னல்லி குணசேகர, காலி மியூஸிக்கல் ஸ்டோர்ஸ், இல. 7. மெயின் வீதி, காலி.
17வது ,, ,, கே. எ. டீ. பேர்ஸி சோமசிரி, இலங்கை வங்கி, பாணந்துறை.
18வது ,, ,, திருமதி. எம்.டீ. பெரேரா "ரயில்வே குவார்ட்டர்ஸ், ஹுனுபிட்டிய
19வது பிலிப்ஸ் பாட்டரி ஷேவர் எம். டி. குணசேன, பாதுக்கதெனிய உ.த.க. பொல்கொல்ல.
20வது ,, ,, டப்ளியூ.எ. ஹேராத் ஹாமி திவுல்கன முஸ்லிம் பாடசாலை, மெல்சிறிபுர
21வது பார்க்கர் பேனு எ. எல். ஆர். குணசேகர, "டெல்குரோவ்" குருந்துவத்தை, தல்பே,
22வது ,, ,, சிரிநெல் விஜயசிரி, நடநெல்லிய, கிராம.
23வது ,, ,, பி. ஈழ தவநிலசுந்திரம் இல்லக்கட்டை, சுன்னாகம்,
24வது ,, ,, எச். வி. குணதிலக, 138, தேவால ரோட், பமுனுவ, மஹரகமை.
25வது ,, ,, ஜீ.வி.சிரியாவதி, "விஜயா" வல்முல்ல, தொடாங்கொட,
26வது ,, ,, ஜீ. டி. எல். டீ. சில்வா, "ன்சல்" அஸல, தீனிட்டிய, பலப்பிட்டிய.
27வது சோமபால தர்மரத்தின, ஜயந்தி ஷூ பிளேஸ், அளுத்கமை.
28வது ,, ,, சரத் ஜயகொட, "சோண் லெவ்ட்லியூ" எல்பிட்டிய.
29வது ,, ,, ஜெ. எ. சீலாவதி, "சீதா யன", கஸ்கம, பண்டாரகம
30வது ,, ,, டப்ளியூ. பி. குணதாஸ, இல. 110, பண்டாரபட்டவல, பெம்முல்ல.
31வது ,, ,, கே. விஜயலக்ஷ்மி, பட்டியாகம எஸ்டேட், தெல்தோட்டை.
32வது ,, ,, எம். டி. சமரபால, மெத்தசாந்தி ஜயந்தி மஸநதா, மீரிஹான, கோட்டே
33வது ,, ,, ஆர். பி. எம். அநுராவதி நாராந்தன், வந்தேகம,
34வது ,, ,, சோமசேகன் அமரதுங்க சிலாவுல்ல, சந்தாவே,
35வது ,, ,, எம். எச். சந்திரசிறி, கோன்னதோட்ட, தொடாங்கொட,
36வது ,, ,, டி. எஸ். சிரிசேன திரணகம, ஹிக்கடுவ
37வது ,, ,, பி. கே. சுகதபால C/O எம். வை. எம். லொரி பசார், நாஜுஹயா
38வது ,, ,, செல்வி. எம். வான்ஹர்ஸ்ட் சுவஸ்லொட, திருகோணபுரி.
39வது ,, ,, எ. எம். விஜேதுங்க, ஏன் ஜயுவ, வேலயகம.
40வது ஜே. மெய்யழகன் 451, ரயில்வே ஸ்டோர்ஸ் ரோட், அநுராதபுரம்
41வது மினிமெக்ஸ் ரேடியோ பட்டரி டி. ஜே. முத்துகுடா 107, கொழும்பு வீதி, கண்டி,
42வது ,, ,, சாத் அபேசிங்க எத்தாந்துர, அரசினர் பாடசாலை, எத்கந்துர
43வது ,, ,, டி. எ. கே. விக்கிரமசிங்க, கொஹுபென பாடசாலை கோனவில
44வது ,, ,, எம். ஜே. மகிந்த கூலகே 121, இலக்க, கொச்சிக்கடை.
45வது ,, ,, செல்வி. புனிதம் மரியநாயகம் C/O. முருகன் ஸ்டோர்ஸ், கொட்டாஞ்சேனை
46வது ,, ,, மல்லிகா ரத்னபலா குரியாகொட, முருத்தலாவ.
47வது ,, ,, டப்ளியூ. எம். ஜயதிலக அரசினர் ஆஸ்பத்திரி, கம்பளை
48வது ,, ,, சோமாசிரி ரணவீர எல்ல, எல்பிட்டிய,
49வது ,, ,, எம். பதுருன்னிஸா 4, பத்துத்தா ரோட், மாத்தறை
50வது ,, ,, எம். எச். எ. நிஸாமா வெல்லிங்டன் தியேட்டர், வாழைச்சேனை

**மகாதேவன்ஸ் லிமிட்டெட்**
பேங்ஷால் வீதி, கொழும்பு-11



# சாம்பல் மேடு

முத்து - சிவஞானம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

## (2)

இளங்காலையின் சூடான கதிர்க் கற்றைகளிற் குளித்துக் கிடக்கும் அந்தக் கலட்டி வெளியின் தனிமையுணர்வில், ஏழ்மைக்கு இலக்கணம் கூறும் அந்த ஓலைக் குடில் தனித்துக்கிடக்கிறது.

தூரே—

வரட்டுப் பசுமையில் கிடக்கும் கள்ளிவேலிகளின் வரம்பிற்கு மேல், பனைவடலிகளின் தலைகள் பச்சை காட்டுகின்றன.

பனைவடலியை ஊடறுக்கும் செம்மண் வழியில், பள்ளிக்குப் போகும் சிறு பிள்ளைகள் வந்துகொண்டிருக்கிறார்கள்.

அவர்கள் கைகளில்—

சிலேட்டுக்கள், புத்தகங்கள்.

ஒரிருவர் கையில்—

பள்ளிக்கூட வாத்தியாருக்குக் கொடுப்பதற்காகக் கொண்டுபோகும் கத்திரிக் கன்றுகள், மிளகாய்க் கன்றுகள்...

கள்ளிவேலியைக் கடந்து அவர்கள் அந்தக் குடிலின் முற்றத்திற்கு வருகிறார்கள்.

"ராசாத்தி?"

செல்லத்தின் மூத்த குழந்தை வெளியே வருகிறது.

"நீ பள்ளிக்கூடத்துக்கு வரவில்லையே?"

"அம்மா வீட்டிலை நிக்கச் சொல்லி மறிச்சுப்போட்டா. நான் வரவில்லை"

"அப்ப நாங்கள் போறம்" பிள்ளைகள் நடக்கத் தொடங்குகிறார்கள். மணியர் வீட்டுப் பிள்ளை போட்டிருக்கும் பூச் சட்டையில் ராசாத்தியின் கவனம் குத்துகிறது.

பிள்ளைகள் பார்வையிலிருந்து மறையவும், ராசாத்தி உள்ளே போகிறாள்.

குடிலுக்குள்—

செம்பாட்டு நிறக் கந்தற் பாயில், அவளுடைய இரண்டு வயதுத் தங்கை சோர்ந்து கிடக்கிறாள்.

ராசாத்தி கடை வாய் வழிந்தது வழிந்தபடியிருக்க, பழஞ் சோற்றுச் சட்டியைத் திறக்கிறாள்.

நிலத்தில் விதையாக் குறையாக பழஞ்சோற்றைத் தின்று முடித்துவிட்டு, தன் செப்புப் பேணிகளை எடுத்து வைத்துக் கொண்டு விளையாடத் தொடங்குகிறாள்.

கெவருள்ள காண்டைத் தடியில் முறித்து எடுக்கப்பட்ட தனது 'பாவைப் பிள்ளைக்கு' பழஞ்சிலைத் துண்டால் உடுப்புப் போட்டு அழகு பார்ப்பதில் பிஞ்சுக் கைகள் ஈடுபடுகின்றன.

மணியரம்மானுடைய தேவியைப் போல்...தனக்கு, தன்னுடைய பாவைப் பிள்ளைக்குப் போட பூச்சட்டை இல்லையே என்ற எண்ணத் துயர் மனதை அடக்கும் பெரும் சிலையாகி விரிகிறது.

'தேவியைப்போல் நனக்கும் ஐயா இருந்தா... அம்பாரம் பூச்சட்டை எல்லாம் வேண்டித் தருவர்...' பிஞ்சு உள்ளம் பொருமி விம்முகிறது.

ஏதோ ஏதோ நினைவுகள்..,

பாவைப்பிள்ளை விளையாட்டு மறந்து, சோறுகறி ஆக்கும் விளையாட்டுக்கு எண்ணம் பாய்கிறது.

பாவைப்பிள்ளை செப்புக்குள் பத்திரமாகி, குடிசை மூலையிற் கிடந்த கடகத்திற்குள் கொண்டுபோய் வைக்கப்படுகிறது.

மெய்மெய்யாகச் சோறு கறியாக்க—

அலுமினியக் குடுவை அடுப்பில் ஏறுகிறது.

விடியற்காலையில், அவசரத்தில் செல்லம் அணைத்துவிட்டுப் போகமறந்துவிட்ட தகர விளக்கு, இன்னமும் தேவையில்லாமல் எரிந்து கொண்டு கிடக்கிறது.

ராசாத்தி விளையாடுகிறாள்.

## (3)

சுன்னாகச் சந்தையின் கலகலப்பான சந்தடிக்கிடையில் செல்லம் நாடிக்குக் கை கொடுத்தபடி, எண்ணங்கள் வீட்டில் காய்ச்சல் குணத்தோடு விட்டு விட்டு வந்துவிட்ட பிள்ளையைச் சுற்றி... உள்ளம் நிலைகொள்ளாமல், ஒதுக்கமற்ற மனஅலைச்சலில் தத்தளித்துக் கொண்டிருக்கிறாள்.

"என்ன செல்லம் ஒருமாதிரியா இருக்கிறாய்...?" தரகர் சின்னத்துரை காவிப் பற்களைக் காட்டுகிறார்.

கண்ணீர் வெடிக்க நின்ற கண்களை செல்லம் வேறு பக்கமாகத் திருப்பிக் கொள்கிறாள்.

கதைநீளாத குறையோடு, புகையிலைக் காம்பைக்கிள்ளி வாயிற் போட்டபடி தரகர் தம்பாட்டில் போய்விடுகிறார்.

"எணை! இந்தக் கத்தரிக்காய்க் கூறைச் சொல்லணை"

யாரோ அவளைக் கத்தரிக்காய் விலை கேட்கிறார்கள். ஆனால், அவளுடைய பார்வையெங்கோ வெறிக்கிறது.

"இஞ்சை வா பிள்ளை! இதைக்கேள். நல்ல கத்தரிக்காய்" செல்லத்திடம் கத்தரிக்காய் விலைகேட்டவனை, பக்கத்திலிருந்தவன் தன்னிடம் இழுத்துக் கொள்ள—

செல்லம்—

சந்தை நினைவற்று.........

மற்றும் நாட்களில் என்றால், சும்மா போகின்றவர்களைக் கூட,

"என்னெண்ணை வேணும். இஞ்சை இதைக்கேள்" என்று காரியத்தில் கருத்தாயிருப்பவள், இன்று...

நிலத்திற் சாக்கு விரித்து, அதன் மேல் கூறு கூறாகப் பரப்பியிருந்த காய்பிஞ்சுகளைக் கூட்டி அள்ளிக் கடகத்துள் போடுகிறாள்.

கொட்டப் பெட்டிக்குள் இருக்கும் காசை எண்ணிப் பார்க்கிறாள். நாலு ரூபா சொச்சம் இருக்கிறது.

'சந்திக்கடையிலை போன கிழமை சாமான் சக்கட்டு வாங்கின காசு ஆறு ரூவாய் சொச்சம் குடுக்கவேணும். நேற்றுத் தாறனெண்டு வாங்கினனான். இண்டைக்கு இந்த நாலு ரூவாயையெண்டாலுங் கொண்டு போய்க் குடுக்கவேணும். இல்லாட்டி அவன் கேளாக் கேள்வியாக் கேட்டு, இனி மேலையிற் பாட்டுக்குச் சாமான் கூடித் தரான்'.

நாலு ரூபாவையும் எண்ணி, பக்குவமாகக் கொட்டப் பெட்டிக்குள் வைக்கிறாள்.

'இதைக் கடைக்காரனுக்குக் கொடுத்தால்..., பிள்ளையைப் பரியாரி வீட்டை கொண்டுபோய்க் காட்ட...ஒரு ரண்டு ரூவாயிற் காசெண்டாலும் வேணும்...'

உள்ளத்தைச் சிக்கலின் உணர்வு நெரிக்க—சிந்தனைகள் உள்ளே பிதுங்குகின்றன.

'தேங்காய் விக்கிற ஆச்சிமுத்துவைக் கேட்டால்...'

கண்கள் ஆச்சிமுத்துவின் இடத்தைத் தேடுகின்றன.

'......இல்லாத தெய்வத்தையெல்லாம் இழுத்து, தன்னட்டை ஒரு வெள்ளைச் செல்லி கூடி இல்லையெண்டு சத்தியம் பண்ணுவள்...'

இரண்டொரு முறை பட்ட அனுபவம் அந்த எண்ணைத்த அமுக்க—

'வள்ளிப் பிள்ளையிட்டை வாங்கலாம். இரண்டு ருவாய் வாங்கினல் ஒரு கிழமேக்கை; இரண்டரை ரூவாய்க் குடுக்கவேணும். அவாவிட்டை இந்த அநியாய வட்டிக்குக் கை மாத்து வாங்கி...எண்டாலும் என்ன செய்யிறது. அவசரத்துக்கு...'

முடிவான முற்றேடு, செல்லம் வள்ளிப்பிள்ளையை நோக்கி நடக்கிறாள்.

கழுத்துச் சவியில் பூசப்பட்ட சந்தனக் குறியை மறைத்தும் மறைக்காமலும் ஐந்து பவுண் கனமுள்ள அட்டியல் தொங்க, வாயிற்குதம்பும் வெற்றிலைக் கலவையை அடிக்கடி எட்டி எட்டித் துப்பியபடி, வெற்றிலை வியாபாரத்தில் மும்முரங் காட்டிக் கொண்டிருக்கிறு வள்ளிப்பிள்ளை......

'மனிசி இண்டைக்கு ஒரு மாதிரி நிக்குது. தருகுதோ......இல்லாட்டி ...ஒரு குணம் வந்தா இல்லையெண்டுஞ் சொல்லிப் போடும்...'

"எணை வள்ளிப்பிள்ளை அக்கை! பிள்ளைக்குச் சுகமில்லையணை. பரியாரி வீட்டை கொண்டு போகவேணும். அதுதான்..."

"ஆருக்கு மூத்தவளுக்கோடி?" வள்ளிப்பிள்ளை வெற்றிலை எச்சிலை எட்டித் துப்புகிறு.

"இல்லையணை என்ரை இளையவளுக்கு... அதுதான் பரியாரி வீட்டை கொண்டு போகவெண்டால் ...கையிலை ஒரு சதத்துக்கும் வழியில்லை..." செல்லத்தின் கண்கள் கலங்குகின்றன.

"உண்மையாடி பிள்ளை என்னட்டை ஒரு சதமும் இல்லை. இப்பஎன்னேய்ய..."? வள்ளிப்பிள்ளையின் பூஞ்சுக் கண்களுக்குள் அருக்கின் சூட்சுமம் ஒளித்துக் கொள்கிறது.

"ஒரு இரண்டு ரூவாய் தந்தியெண்டால் வாறகிழமைக் கிடையிலை வட்டியோடை தாறனணை..."

வட்டிக்குக் கடனுக வாங்கும் பணத்திற்காகக் கூட எவ்வளவு நெளிந்து குழைய வேண்டியிருக்கிறது.

"நீயுங் கேட்டுப் போட்டாய்......... இல்லையெண்ணவும் மனமில்லாமைக் கிடக்கு...... அம்மன் கோயிலுக்கு எண்ணை வாங்கிக் குடுக்க எண்டுதான் ஒருரண்டு ரூவாய்க் காசு வைச்சிருக்கிறேன். உனக்கில்லாதது கோயிலுக்கே...? நீ இதைக் கொண்டு போ. நான் ஏதும் மாறிச்சாறிப் பாக்கிறன்" வள்ளிப்பிள்ளை அடுக்குப் பெட்டியைத் திறந்து எடுத்துத் தந்த காசை, செல்லம் தன்னுடைய கொட்டப் பெட்டிக்குள் பத்திரப்படுத்திக் கொள்கிறாள்.

"வாற செவ்வாய்க் கிடையில் தந்திடடி பிள்ளை..."

செல்லம் 'ஓம்' என்ற பாவனையிற் தலையை ஆட்டுகிறாள்.

மரக்கறிக் கடகத்தை சந்திக்கடையில் பாதுகாப்பாக வைத்து விட்டு, செல்லம் வீட்டை நோக்கி ஓடிநடக்கிறாள்.

உச்சிப்பொட்டைத்துளைக்கும் மத்தியான வெய்யிலில், தார் ரோட்டுக் கழிந்து,

ஒற்றையடிப்பாதை...

ஒழுங்கை......

'பிள்ளைக்கு என்னவோ.. ஏதோ...'

அவளுடைய உள்ளத்தில் உலகத்தின் தவிப்பெல்லாம் ஒன்ருய்த் திரண்டு......

'காளி ஆச்சி! பிள்ளைக்கு ஒண்டுஞ் செய்யாமல் இருக்கவேணும். உனக்கு மடிப்பிச்சை எடுத்து...'

அவள் தினந்தினம் கையெடுக்கும் காளித்தாயை மனதில் நினைத்துக் கொள்கிறாள். முழுப்பாரத்தையும் கடவுளிற் போடும் மனத் தவிப்பில்—

கைகள் அகல விரிந்து நிமிர்கின்றன.

'...... அதுகளுஞ் செய்த பாவம்......என்ரை வயித்திலை வந்து பிறந்து......'

கண்களை முந்தானைச் சீலையாற் துடைத்துக் கொள்கிறாள்.

மேலெல்லாம் குடங்குடமாக வேர்க்க அவள் ஓடி நடக்கிறாள்.

அதோ—

அந்த ஒற்றையடிப்பாதை கழிந்து, கல்ஒழுங்கை முடக்கில் திரும்பினல், அவளுடைய கொட்டில் வீட்டுக் கூரை கள்ளிப்புதர்களுக்கு மேலாக இருப்புக்காட்டும்.

அவள் கல்ஒழுங்கை முடக்கில் திரும்பிவிட்டாள்—

அவசரத்தில் அவள் வேறு ஏதாவது வழியில் வந்துவிட்டாளா...?

எங்கே அவளுடைய குடிசை···?!

சொல்லில் அடக்க முடியாத திகைப்பு-திகில்-ஏக்கம்-அவலம்-பதட்டம் எல்லாம் அவளை ஓட வைக்கின்றன.

கள்ளிப்புதர் மறைவு விலக—மனிதக் கூட்டத்தின் தலைகள்!

'ஐயோ...என்ரை பிள்ளையள்......என்ரை விடு...'

"ஐயோ!" அழுகை அவள் தொண்டையைக் கிழித்து, வெடித்து அதிர்கிறது.

அங்கே—

அவளுடைய குடில் இருந்த இடத்திற்குப்பதில்—சாம்பல் மேடு......!

(யாவும் கற்பனை)

---

## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும், மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினல் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.

வி. பி. பி. செலவு வேறு

தயாரிப்பாளர்:

**ஆனந்தா வைத்தியசாலை,**

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.

---

## பரிசளிப்பு விழா

தாவடி ஐக்கிய முன்னேற்றச் சபை நடாத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிகள் சென்ற சனிக்கிழமை (5-1-62) தாவடி தெற்கு பத்திரகாளி கோயிலுக்கு அருகாமையிலுள்ள மைதானத்தில் நடைபெற்றன.

இரண்டாவது பிரிவில் உதய சூரியன் விளையாட்டுக் கழகம் கணேசா விளையாட்டுக்கழகத்தை 1 கோலால் வென்று வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்துக்கொண்டனர்.

முதலாவது பிரிவில் நடந்த போட்டி மிகவும் மும்முரமாக இருந்தது. ஆரம்பம் முதல் இறுதிவரை இரண்டு பக்கத்தினரும் விட்டுக் கொடுக்காமல் விளையாடினர். இதில் போட்டியிட்ட ஆனந்தா விளையாட்டுக் கழகமும் உதயசூரியன் விளையாட்டுக் கழகமும் தலா இரண்டு கோல்கள் அடித்ததால் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. அண்ணமலை மன்ற வெற்றிக் கிண்ணங்கள் இரு கழகத்திற்கும் வழங்கப்பட்டன.

போட்டி முடிவில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவுக்கு திரு. சுப்பிரமணியம் தலைமை தாங்கினர். திருவாளர்கள் தில்லைநாதர், கணேசபிள்ளை, கந்தையா, ஸ்ரீகாந்தன், வீரசிங்கம் ஆகியோரும் உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டியை நடாத்தி முடித்த ஐக்கிய முன்னேற்றச் சபையைப் பாராட்டிப் பேசினர். தலைவர் நிர்வாகக் குழுவுக்குத் தன் நன்றியைத் தெரிவித்தார். சபையின் செயலாளர் சிவானந்தன் நன்றியுரை கூறினர்.

## 'தடுப்புக் காவலில் நாம்' 24



# அன்பு மகள் அன்பரசிக்கு,

தடுப்புக் காவல் நிலையம்,
பனுகொடை,
ஹோமகம.
16—7—1961

மகளே அன்பரசி!

மேன் மாடியில் தடுப்புக் காவலில்—ஏகாந்த வாழ்வில்—இருக்கத் தொடங்கி இன்றுடன் மூன்று மாதங்கள் முடிவடைகின்றன. ஒரு சில மணித்தியாலங்கள் ஓரிடத்தில் இருக்க முடியாத நானு, மூன்று மாதங்கள்—துறவி போல—வாழ்ந்துவிட்டேன்! என்னைப்போல எத்தனை பேர்!

ஆச்சரியமாயிருக்கிறது மகளே, ஆச்சரியமாயிருக்கிறது. மூன்று மாதங்கள் எப்படியோ ஓடிவிட்டன. இம்மூன்று மாதங்களிலும், பல உயரிய நூல்களைப் படிக்க முடிந்தது. 'அரசியல்' என்ற பாடத்தில் பல புதிய சிந்தனைகளை, அனுபவங்களைப் படிக்கவும் முடிந்தது. இதைவிட பல அரசியல் கட்டுரைகளையும், அடிக்கடி, உனக்கு மடல்களையும் எழுத முடிந்தது. அதிக பக்கங்கள் கொண்ட நூல்களைப் படிக்க அரிய சந்தர்ப்பமாக, இச் சிறைவாசம் அமைந்து விட்டது. 'எல்லாம் நன்மைக்கே' என்பார்களே, அதுவும் அர்த்தம் கொண்ட வாக்கியம் தானே!

நேற்று செல்வநாயகம் அவர்கள் லண்டன் பயணமானுர்கள். அவரது சுகயீனத்தைச் சொஸ்தமாக்க முடிந்த விசேட டாக்டர் அங்குள்ளபடியாலும், அந்த டாக்டர் மட்டுமே உரிய சத்திர சிகிச்சையைச் செய்ய முடியும் என்பதாலும் போனார். முன்னேற்கவே நான் குறிக்கப்பட்ட விடயமிது. எங்களுக்கு எழுதிக் கேட்டார் தந்தை. விட்டுக் காவலிலிருக்கும்போது போவதை அவர் விரும்பவில்லை. அப்படியான நிலையில், தடுப்புக் காவலில் உள்ளோரது நெருக்கமே அவரைப் போகச் செய்தது. அவர் போகும் போது, ரத்மலானையில் ஒரே கூட்டமாம். கண்ணீர் மல்கிப் பலர் விடை கொடுத்தனுப்பினராம். அவர் போகும் அந்த நேரம் நாங்களனைவரும் கூடிப் பிரார்த்தித்தோம்; கீதமிசைத்தோம்.

விடுதலை பெற்று யாரும் செல்லும்போது, பாரதியின் 'வாழிய செந் தமிழ்' என்ற பாட்டையும், 'ஈழத் தமிழ் நாடு' என்ற கீதத்தையும் பாடுவது வழக்கம். அதே போன்று நேற்றும், தந்தை செல்வா போகும் நேரம் பாடினோம். 'ஈழத் தமிழ் நாடு' என்ற பாட்டு, கண்ணதாசனின் 'திராவிடப் பொன்னுடு' என்ற பாட்டுப் போன்றது. அறப் போர் முன்னணி அரியநாயகம் பாடியது. சில திருத்தங்களை திரு. வி. ஏ. கந்தையா அவர்களும் செய்து உயரிய, உன்னத பாட்டாயிற்று. அப்பாடலை மட்டக்களப்புப் பிரதிநிதி பாட வேண்டும் அல்லது மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பாடவேண்டும். அவ்வமயம் கனிவு ஆறுக ஓடும். இதயம் துள்ளும். உறுதிநெஞ்சம் விம்மும். அப்பாட்டை எங்களியக்க மேடைகளில் பாடுவதெனத் தீர்மானித்துள்ளோம். அப்பாட்டை நீயும் அறிய வேண்டும் மகளே! நீ வளர்ந்து இப் பாட்டைப் பாட யான் கேட்கவேண்டும்.

நீ மட்டுமல்ல ஈழச்சிறுவரும் சிறுமியரும் கூடிப் பாட வேண்டும். அப்பாட்டை இம்மடலின் கடைசியில் எழுதவுள்ளேன்.

அப்பாடலின் கருத்து, வரலாறும் உண்மையும் செறிந்தது. அறமும் பொருளும் இன்பமும் சேர்ந்த நாடு—இதயத்தில் வெற்றிக் கொடி நாட்டிய மன்னன—யாழால் புகழ் ஈட்டிய பாணன்—இசைக்கு நூல் தந்தான் ஒருவன்—இசையுடன் வாழும் தமிழன்—மீன்பாடும் தேன் நாடாம் மட்டக்களப்பும், நீருற்றுக் கொண்ட திருமலையும், ஏர் ஓடும் வன்னியும், முத்தெடுக்கும் மன்னரும், வாழ்வளிக்கும் மலையக மக்களும், நாவலனும் ஞானப்பிரகாசரும் விபுலானந்தரும் வளர்த்த மொழியும் கொண்ட ஈழத்துத் தமிழன் ............ஆகா, இக்கருத்துக்கள் கொண்ட

**புதுமை லோலன்**

அப்பாட்டைப்பாட எழுச்சியும், இன முழக்கமும் உண்டாகும் மகளே.

எங்களைத் தடுப்புக் காவலில் வைக்கப் பிடித்தது 17-4-61 ல் அல்லவா! ஒவ்வொரு 17ந் திகதியும் அவசரகால நிலையைப் புதுப்பிப்பதுடன், எமக்கும் தடுப்புக் காவலில் வைத்திருக்கும் அறிவித்தல் பத்திரமும் தருவர். இன்றிரவு—கொஞ்ச நேரம் முன்பு—தர வந்தனர். நாங்கள் மறுத்துவிட்டோம். ஏனெனில் சிங்களத்தில் அப் பத்திரம் இருந்ததே காரணமாகும். எமக்கு விளங்காத மொழியிலிருப்பதை எப்படி ஏற்க முடியும்?

இரகசிய பொலிஸ் பகுதி எமக்கு, விளக்கம் தருவதாகவும், கைது செய்யும் அறிவித்தலையும் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டனர். நாம் அதற்கும் மறுத்துவிட்டோம். எங்கள் அறைக் கதவுகளில் ஒட்டிச் சென்றுர்கள். ஆட்சிபீடத்தின் அநீதிக்கு, எங்கிருப்பினும் எதிர்ப்பை-எங்கள் போராட்டத்தை நாம் தளர்த்தப் போவது கிடையவே கிடையாது. அகிம்சை தோற்றதில்லை! நியாயம் தோற்றதில்லை! உரிமை பறிக்க முடியாதது—அவ்வின மக்கள் போராடத் துணிந்துவிட்டால்—

மகளே! இக் கடிதத்தில் குறிப்பிட்ட பாட்டைப்படி 'திராவிடப் பொன்னுடு' என்ற மெட்டில் படிக்க வேண்டும்.

இதோ அப்பாடல்:...

—ஈழத்தமிழ் நாடு; இசை
வாழும் பொன்னுடு
இயல் இசை நாடகம் அறம்
பொருள் இன்பம்
இலங்கும் எம் தமிழ் நாடு (எங்)

(1) இமயத் தலையில் தமிழ்
ஒலித்தான்
எங்கள் ஈழத்து அரசன்—
இசை அமைத்தே
இன்னமுதிசையால் யாழ்மீட்டி
எங்கள்
முன்னவன் ஒருவன் — புகழ்
சமைத்தான்
இசையினைப் போலே உலகினில்
வேறே இல்லையெனத்
தொகுத்தான்—ஒரு புலவன்
இசையாலே தோன்றி இசையாலே
வாழ்ந்து இசையோடு—உயிர்
ஓம்பும் தாய் நாடு (எங்)

(2) மீன்மகள் பாடும் மணிவாவி
மட்டு நகர் வலம் மேவி
கொலுவிருப்பாள்
திங்களையென வெந்நீ ரூற்று
எங்கள் திருமலை தனிலே
திகழுகிறாள்,
திருமலை போலே உலகினில்
வேறே தேயங்களுளதோ
இயல்பாலே

(13-ம் பக்கம் பார்க்க)

## அமைதியும் உறுதியும்....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

டிய உதவியும் ஈயவேண்டும். அப்போதுதான் மக்கள் மத்தியிலே விடுதலை உணர்வு புத்துயிர் பெற்றெழுந்து அலையா விளக்காயொளிவிடும்.

அரசாங்கத்தின் அநீதியான ஒவ்வொரு செயலையும் எதிர்க்கும் போது நாம் சட்டத்தினுதவியை நாடிச் செல்ல நேருகிறது. வசதியுள்ளவர்கள் வாதாடி வழக்குரைத்து வெற்றி பெறுவார்கள். ஆனல் வசதி குறைந்தவர்கள்? இவர்களுக்குத் தமிழரசுக் கட்சி தான் உதவவேண்டும். ஒவ்வொரு தொகுதிகளிலும் உள்ள தமிழரசு அபிமானிகளான வழக்கறிஞர்களும் இப்படிப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக முன் வர வேண்டும். அப்படி வரும் அந்த நல்லறிஞர்கள் தமது பெயர்களைத் தமிழரசுக் காரியாலயங்களிலே (தங்கள் தொகுதியிலுள்ள) பதிவு செய்து கொண்டால் தேவையானவர்களுக்கு அவர்களுடைய சேவையைத் தரக் கட்சிக் கிளைச் செயலாளர்கள் ஒழுங்குகள் செய்யலாம். இந்த இலவசச் சட்ட உதவியை மனதாரச் செய்ய வழக்கறிஞர்கள் கவருவார்ளேயானல் நாம் பெருமளவு வெற்றியை எதிர்பார்க்கலாம். இவர்களைப் போலவே வைத்தியர்களும் போராட்ட காலங்களிலே தொண்டர்களுக்கு உதவ முன்வர வேண்டும். தாதிகளாகக் கடமையாற்றச் சேவை மனப்பான்மையுடைய பெண்கள் முன்வர வேண்டும்.

எந்தப் போராட்டத்திலும் பிரச்சாரம் பெரும் பகுதியை எடுத்துக் கொள்ளுகிறது. பிரச்சாரம் பலமிக்க ஒரு ஆயுதம். அதைச் சரியானபடி கையாளவேண்டும். பல பொதுக் கூட்டங்களை அடிக்கடி ஏற்பாடு செய்து வருவதோடு தொண்டர்கள் வீடுதோறும் சென்று பிரச்சாரம் செய்யலாம். மேலும் பொதுக் கூட்டங்களிலே ஒலிபரப்பி ஒரு முக்கிய பதவியை வகிக்கிறது. கூட்டம் தொடங்க முன்பும், முடிவடைந்த பின்பும் ஒலிபரப்பப்படும் பாடல்கள் பற்றி எவரும் அதிகம் சிந்திப்பதில்லை. இப்படிப்பட்ட கூட்டங்களிலே விடுதலைப் பாடல் மட்டுமே வைக்கப்படவேண்டும். 'தமிழனென்று சொல்லடா தலைநிமிர்த்து நில்லடா...' என்ற பாடல் எழுப்பும் உணர்ச்சி வேறு 'உலகே மாயம் வாழ்வே மாயம்' என்ற பாடல் எழுப்பும் உணர்ச்சிவேறு. அதேபோல 'வெற்றியெட்டுத்திக்கு மெட்டக் கொட்டு முரசே" என்ற பாடல் தரும் உணர்வை என். எஸ். கிருஷ்ணனின் 'சிரிப்பு'ப் பாட்டுத் தர முடியாது!

(அடுத்த இதழில் முடியும்)

# மக்கள் குரல்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

அடி, உதை கொடுக்கிறுர்களே! உங்கள் கல்மனம் உருகவில்லையா? இப்படியான இழிசெயலுக்கு நீங்கள் உடந்தையாக விருந்து செய்விப்பதற்கு எப்போதாவது ஒரு நாள் வருந்துவீர்கள்; தண்டனை அடைந்தே தீருவீர்கள்.

இத் தமிழ் சமுதாயம் தமிழரசுக் கட்சிக்கே தனிச் சொந்தமல்ல. தமிழ் மக்களுக்கு ஆட்சியாளர் செய்யும் அநீதிகளையும் அட்டூழியங்களையும் தமிழரசுக் கட்சியார் மட்டும் உணர்ந்து எதிர்த்து அடி,உதைப்பட்டு, சிறை சென்று தாங்கொணு இன்னல்படும் வேளையில் இந்த அடிவருடிகள் மட்டும் ஏன் இப்படி இழிசெயல் செய்கிறுர்களோ தெரியவில்லை?

இனிமேலாகுதல் இந்த எட்டப்பர் கூட்டத்தார்கள் இவ் வருந்தத்தக்கச் செயலில் ஈடுபட்டு எம்சமுதாயத்தையே அழித்தொழிக்க சிங்கள தீவிர வாதிகளுக்கு இடம் கொடாதிருக்கும்படி தமிழன்னையின் பெயரால் மன்றுட்டமாக வேண்டுகிறேன்.

சி. இராசம்மா,
கண்டி.

---

### பொய்! அபாண்டம்!

புளித்துப்போன செய்திகளை வெளியிடும் பத்திரிகை ஒன்று, அரசாங்கத்திற்குப் பந்தம் பிடிப்பதற்காகப் பொய்யை உடனுக்குடன் வெளியிடுகின்றது. பொது மக்கள் என்றுல் யார்? ஆதரவாளர் என்றுல் யார் என்று திக்குமுக்காடுகிறது. அர்த்தமற்ற கதையைக் கட்டுகிறது.

தமிழினத்தின் துரோகிகள், நன்றி கெட்டவர்கள், காட்டிக் கொடுக்கும் காக்கை வன்னியரின் சந்ததியினர், சோஷலிச குஞ்சுகள் மந்திரிகட்குப் பந்தம் பிடிக்கும் சொந்தத் தொழிலை பார்ப்பதற்கு சென்ற சனிக்கிழமை (5-1-63) பலாலி விமான நிலையத்திற்கு விரைந்து சென்றனர். ஆனல் உண்மையில் தமிழ் ரத்தம் ஓடும் உடலையுடைய எந்த தமிழனும் அத் துரோகிகளுடைய வரவைப் பொறுத்திருக்க முடியாது.

மந்திரிகளுக்குத் தகுந்த பாடம் கற்பிக்கு முகமாக பலாலி விமான நிலயத்தில் வைத்துக் கறுப்புக் கொடி காட்டியிருக்க வேண்டும். ஆனல் முஸ்லிம் சோதரருடைய இஸ்லாமியக் கலாசாலையைத் திறந்து வைக்கும் முகமாகக் கல்வி மந்திரியும் வந்திருந்தார். ஆனபடியால் விமான நிலயத்தில எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. பருத்தித்துறையில் சிங்கள வெறி பிடித்த மந்திரிக்கு எதிர்ப்புத் தெரிவிக்க நாம் (பொது மக்கள்) சென்று எமது வாழ்வுக்கு வழிவகுக்கும் கட்சியாம் தமிழரசுக் கட்சியின் கீழ் அணியணியாய் திரண்டு நின்றேம். அங்கேயும் துரோகிகள் 'சோஷலிசக்' குஞ்சுகள், கொழும்பில் மாநகரசபை தேர்தலில் மூக்குடைபட்ட வேகத்தில், எம்மீது தம் குரங்குச் சேட்டைகளைக் காண்பித்தனர். அதற்கு உதவியாக ந(க)ரக காவலரும் பொது மக்களைத் தாக்கினர். எமது எதிர்ப்பைக் கண்ட மந்திரிகளுக்கு சில உண்மைகள் யாழ்ப்பாண விஜயத்தின் போது வெளியாகியது. அது என்னவென்றுல், சிங்களத்தைப் பலவந்தமாக நம் மக்கள் மீது திணித்து விட்டு தாம் ஆட்சி செய்ய முடியாதென்றும், தாம் துப்பாக்கி முனையில் வைத்து 30 லட்சம் தமிழரையும் சுட்டு வீழ்த்தி விட்டுத்தான் வடக்கு கிழக்கு மாகாணத்தில் ஆட்சியை நடத்தலாம் என்றும், பொலிஸ் படைகாகக்காவும், 'சோஷலிச' குஞ்சுகள் தம் பரம்பரைத் தொழிலைச் செய்வதற்காகவும் தம்மை வரவேற்பார்களேயொழிய, எந்த தமிழ் மகனும் தம்மை ஆதரிக்க மாட்டார்கள் என்பதும் தான் அவர்கள் படித்த உண்மைகள்.

காலத்திற்குக் காலம் தொப்பி புரட்டும் பழைய புளித்த செய்திகளை வெளியிடும் பத்திரிகை 'கேசரி' கடந்த ஞாயிற்றுக்கிழமை இதழில் உண்மையைப் புரட்டி, மக்கள் மனதில் மண்ணைத் தூவுவதற்காக, 'தமிழரசு ஆர்ப்பாட்டக்காரருக்கும் பொது மக்களுக்கும் மோதல்' என்றும், அதனுல் பொலிசார் தலையிட்டனர் என்றும் செய்தி வெளியிட்டது.

இது சுத்தப் பொய்! ஆதரவாளர் பொது மக்களில்லையா? அப்படியாயின் 'சோஷலிச' ஆதரவாளர் தானே அமைதியைக் குலைத்தனர்? அவர்களைப் பொது மக்கள் என்கிறதே! அபாண்டக்காரர் இனிமேலாவது இப்படிப் பொய் கூறுதிருக்கக்கடவர்.

'இணுவையூர் ஆனந்தன்',
இணுவில்.

---

### துரோகச் செயல்

யாழ்ப்பாணத்தில் கடந்த 5-1-63ல் கூட்டுறவு மொத்த விற்பனை நிலயத்தை திறந்து வைப்பதற்கு உணவு மந்திரி திரு. டி.பி. இலங்கரத்னு வருகிறுர் என்ற செய்தி கேட்டு நாலா பக்கங்களிலுமிருந்து ஆயிரக் கணக்கான தமிழ் பேசும் மக்கள் கூடி மந்திரியின் வருகையை எதிர்த்துக் கறுப்புக் கொடிகளைக்காட்டி தங்கள் எதிர்ப்பை அமைதியான முறையில் அரசாங்கத்திற்குக் காட்டுகையில், பொலிஸ்காரர்களால் கைகளாலும், கால்களினுலும், குண்டாந் தடிகளாலும் அநியாயமான முறையில் தாக்கப்பட்டது, அரசாங்கத்தின் அடக்குமுறை ஆட்சிக்குப் போதிய அத்தாட்சியாகும்.

இதன் பின் நடைபெற்ற மேற்படி நிலயத்திறப்பு விழாவில் சில தமிழ் பிரமுகர்களும் 40, 50 கூலிக்கு மாரடிக்கும் பட்டாளங்களும் கலந்து கொண்டு பானவகைகள் அருந்தி, சிற்றுண்டிகள் உண்டு தங்கள் வயிற்றை நிரப்பிய செய்கை வெட்கமும் துக்கமும் அடையக்கூடிய துரோகச் செயல் என்றே கூறவேண்டும். இப்படி தமிழ் பேசும் மக்களுக்குத் துரோகம் செய்யும் துரோகிகளை இந்நாட்டில் இருந்து ஒழித்தால்தான் தமிழ் பேசுமினம் விடுதலை பெற முடியும் என்பது திண்ணம்.

இதைவிட இங்கு வந்த உணவு மந்திரி அவர்கள் கண்ட காட்சி பரிதாபத்திற்குரியதொன்றுகும். 77 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் வாழும் யாழ் நகரில் ஒரு நூறுபேர் தானும் இவ்விழாவில் கலந்து கொள்ளாததொன்றே இன்றைய வகுப்புவாத அரசாங்கத்திற்கு ஓர் பாடமாக அமைந்துள்ளது என்பதை எவரும் மறைக்க முடியாது.

மு. செ. நடராசா,
நவக்கையடி,
வேலணை.

சாதி வெறியைச் சாடி, சமதர்மத்தை நிலைநாட்டும் சிறந்த சித்திரம்

# தாயில்லாப் பிள்ளை

பதஞ்சலி சாஸ்திரி ஒரு வைதீகர். அவர் தேர்தலில் தோல்வியடைந்ததற்குக் காரணமாயிருந்த சீர்திருத்தவாதி டாக்டர் பாரதியிடம் தனது மனைவி பார்வதி சிகிச்சை பெற்றதனால் ஆத்திரமடைந்து கர்ப்பிணியான தன் மனைவியை வீட்



டைவிட்டுத் துரத்துகிறார். பார்வதி தனது தமையனான டாக்டர் பாரதி வீட்டிலேயே குழந்தையைப் பெறுகிறாள்.

குடியானவனான பொன்னனின் குழந்தையும் டாக்டர் வீட்டை வந்தடைகிறது. பதஞ்சலி தன் குடும்பத்தாருடன் சேருகையில் குழந்தை மாறாட்டம் ஏற்படுகிறது.

இப்படியான ஒரு சிக்கலை வைத்து கலைஞர் மு. கருணாநிதி தாயில்லாப் பிள்ளையை உருவாக்கியுள்ளார். காலத்துக்கேற்ற வகையில் விறுவிறுப்பான வசனங்களை அமைத்து படத்தின் தரத்தை உயர்த்தி விட்டார் கருணாநிதி.

கவிஞர் கண்ணதாசனின் ஆழ்ந்த கருத்துள்ள பாடல்கள் பல இப்படத்தில் பிரகாசிக்கின்றன. "சின்னச் சின்ன ஊரணியாம்", "ஊரார் அடித்துவிட்டால் தாயார் அணைத்திருப்பாள்" ஆகிய

## எமது விமர்சனம்

பாடல்கள் உள்ளத்தைத் தொடுகின்றன. சீர்காழி கோவிந்தராஜன், சவுந்தரராஜன், சூலமங்கலம் ராஜலட்சுமி ஆகியோரின் இசை கேட்போரைக் கிறங்க வைப்பதாய் அமைந்துள்ளன.

ஒலி, ஒளிப்பதிவு அம்சங்கள் சிறப்பாக அமைந்துள்ளன. 'மனோகரா' படத்தை சிறப்பாக டைரக்ட் செய்த பிரசாத் இப்படத்தை தயாரித்து சிறப்பாக டைரக்ட் செய்திருக்கிறார்.

கதையமைப்பில் கருணாவின் மைத்துனராக வந்து கோமாளிக் கூத்தடிப்பவரின் பாகம் இல்லாதிருந்தால் கதை இன்னும் விறுவிறுப்பாக இருந்திருக்கும்.

பாலையாவின் நடிப்பு உச்சத்தில் உள்ளது. ராஜம்மாவின் நடிப்பு பாராட்டுக்கு உரியது. முத்துக் கிருஷ்ணனும், கல்யாண் குமாரும் தத்தம் பாகங்களை நன்றாக நடித்திருக்கிறார்கள். ராமராவும், முத்துலட்சுமியும் சோடியாக வந்து நகைச்சுவை விருந்தளிக்கிறார்கள். மனோகர் சில காட்சிகளில் மட்டும் வந்தபோதிலும் மிக நன்றாக நடித்துள்ளார். பிரபலமாகாத புதுமுகங்களைக் கொண்டு வெற்றிகரமாக இப்படத்தைத் தயாரித்த பெருமை டைரக்டர் பிரசாத்துக்குரியது. மொத்தத்தில் குடும்பத்தோடு சென்று பார்க்க வேண்டிய சிறந்த பொங்கல் வெளியீடு இது.

'ராஜ்-விக்கி'

## விமலா உதயணன் புரொடக்ஷன்ஸ்

### பிலிம் கொமிஷனுடன் பேட்டி

விமலா உதயணன் புரொடக்ஷன்ஸ்சாரின் திருவாளர்கள் த. சொக்கநாதன், செ. சதாசிவம், மனோகரன், மயில்வாகனம், க. செல்வராசா ஆகியோர், இலங்கை பிலிம் கொமிஷனைச் சென்ற புதன்கிழமை காலை 9 மணியளவில் பேட்டி கண்டனர். இப்பேட்டி, பிலிம் கொமிஷன் அழைப்பிலேயே நடைபெற்றது.

விமலா உதயணன் புரொடக்ஷன்சாரின் பிரதம ஆலோசகரான திரு. செ. சதாசிவத்தின் பல யோசனைகளை பிலிம் கொமிஷனர் மனமுவந்து வரவேற்றனர். அவற்றைத்தாம் நிர ஆலோசிப்பதாகத் தெரிவித்தனர்.

பிலிம் கொமிஷனில் திருவாளர்கள் ரி. விக்கிரமசிங்க, ரெஜி சிரிவர்த்தன, பாலி விஜயமன்ன ஆகியோர் இருந்தனர்.

சிறப்புற விளங்கும் பிரமாண்டமான

# அக்பர்

இந்துஸ்தான் சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்து ஏக சக்கரவர்த்தியாக விளங்க அக்பர் முயன்று கொண்டிருந்த வேளையில், அவருடைய மகன் சலீம், நர்த்தகி அனார்க்கலியின் மேல் காதல் கொள்கிறான். அனார்க்கலி சலீம் காதலை அக்பர் வரவேற்கவில்லை. இந்துஸ்தானத்தின் அரிய சிம்மாசனத்தில் தன் மகனை இருக்க வைத்து இன்புற நினைத்த அக்பர் தன் மகனின் காதலை வெட்டிப் பிரிக்க முனைகிறார்.

முடிசூட்டப்பட வேண்டிய இளவரசன் சாதாரண இளநங்கையின் அரவணைப்பில் கட்டுண்டு கிடப்பதை அக்பர் அனுமதிக்கவில்லை. கட்டுப்பாடுகளை விட்டெறிந்து காதலுக்கு முடிபுனையத்துடித்த சலீமின் போக்கை முறியடித்து வெற்றி காண்கிறார் அக்பர். இது தான் 'அக்பரி'ன் கதை.

'மொகல் ஏ ஆஸம்' என்ற ஹிந்திப் படம், வட இந்தியாவிலும், தமிழகத்திலும் வெற்றிக் கொடி நாட்டியதைக் கண்ணுற்ற ஜெமினி அதிபர் எஸ். எஸ். வாசன் இப்படத்தைத் துணிந்து தமிழில் வெளியிட்டார்; வெற்றியும் கண்டார்.

படத்தை தயாரித்த அஸீப் அலி ஏராளமான பணத்தை வாரி இறைத்துள்ளார். காட்சி அமைப்புக்காகவே லட்சக் கணக்கான ரூபாய்கள் செலவிட்டுள்ளனர். கலை அம்சங்களுக்காகவும் செலவு அதிகம் ஏற்பட்டிருக்கிறதாம்.

படப்பிடிப்பு அம்சங்கள் சிறப்பாக அமைந்திருக்கின்றன. ஒரே காட்சியை பல்லாயிரக்கணக்கான தோற்றத்தில் காண்பிப்பதில் புதுமையைப் புகுத்தியுள்ளனர்.

'டப்' செய்துள்ள முறை பாராட்டக்கூடிய வகையில் அமைந்துள்ளது. அசல் தமிழ்ப் படமாகவே தென்படுகிறது.

நடிப்பதில் அக்பராகத் தோன்றும் பிரிதிவிராஜ் சிறப்பாக நடித்துள்ளார். சலீமாகத் தோன்றும் திலிப் குமாரின் நடிப்பு, ஒரு சில கட்டங்களிற் தவிர, மற்றும் பல கட்டங்களில் தவறி விட்டது. அனார்க்கலியாக வரும் மதுபாலா பரவாயில்லை.

சிறப்பான கலை அம்சங்கள் கொண்ட நல்லபடம்.

—நாதன்—



இன்னிசையால் இலங்கை ரசிகர்களைக் கவர்ந்த 'துலாரி' மீண்டும் சினிமாஸ் திரைகளுக்கு வருகிறது. துலாரி ஹிந்திப் படத்தில் மதுபாலா இப்படித் தோன்றுகிறார்.

## படமும் பெயரும்

தாயில்லாப் பிள்ளையைத் தயாரித்த பிரசாத் புரொடக்ஷன்ஸார் சிவாஜி, சரோஜாதேவி, ரங்கராவ், சந்தியா, பத்மினி பிரியதர்சினி, எம். ஆர். ராதா, டி. ஆர். ராமச்சந்திரன், முத்து லட்சுமி முதலியோர் தோன்றும் தங்கள் அடுத்த படத்துக்கு 'பெண் மனம்' என்று பெயரிட்டிருந்தார்களல்லவா? இப்பொழுது அதே படத்துக்கு 'இருவர் உள்ளம்' என்று பெயர் மாற்றியுள்ளனர்.



சிவாஜி, எம். என். ராஜம், சந்திரபாபு, ஆகியோர் கூடிக் கும்மாளம் போடுவதைப் பார்த்தால் ரசிகர்கள் உள்ளமெல்லாம் ஆட்டம் போடத்தானே செய்யும். 'பெற்ற மன'த்தில் தான் இவர்கள் இப்படிக் கூத்தடிக்கிறார்கள்.



'காவலன் கடுங்கோன்' நாடகத்தில் கண்டகத் தேவனாகத் தோன்றும் திரு. வி. எஸ். இரத்தினம்.

நாடக விமர்சனம்:

# காவலன் கடுங்கோன்

கொழும்பு கலாவிருத்திச் சங்கத்தார் அண்மையில் அளித்த 'காவலன் கடுங்கோன்' என்னும் சரித்திர நாடகம் வெற்றியீட்டி விட்டது என்றால் மிகையாகாது. நாடகக் கருப்பொருளாய்ப் பாண்டி நாட்டு வரலாற்றில் களப்பிரர் கால நிகழ்ச்சி ஒன்று அமைந்துள்ளது. வரலாறு மீண்டும் பிரதிபலிக்குமென்பர் சான்றோர். அஃது களப்பிரர் ஆதிக்கம்; இஃது சிங்களவர் ஆதிக்கம். அன்று பாளி மொழி அரசு ஓச்சியது; இன்று சிங்களம் நர்த்தனம் புரிகிறது. இவ்வகையில் இந்நாடகம் காலத்துக்கேற்ற வளங்கொண்டதாய், மக்களிடத்தில் நாட்டுப் பற்று மொழிப் பற்றுகளை ஊட்டக்கூடியதாய் அமைந்திருந்தமை பாராட்டற்குரியது.

மேடையை நோக்கினோம்; மதுரை மீனாட்சியம்மன் வீதிக் காட்சி; நாடகந் தொடங்கி விட்டது. திரைப் படம்போல் ஒன்றன் பின் ஒன்றாய்ப் பதினைந்து காட்சிகள்; முடிசூட்டு விழாவோடு முடிவடைகிறது நாடகம். தொடக்கமும் முடிவும் நன்கு அமைந்து பாராட்டுக்குரியனவாயிருந்தன. கண்டகத் தேவனாய் நடித்த வி. எஸ். இரத்தினம் தமது பாத்திரத்தை உணர்ந்து வெகு கச்சிதமாக நடித்தார். கடுங்கோன் பாத்திரத்தைச் சிறப்புடன் ஏற்று நடித்த திரு. ஆலாலசுந்தரம் சில கட்டங்களில் நன்கு சோபித்தாரெனினும், ஆங்காங்கே அவரின் வசனங்கள் தெளிவான முறையில் கேட்காத வண்ணம் விரைந்து சென்று விட்டன. களப்பிரத் தளபதியாக நடித்த திரு. பாலசிங்கம் புதிய நடிகன் என்ற முறையில், அவரின் தோற்றமும் பாவனையும் முறையாக அமைந்திருப்பினும், தம் பாத்திரத்தை உணர்த்துவதற்கு அவர் இன்னும் சிறிது கவனம் செலுத்தியிருந்தால் நன்கு சோபித்திருப்பார். நகைச்சுவை நடிகர்களில் சோலையாகத் தோன்றிய திரு. கணேஷ பிள்ளையின் உச்சரிப்புத் தெளிவாக இருந்த போதிலும் அவரின் ஹாஸ்யம் இரசிகர்களின் உள்ளத்தைத் தொட முடியாமற் போய் விட்டது. ஐயனடியாள் பாகத்தை ஏற்ற செல்வி நிர்மலாவின் சோக நடிப்பில் குறை சொல்ல முடியாதெனினும், சில இடங்களில் தலையை உயர்த்தி மேலே பார்ப்பதைக் குறைத்திருக்கலாம். இளவரசியாக நடித்த செல்வி ரதிதேவியும், வைகையாக நடித்த செல்வி சந்திராவும் தமது பாகங்களை உணர்ந்து நடித்திருந்தனர்.

நான்காவது காட்சியில் வந்த மருதப்பா—காவலாளிகள் சம்பாஷணை, நந்தவனத்தில் வைகை—பூபாலி ஆட்டம், நந்தவனக் காட்சியின் இசை என்பன அத்துணைப் பொருத்தமுடையனவாய் அமையவில்லை. இப்பொருத்தமில்லா இசை அக்காட்சியின் துடிப்பை இழக்கச் செய்து விட்டது.

வரலாற்று நாடகத்தின் தன்களாய் ஆடையணிகள், ஒப்பனைகள் அமைய வேண்டும் என்பதை உள்ளத்திற் கொண்ட தயாரிப்பாளர்கள் அவற்றை மிகுந்த பொருட் செலவில் தயாரித்து சரித்திர கால பாத்திரங்களைத் தத்ருபமாக நம் முன் நடமாடச்செய்து நமது கண்களுக்கு விருந்தளித்தனர். அங்கவையின் பாடல்களை இசையும் குரலும் இணைய இசைத்தவர்களும் பாடியவர்களும் செவிக்கு விருந்தளித்தனர்.

இவ்வாறு நாட்டுப் பற்று; மொழிப் பற்றுகளைக் "காலமும் மாறத்தான் போகிறது; தமிழர்களுக்கு விடிவும் ஏற்படத்தான் போகிறது. எம் உயிரான தமிழ் மொழிக்கு உரிய அரியாசனம் கிடைக்கும் வரை எமது போராட்டம் ஓயப் போவதில்லை" முதலிய வீறு கொண்ட வாக்கியங்களால் உணர்த்தி, கருத்துக்கும், கண்ணுக்கும், செவிக்கும் விருந்தளித்த நல்ல சரித்திர நாடகமொன்றைப் பார்த்தோமென்று மகிழ்ச்சியோடு கூற முடிந்தது.

—நீ. மே. யோ. வே.

இந்நாட்டின் முன்னேற்றத்துக்கு

# உழைத்தவர்கள் உரிமையற்ற ஊமைகளா?

## போராட்டம் வலுவடைய ஒற்றுமையே அவசியம்

### மஸ்கெலியாவில் தொழிலாளர்கழகத் தலைவர்கள்

**இந்த நாட்டின் முன்னேற்றத்திற்கு முதுகெலும்பாக விளங்கும் மக்கள் எவ்வித உரிமைகளும் அற்ற ஊமைகளாக வாழ் கிருர்கள். காரணம் அவர்கள் தமிழர்கள் என்பதே தான். இந்நாட்டின் ஆட்சி பீடம் தொடர்ந்து எடுக்க விருக்கும் நடவடிக்கைகள் மலையக மக்களாகிய உங்களை வாழ வழியற்றவர்களாக்கப் போகிறது. இந் நிலையைப் பார்த்துக் கொண்டு நாம் மேலும் ஊமைகளாக வாழ முடியாது. ஆகவே தமிழ் பேசும் மக்கள் அனைவரையும் ஒரே அணியில் ஒன்று திரட்டி நமது வருங்காலப் போராட்டத்தை வலுவுள்ளதாக மாற்றுவது என்ற முடிவுக்கு வந்துள்ளோம்.**

**இவ்வாறு கடந்த 13ந் தேதி பிற்பகல் மஸ்கெலியாவில் இலங்கைத் தொழிலாளர் கழகத் தலைவர் டாக்டர் இ. மு. வி. நாகநாதன் தலைமையில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரை நிகழ்த்துகையில் உடுவில் பிரதிநிதி திரு. வி. தர்மலிங்கம் குறிப்பிட்டார்.**

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-- இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கடந்த கால வரலாறு யாவரும் அறிந்ததே. பிளவுண்டு, பிரிவு பட்டு, பிரதேச வேற்றுமைகள் பல நிலவிய வட-கிழக்கு மாகாணத்தை முதல் முதல் ஒன்று படுத்திய பெருமை இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கே உரியது. ஆகவே இன்று பிளவு பட்டுச் சிதறுண்டு நிற்கும் உங்களையும் நமது மூவர்ணக் கொடியின் கீழ் ஒன்று படுத்தி, ஒரே போரணியில் நின்று உரிமைகளைப் பெறுவோம் என்ருர்.

#### பக்கபலமாய் இருந்தோம்

அடுத்து ஜனுப். எஸ். இஸட். எம். மசூர் மவ்லாஞ பேசுகையில் கூறியதாவது:--

"தோட்டத் தொழிலாள மக்களின் நலவுரிமையைப் பேணிக் காக்கும் பொறுப்பை இ. தொ. காங்கிரசும் ஐ. தொ. காங்கிரசும் செவ்வனே மேற் கொண்டு செயலாற்றும் என்ற எண்ணத்தினுல் இதுவரை அவர்களுக்கெந்தவித இடையூறுமின்றி மட்டுமல்ல, அவர்களுக்குப் பக்கபலமாகவும் இருந்து வந்தது இலங்கைத் தமிழரசுக் கட்சி. ஆனுல் இன்று, அந்த இரண்டு காங்கிரசும் தலைமைப் பீடத்தைக் காப்பாற்றும் பணியில் மட்டும் செயலாற்றுகின்றனவே தவிர, தொழிலாளர்களின் இழந்த உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க எந்தவித நடவடிக்கையும் எடுப்பதாகத் தெரியவில்லை.

#### தமிழரசுக் கட்சி பிரவேசம்

எனவே தான், தமிழ் பேசும் மக்கள் எங்கிருந்தாலும், அவர்கள் யாவரும் ஒன்றுபட வேண்டும், அவர்கள் உரிமையோடும் மானத்தோடும் வாழ வேண்டும் என்று, திட்டமிட்டுச் செயலாற்றும் ஒரே ஒரு கட்சியாகிய இலங்கைத் தமிழரசுக் கட்சி மலை நாட்டுக்குள் காலடியெடுத்து வைக்க வேண்டி நேரிட்டது. இரண்டு காங்கிரசுகளிலும், அதன் தலைவர்களிலும் நம்பிக்கை இழந்த தோட்டத் தொழிலாளர்கள், புகலிடமின்றி, அன்றும் இன்றும் அவர்களுக்கு விரோதமாகவே செயலாற்றி வரும் கட்சிகளாகிய ஐ. தே கட்சி தொழிற்சங்கத்திலும், சுதந்திரக் கட்சி தொழிற்சங்கத்திலும் கூடச் சேர ஆரம்பித்து விட்டனர். அந்த ஆபத்து இனி மேலும் நீடிக்காது. பரிசோதிக்கப்பட்டு, திட்டவட்டமாக நம்பிக்கை வைக்கலாமென்று சகலரும் முடிவு கட்டியுள்ள தலைமைப்பீடத்தை உடைய இ. த. அ. கட்சி மலைநாட்டுக்குள் பிரவேசித்து, "இலங்கை தொழிலாளர் கழகம்" என்ற தொழிற்சங்கத்தை ஸ்தாபித்துள்ளது. சகல தொழிலாளரும் இதில் நம்பிக்கை வைத்து ஆயிரக் கணக்கில் அங்கத்தவராகச் சேருவார் என்பதில் எந்தவித ஐயப்பாடோ கிடையாது. இலங்கைத் தமிழரசுக் கட்சி கஷ்டப்பட்டு, நஷ்டப்பட்டுப் பழகிய கட்சி. எனவே ஆரம்பத்தில் அவர்களை எதிர் நோக்கும் கஷ்ட நஷ்டங்களைப் பெரிதெனக் கருதமாட்டாது. இறுதியில், அதி விரைவில் வெற்றி இ. த. கட்சிக்கும் அதன் தொழிற் சங்கமாகிய இ. தொ. கழகத்துக்குமே தான்.

#### நண்பர் அஸீஸின் கூற்று

அண்மையில் நண்பர் அஸீஸ் அவர்கள் பேசிய ஒரு பேச்சு பத்திரிகையில் கண்டேன். அவரது பேச்சில் பல உண்மைக்கு வேறுபட்ட காரியங்களை வேண்டும் என்றே கூறியிருப்பதைக் காணக் கூடியதாக விருந்தது. அண்மையில்தான் இலங்கைத் தமிழரசுக் கட்சி பிரஜாவுரிமைப் பிரச்சினையைக் கிளப்பி உள்ளதென்று அவர் கூறியிருப்பது அவர் வேண்டுமென்றே தோட்டத் தொழிலாளர்களை ஏமாற்றத் திட்டமிட்டுள்ளார் என்பதை வெளிப்படுத்துகிறது. இலங்கைத்



ஜனுப். எஸ். இஸட். எம். மசூர் மவ்லாஞ

தமிழரசுக் கட்சியின் ஆரம்பமே பிரஜாவுரிமைப் பிரச்சினைதான் என்னும் உண்மையை நண்பர் அஸீஸ் எவ்வளவுதான் மறைத்துப்பேசினுலும், தொழிலாளர் இதை மறக்க மாட்டார்கள். என்னைப் பொறுத்த அளவில் இ. தொ. காங்கிரசைவிட நண்பர் அஸீஸின் தலைமையில் இயங்கும் ஐ. தொ. காங்கிரஸ் திடகாத்திரத்துடன் செயலாற்றும் என்று நம்பி இருந்தேன். ஆனுல் நண்பர் அஸீஸ் கூட தலைமைப் பீடத்திற்காகத்தான் பாடுபடுகிருர் என்பதை ஐயந்திரிக்கு இடமின்றி நான் கண்டு கொண்டேன். அவர் எனது நல்ல நண்பர்களில் ஒருவர். ஆனுல், இனத்தவர், நண்பர், தெரிந்தவர் என்பனவற்றைக் கடந்து நிற்பதுதான் விடுதலைப் போராட்டம். ஆகவே எமது இயக்கத்திற்கு விரோதமாக இல்லாததையும் பொல்லாததையும் எவரும் சொல்ல முற்படும் போது, அப்படிச் சொல்லுபவர்களிடம் உள்ள பல "உள் செய்தி"களைச் மனவருத்தத்தோடு மக்கள் மத்தியில் எடுத்துச்சொல்ல வேண்டிவரும், அதைக் கடைசி வரைக்கும் தடுக்க வேண்டுமென்பதுதான் எமது ஆசை.

அடுத்து திரு டி.கே. தென்னரசு பேசுகையில் கூறியதாவது: இன்று தமிழ் இனத்தின் முதலெதிரியாக, ஆட்சி பீடத்தின் அடிவருடியாகக் கடமையாற்றி வருகிறது ஒரு தமிழ்த் தினசரி. இப்பத்திரிகையின் செயல் இந்நாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்களை, ஆட்சிபீடத்தின் நிரந்தர அடிமைகளாக்குவதற்கு ஒத்துழைப்பதாக அமைகிறது.

எனவே தமிழ் பேசும் மக்களின் முதல் வேலை இந்தத் துரோகச் செயலில் ஈடுபட்டுள்ள வீரகேசரிப் பத்திரிகையை வெறுத்து ஒதுக்குவதே.

#### நான் தேடிய தலைவன்

அடுத்து இலங்கைத் தொழிலாளர் கழக உப தலைவர் திரு. ஆர். எம். இராமையா பேசுகையில் கூறியதாவது: மலையக மக்களின் உயர்வுக்காக நீண்ட காலம் உழைத்துள்ளேன். முடிவில் எதுவுமே மனத்திருப்தி தருவதாக அமையவில்லை. காரணம் மலையக மக்கள் சுய நலக் கும்பலின் சூத்திரப்பாவைகளாகவே உள்ளனர். இதை உணர்ந்து பொதுத்தொண்டுகளைத் துறந்து சில காலம் அமைதியாக வாழ்ந்தேன். ஆனுல் அன்று தந்தை செல்வா அவர்களைக்கண்டதும் எனது



திரு ஆர். எம் இராமையா

துறவறத்தைத் துறந்துவிட்டேன். நான் தேடிய தலைவன், இப்பொழுது கிடைத்து விட்டார் என்று எனது உள்மனது கூறியது. எனவே மீண்டும் செயல்பட முடிவு செய்துள்ளேன்.

மலையக மக்களுக்கு உண்மையான இயக்கம் கிடைத்துவிட்டது செயல்படுவதற்கு. எனவே இனித் தயக்கம் வேண்டாம் மலையக மக்களே. விரைந்து வாரீர் செயல்பட. ஒன்றுபட்டுப் போராடுவோம். உரிமை பெறுவோம், அன்றேல் ஒன்றுபட்டு மடிவோம்.

திருவாளர்கள்: எஸ். ஜே. வி செல்வநாயகம் ம. பி., வி. என். நவரத்தினம் எம். பி., கே. ஏ. இராமன், எம். கிருஷ்ணசாமி முதலியோரும் கலந்து உரை நிகழ்த்தினுர்கள்.

---

## அன்பு மகள்...

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

திகழ்கின்ற குன்றில் இரைகின்ற
சங்கின் திரை வந்து
மோதும் தாய் நாடு (எங்)
(3) வன்னி நாட்டின் வளம்
கொழிக்க எங்கள் வண்டமிழ்
வீரர் ஏர்பிடிப்பார்,
மன்னூர்க்கடலின் முத்தெடுத்து
எங்கள்
மானத் தமிழர் வடமமைப்பார்
மலைகளின் மேலே வளர்
பயிராலே
மலை வாழ் தமிழர் வாழ்
வளிப்பார்
மறங் கொண்ட நெஞ்சில் அறங்
கண்டு விஞ்சி புறங் கொண்டு
வாழும் தாய் நாடு (எங்)
(4) யாழ் நகர் பிறந்து தமிழ்
காத்தான்
எங்கள் நாவலன் இறவாப் புகழ்
போத்தான்,
ஞானத்திறலின் மொழி
ஆய்ந்தே
எங்கள் ஞானப்பிரகாசன்
மொழி வளர்த்தான்,
கலைக்குயில் போல் இஸ்லாமிய
மாதர் கவிகளில் கன்னித்
தமிழ் இசைத்தார்
கலையாத சொத்து இசையாழ்
நூல்வித்து விபுலானந்தன்
தந்த புகழ் ஏடு (எங்)
அன்பரசி! நீ வளர்த்து
பாடு—ஈழமே பாடட்டும்!
உனது அப்பா,
புதுமைலோலன்.
(அடுத்த இதழில் முடியும்)

## பொங்குக...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்பங்கள் பொங்குக இத் தைப் பொங்கலில், இலங்கைத் தொழிற் கழகத்தின் எண்ணங்கள் மலை மக்கள் மனத்தில் தங்குக எனப் போற்றிக் கொண்டாடுவோம் இத் தைப் பொங்கலை. அல்லற்படும் தோட்டத்து சமுதாயம் உய்யும் வண்ணம் உயர்வடைந்து, தமிழ் மக்களின் உரிமை வாழ இக் கழகம் என்றென்றும் எம் நாட்டில் வளர வேண்டும். பொங்குக இன்பம், தங்குக உரிமை என்றும்.

## ஒரு கொடிக் கீழ்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒற்றுமைப்பலத் தால் ஒன்று கூடி முறியடித்து உரிமையோடு வாழலாம். இந்த நல்ல முடிவு ஈழத்தில் தமிழரிடையே விடிவெள்ளி தோன்ற தமிழரசுக்கட்சி பாடுபட்டு உழைக்க வேண்டும்.


உங்கள் எழிலை எடுத்துக் காட்டுவன;
லதா மணிப்புரி சாரிகளே!!



லதா
மணிப்புரி
சாரிகள்;

முற்றிலும் புதிய பிளேன்; அன் ஷொட் நிறங்களில்; அழகிய தங்க நூலினுலான கிழைத்தேய டிசைன்களாலும் 3" போடர் நெடுகிலும் தங்க நூலால் இழைக்கப் பட்ட டிசைன்களாலும் அலங்கரிக்கப் பட்டுள்ளன.

45" X 6 யார்

சாரிகளுக்கேற்ற பிளவுஸ் புடவைத் துண்டுகளும் உண்டு.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மாலை நாலு நாற்பத்தைந்திலிருந்து ஐந்து மணி வரை இலங்கை வானெலி வர்த்தக ஒலி பரப்பில் குண்டன் மால்ஸ் ஸ்தாபனத்தார் அளிக்கும் "லண்டன் சந்தையார்" நிகழ்ச்சியைக் கேட்டு மகிழுங்கள்.

எலைட் சுப்பர்லோன்
வியாபாரிகள் எல்லோரிடமும் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:-
குண்டன்மால்ஸ் லிமிட்டெட்,
மொத்த விற்பனைப் பகுதி: 26, கெய்ஸர் வீதி,
சில்லறை விற்பனைப் பகுதி, 110&114, மெயின் வீதி:
கொழும்பு.

—Mylads/KL.16/63—

# தாய் மொழி விழிக்கு நிகர்

—நா. சிவதாசன்—

"தமிழனென்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா" என்று வீர மொழி பாடிய பாரதியார் கூறியது யாவும் ஏட்டிலேயே அடங்கி விட்டதா? அல்லது ஒவ்வொரு தமிழ் மகனிடமும் குடி கொண்டிருக்கின்றதா? என்ற இரு கேள்வியைக் கேட்டால், பாரதியார் பாடியதெல்லாம் ஏட்டிலேயேயில்லாமல் பாரினிலே வீரநடையுடன் செல்லும் வீரத் தமிழனின் உடலில் ஓடும் குருதியுடன் இரண்டறக் கலந்து ஓடுகின்றது என்று கூறினால் அது மிகையாகாது.

"மொழி விழிக்கு நிகர்" எனக் கூறிய பெரியார்களை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது, கண்இமையானது எப்படி உள்ளிருக்கும் விழியைக் காப்பாற்றி வருகின்றதோ அதேபோன்று தமிழனானவன் தன் மனதினுள் இருக்கும் மொழியைக் காப்பாற்றி வரவேண்டும். அதுவே தமிழ்த் தாய்க்குச் செய்யும் ஓர் பெரிய உதவியாகும். ஒரு பெரிய உடலை சிறிய விழியானது எப்படி நடத்திச் செல்கின்றதோ அதே போல் மொழியும் பண்புகொண்ட சமூகத்தை காப்பாற்றி வருகின்றது. விழிக்குப் பங்கம் ஏற்பட்டால் அவ்வுடலானது நேரிய முறையில் நடக்க முடியாமல் போய் விடுவதுபோல் மொழிக்கும் இடர் ஏற்பட்டால் அந்தச் சமூகமே தலை குனிந்து கைகட்டி வாழ வேண்டிய நிலை ஏற்படும் என்பதில் சந்தேகமேயில்லை.

அந்நிய நாட்டு மொழிக்கும் நாகரீகத்திற்கும் நாமும் நம்முடைய வாழ்க்கையும் சிக்குமேயானால் "தமிழன் என்று சொல்லாதே தலை குனிந்து நின்றிடு" என்று மாறிப்பாட வேண்டியே ஏற்படும். ஆகையினால் நாம் 'மேல் நாட்டு நாகரீகம்' என்ற மாயவலையுள் வீழ்ந்து விடக் கூடாது. தவறுதலாக வீழ்ந்து விட்டால் தனிப் பண்புடைய தமிழினத்திற்கு என்றும் அகற்ற முடியாத இழுக்கு ஏற்பட்டு விடும். ஆனபடியால் அந்நிய நாட்டவரின் பண்பாட்டையெண்ணியும் பார்த்து விடக் கூடாது.

அந்நியரின் மொழியை உபயோகிப்போமானால் நாம் தமிழ்த் தாய்க்குப் பிறந்த தமிழ் மகன் அல்லவென்று துணிந்தே கூறிவிடலாம். இனிமை பொருந்திய நம் மொழியிருக்க "வியாபாரத்திற்கு வந்த பொருள்" போல வந்த வேற்று மொழியை விலை கொடுத்து வாங்கி, எம்முடைய வாழ்க்கையில் இயற்கையாக அமைந்த இன்பத்தைக் களைத்து விடுவது போலாகிவிடும். ஆகையினால் தமிழ்த் தாய்க்குப் பிறநத தமிழ மகனே! உன்னிடம் ஓர் வேண்டுகோள்:— உன்னுடைய தந்தை தாயாரை எப்படிப் பேணி நடந்து கொள்கின்றாயோ அதுபோல் விழிக்கு நிகரான தமிழ் மொழியையும் ஒரு விதமான பங்கம் ஏற்படவிடாமல் காப்பாற்றி நடந்து கொள்வதே தமிழ்த் தாய்க்கு நீ செய்யும் ஓர் பேருதவியாக விளங்கும் என்பதில் எள்ளளவேனும் ஐயமில்லை.




# இயற்கை இன்பம்

(ஜெயராணி வேலாயுதம்பிள்ளை, பொறலை)

இயற்கை அன்னையானவள் தன் வண்ண மேனியின் வடிவலங்காரங்களை ஆதவனின் உதயத்திலே, மந்த மாருதம் தவழும் மாலையிலே, அழகு நிலாவின் பவனியிலே, மலையின் வளர்ப்பிலே, பூத்துக் குலுங்கும் பூங்காவிலே, சோலையிலே என்றெல்லாம் காட்டி மாந்தரை புளங்காகிதம் கொள்ளச் செய்கின்றாள்.

காலை ஞாயிறு ஆனவன் தன் பொற் கிரணங்களை நாற்புறமும் நீட்டி, தகதகவெனத் தங்கப் பிம்பம் போலக்கிழக்கு வானத்திலே உதயமாகிறான். அவன் வரவைக் கண்ட தாமரையானவள் தன் மென் இதழ்களை விரித்து வரவேற்கிறாள். துயில் கொண்டிருந்த பட்சிசாலங்கள் இரை தேடிப் பறக்கின்றன. உறங்கிக் கொண்டிருந்த மாந்தர் விழித்தெழுந்து தம் கடன்களில் ஈடுபடுகின்றனர். இப்படியாக எங்கும் ஒரே ஆரவாரங்கள் காலையில் நடக்கும்.

தன் ஆட்சியைச் செலுத்திவிட்டு இளைப்பாறுவதற்காகக் கடலுக்குள் சூரியன் மறையப் போகும் நேரம் தான், அந்த மாலை நேரம். இயற்கை அன்னை தன் தோற்றத்தை எடுப்பாகக் காட்டி நிற்கும் வேளைதான் அந்த மாலைவேளை. போர்க் களம் போன்று வானப் பரப்பு செக்கச் செவேலெனச் சிவந்து காணப்படுகின்றது. அந்த ஒளியின் மயக்கத்தால் கடலும் சிவந்த நிறமாக மாறி, ஆனந்தத்தாற் கொந்தளிக்கின்றது. அந்த வேளையை நினைத்தாலே உள்ளம் பரவசமாகிறது.

இருள் மூடக்கிடந்த அந்த வானப் பரப்பினையும் நிலப் பரப்பினையும் ஜோதி மயமாக்க எண்ணி அந்த அழகு நிலா தன் சேடியரான விண் மீன்களுடன் பவனி வருகிறாள். அவள் வரவால் ஆம்பலும் அல்லியும் மலர்ந்தாடுகின்றன. நிலவு நாள் என்றாலே மாந்தர் வெளிக் கிளம்பி விடுவார்கள். அநேகமாக கடற்கரையையே நாடிச் செல்வார்கள். கடற்காற்றும் ஒளி நிலவும் இதயத்தை இதயமாக்குகின்றன அல்லவா?

ஊருக்கு அழகு செய்வன போன்று உயர்ந்து வளர்ந்து நிற்கும் மலைகளிலும் ஒரு தனி அழகு. பால் தரும் மதலையின் வாயிலிருந்து வழிந்தோடும் பாலைப் போன்று, மலைகளில் நின்று ஊற்றெடுத்து வளைந்தோடி வரும் அருவிகள், பச்சைக்கம்பளம் விரித்தாற் போல் மலையடிவாரங்களில் மட்டமாக வளர்ந்து நிற்கும் தேயிலைச் செடிகள், இவற்றையும் காணலாம்.

இயற்கை அன்னையின் இன்பங்கள்தான் எத்தனை! இவைகளைப் படைத்த இறைவனே இயற்கை. இத்தகைய இன்பங்களை அள்ளிப் பருக முடியாதவன் இந்த உலகில் இருப்பானாகில் அவன் அபாக்கியசாலி என்றே கூற வேண்டும். இயற்கை மணம் எங்கும் வீசுவதாக!

## உங்களுடன் ஒரு வார்த்தை

ஜெயராணி சபாபதிப் பிள்ளை, மல்லாகம்—சென்ற வாரப் புதிருக்கு நீங்கள் அனுப்பிய விடைகிடைத்தது. சரியான விடைதான், கெட்டிக்காரி!

கே. எஸ். ஆனந்தன், இணுவில்—உமது தொடர் கதை கிடைத்தது. பரிசீலனை செய்து ஏற்றதெனில் பிரசுரிப்பேம். வேறு எங்கும் அனுப்ப வேண்டாம்.

இராணி நவமணி, மட்டக்குழி—உமது மர்மக்கதை கிடைத்தது. இன்னும் படிக்கவில்லை. படித்துப் பார்த்துப் போடுகிறேன்.

ஜே. எம். அன்வர், கராகொடை, ஆ. மயில்வாகனம், சிறுப்பிட்டி — பெயரும், விலாசமும் அனுப்பினால் போதாது. அங்கத்தவ இலக்கமும் அனுப்பவேண்டும். அப்போதுதான் அத்தாட்சிப் பத்திரம் அனுப்பப்படும்.

## கரும்புத் தமிழ்!


— வை. மு. கும்பலிங்கன், கும்பகோணம்—

மன்னவர் மடியில்
மகிழ்ந்தே புலவி,
மங்காப் புகழை
மிகுவேக கொண்ட
தென்னவர் மொழியே!
தெள்ளறு தமிழே!
தூயநற் றிருவடி
தொழுதே னம்மா!!

வளமார் இலக்கியம்
வகையாய்க் கொண்ட
வண்டமி ழமுதே!
வானுயர் தமிழே!
இளமைத் துடிப்பால்
இன்பம் தந்தாய்!
இனிமை பெற்றே,
இறும் பூ துற்றேன்!

வள்ளுவர் நூலை
வழங்கியே எமது
வாழ்வினை யுயர்த்தி
வளப்ப மளித்தாய்!
உள்ளத் துணர்வை
ஊட்டிய தமிழே!
உரைப்பே னெங்கும்:
உன்றன் பெருமை!

கனிச்சுவை மொழியே!
கன்னித் தமிழே!
கரும்பினி மினித்நிடு
கற்கண் டமுதே!
ஊனிற் கலந்த,
உண்மைத் தமிழே!
உணர்ந்தே னம்மா
உன்றன் புகழை!



சென்ற வாரப் புதிருக்கு விடை

இது தான் அந்த வழி? உங்கள் விடையும் சரியாக இருந்ததா? (உதவியவர் : அன்ரனி பெர்னாண்டோ)

எனது கிராமம்

# கோப்பாய்

(ஆர் பி. ஹரன்)

இலங்கையின் வடபாகமாகிய யாழ் நகரிலிருந்து வடக்கே சுமார் 3 மைல் தூரத்தில் இருக்கிறது கோப்பாய் என்னும் எனது கிராமம். இதற்கு தெற்கே கல்வியங்காடும் மேற்கே கொக்குவிலும் கிழக்கே கைதடியும் வடக்கே நீர்வேலியும் எல்லையாக அமைந்திருக்கின்றன. இங்கு முக்கியமாக இரு மதத்தினரும் பல ஜாதியினரும் வசித்த போதிலும் அவர்கள் யாவரும் உள்ளத்தாலொருவராகவே காணப்படுகின்றனர். அவர்களுள் வேற்றுமை என்பது சிறிதுமில்லை. இரு மதத்தினருக்குள்ளே அதிக தொகையினராக வசிப்பவர்கள் சைவ சமயிகளே. எனவே அவர்கள் தொகைக்கேற்ப பல சைவ ஆலயங்களும் ஒரு சில கிறிஸ்தவ தேவாலயங்களும் இக்கிராமத்தில் உள்ளன.

இக்கிராமத்திலே தான் சைவத்திற்கும் தமிழிற்கும் தொண்டு செய்த சபாபதி நாவலர் அவர்கள் தோன்றி-வாழ்ந்து-இறந்தார்கள். அவர் மாத்திரமல்ல, இன்று சைவத்திற்கும் தமிழுக்கும் தொண்டு செய்து கொண்டிருக்கும் சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்களும் இக்கிராமத்திலேயே பிறந்தார்.

எனவே இத்தகைய பல பெரியார்களைக் கொண்டது இக்கிராமம். பல ஆங்கில தமிழ் பாடசாலைகள் இக்கிராமத்தில் வாழும் மாணவர்களுக்குக் கல்வி வசதி அளிக்கிறது. பல கிராம முன்னேற்றச் சங்கங்களும், பல கூட்டுறவுச் சங்கங்களும், இக்கிராமத்தின் முன்னேற்றத்தையும், கூட்டுறவையும் வளர்க்கின்றன. இதைவிட இக் கிராமத்தில் ஓர் பொலிஸ் ஸ்டேசனும் இரு உப-தபாற் கந்தோரும், ஒரு ஆஸ்பத்திரியும், ஓர் கிராமச் சங்கமும், காரியாதிகாரி கந்தோர் ஒன்றும் இருக்கின்றன.

சென்ற தேர்தலின் போது தமிழரசுக் கட்சி சார்பாக இங்கே போட்டியிட்ட திரு. மு. பாலசுந்தரம் அவர்கள் எனது கிராமத்தின் பிரதிநிதியாக மக்கள் மன்றத்திலே கடமையாற்றுகிறார். இவர் மறைந்த கோப்பாய்க் கோமான் திரு. கு. வன்னியசிங்கம் அவர்கள் விட்ட பணியைத் தொடர்ந்து-அவரது அடிச்சுவட்டிலே-கிராம மக்களுக்குச் சேவை செய்து வருகிறார்.

மேலும் இக்கிராம மக்கள் பெரும் பாலும் விவசாயத்தையே செய்து வாழ்க்கை நடாத்துகின்றனர்.

## அன்புள்ள மருமக்களே!

எல்லோரும் தைத்திருநாளை மிகுந்த மகிழ்ச்சியுடன் கொண்டாடிக் குதூகலித்திருப்பீர்களென நம்புகின்றேன்.

சென்ற வியாழக்கிழமை (17-1-63) அன்று, அகிலமெங்கும் சுவாமி விவேகானந்தர் பிறந்த தின நூற்றாண்டு விழாக் கொண்டாடினார்கள். 'பாரதத் தாயின் அருமைப் புதல்வன், அறிவுச் சுடர், அஞ்சா நெஞ்சன் சுவாமி விவேகானந்தர். அவரின் வாழ்க்கை உங்களுக்கு வழிகாட்டியாக அமையட்டும்.

அத்தாட்சிப் பத்திரங்கள் பெற்ற மருமக்கள் நன்றி தெரிவித்திருக்கிறார்கள். அவர்களுக்கு நன்றி. இன்னும் பெறுதவர்கள் பொறுமையுடன் இருக்க வேண்டும். விரைவில் அவர்களுக்கும் கிடைக்கும்.

உங்கள் அன்பின்,

வளர்மதி மாமா

## வளர்மதி

அத்தாட்சிப் பத்திரம் வேண்டுமா?

அப்படியானால்...

அனுப்பி விட்டீர்களா?

ஆமாம்!

உங்கள் பெயர் விலாசம், அங்கத்துவ எண் இவற்றைத்தான்!

# கழகச் செய்திகள்

## மேலும் தமிழரசின் புதிய கிளைகள்

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் புதிய அமைப்புத் திட்டத்தின் படி ஓர் தமிழரசுக் கட்சி கிளை ஸ்தாபனம் சென்ற வெள்ளிக்கிழமை காங்கேசன்துறையில் அமைக்கப்பட்டது.

பின் வருவோர் உத்தியோகத்தராகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ஆ. தெட்சணாமூர்த்தி, செயலாளர்: திரு. நா. கருணனந்தசிவம் பொருளாளர், திரு. க. க. சின்னத்துரை, நிர்வாகக் குழு உறுப்பினர்: திருவாளர்கள் இ. ஞானசுந்தரம், வ. இரத்தினம், க. செனதிராசா, தெ. ஸ்ரீகாந்தன், வே. வயிரமுத்து, சி. பாலசுப்பிரமணியம், க. முருகப் பெருமாள், சி. மாசிலாமணி, பொ. விவேகானந்தன், செ. இளமுருகனர், மு. பொன்னுத்துரை, ஆ. பாலசுப்பிரமணியம்.

—

### நாவலர் நாடக மன்றம்

26-12-62 புதன்கிழமை, மக்கல்டெனியாத் தோட்டத்தில் நாவலர் நாடக மன்றச் செயற் குழுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு நாடக ஆசிரியர் எ. பி. வீரப்பா தலைமை வகித்தார். வருடாந்த வரவு செலவு ஆராயப்பட்டது.

—

### மாணவ முத்தமிழ் மன்றம்

எட்டியாந்தோட்டைப் புனித கபிரியேல் கல்லூரி மாணவ முத்தமிழ் மன்றத்தின் சார்பில் நடப்பு வருடத்தின் முதலாம் தவணையின் முதல் கூட்டம் மன்ற இயக்குநர் திரு. ஏ. பி. வி. கோமஸ், பி. ஏ. அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்றது. அன்றைய தினம் முதலாம் தவணையின் உறுப்பினர்களாகப் பின் வருவோர் மன்றத்தினரால் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்:

இயக்குநர்: திரு. ஏ. பி. வி. கோமஸ், (ஆசிரியர்) தலைவர்: செல்வன் வி. இராஜவேல், உபதலைவர்: செல்வன் வி. பி. மகாலிங்கம், செயலாளர்: செல்வன் எஸ். பி. சுப்பையா, உப செயலாளர்: செல்வன் ஆர். எஸ். மணி, பொருளாளர்: ஆசிரியர் திரு. கா. கந்தசாமி, உப பொருளாளர்: செல்வன் ஆர். முத்தால், இதழாசிரியர்: செல்வன் என். சுப்பையா, உப இதழாசிரியர்: செல்வன் எஸ். ரெங்கையா,

—

### இ. அ. வா. மு. சங்க நிர்வாகிகள் தேர்வு

கடத்த ஞாயிறன்று தேர்தல் அதிகாரியும் "சமுதாயம்" ஆசிரியருமான திரு. ஏ. ஈ. மூர்த்தி அவர்கள் முன்னிலையில் இலங்கை அருந்திய வாலிபர் முன்னேற்றச் சங்கத் தலைமை நிலையத் தேர்தல், தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. தேர்தலுக்குச் சகல கிளைச் சங்கங்களிலிருந்தும் பிரதிநிதிகள் வந்து சிறப்பித்தனர். தேர்தலின் பின் அடுத்த ஆண்டு மத்திய சங்க நிர்வாகிகளாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: திரு. எஸ். கிருஷ்ணசாமி, துணைத் தலைவர்: திரு. எம். சாமுவேல், பொதுச் செயலாளர்: திரு. சந்தனராஜா, பொருளாளர்: திரு. எம். எஸ். பெருமாள், துணைப்பொருளாளர்: திரு. ஜி. செல்லையா. அத்துடன் ஒன்பது பேர் கொண்ட செயற்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. பின் மத்திய சங்க புதிய நிர்வாகிகளின் நன்றியுரையுடன் கூட்டம் முடிவுற்றது.

—

### களுதாவளை இளம் விவசாயிகள் கழகம்

களுதாவளை இளம் விவசாயிகள் கழகத்தின் 1962ம் ஆண்டினது 13வது பொதுக் கூட்டம் சென்ற 26-12-62 நடைபெற்றது. சங்க அங்கத்தவர்களில் 57 பேர் சமுகம் அளித்திருந்த இக் கூட்டத்திற்கு திரு. சி. அமரசிங்கம் தலைமை வகித்தார். சங்கத்தின் ஆரம்ப கர்த்தாக்களுள் ஒருவரான திரு. க. வேலாச்சி, ஒவ்வொரு அங்கத்தவரும் சங்கத்தை மென்மேலும் வளர்க்கப் பாடுபட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். மற்றும் திருவாளர்கள் க. சுந்தரலிங்கம், ச. தருமரெத்தினம், ஆ. அரசரெத்தினம் ஆகியோரும் பேசினர். சங்கத்தின் செயலாளர் திரு.பெ. இளையதம்பி பேசும்போது, காலபோக மரக்கறித் தோட்டம் செய்வதில் ஒவ்வொரு அங்கத்தவரும் அக்கறை காட்டினுல் வெற்றி பெறலாம் என்று குறிப்பிட்டார்.

—

### களுதாவளை சைவ மகாசபை

களுதாவளை சைவ மகாசபையானது கடந்த பல வருடங்களாகச் சைவ சமயத்திற்குச் செய்த தொண்டுகளோ அளப்பரிது. களுதாவளை பிள்ளையார் கோயில் திருவிழாக் காலங்களிலும், மற்றைய விசேட சமயக் கொண்டாட்டங்களிலும் அது சிறப்பாகப் பணியாற்றி வருகிறது. அதன் போஷகரான திரு. சி. கண்ணமுத்து ஆசிரியர் அவர்கள் அதன் வளர்ச்சிக்கு அதிகம் பாடுபட்டு வருகிருர்.

சென்ற 29-12-62ல் நடைபெற்ற கூட்டத்தில் பின் வருவோர் புதிய ஆண்டின் நிர்வாக சபையினராக தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: திரு. ப. கதிர்காமத் தம்பி ஆசிரியர், காரியதரிசி திரு. க. பாக்கியநாதன் எழுதுவினைஞர், தனதிகாரி: திரு. பெ. இளையதம்பி. திருவாளர்கள்: க. சோமசுந்தரம் ஆசிரியர், வே. ஐயாத்துரை ஓவசியர், பொ. தம்பிராஜா ஆசிரியர், க. தெய்வநாயகம் ஆசிரியர் ஆகியோர் கௌரவ அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

—

### புத்தூர் கிராம சபை

புத்தூர் கிராம சபைக் கூட்டம் 22-12-62ல் உபதலைவர் திரு. மு. திருநாவுக்கரசு தலைமையில் நடந்தது. திரு. க. சின்னத்துரையினுல் கொண்டுவரப்பட்ட பின்வரும் பிரேரணைகள் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டன:

(1) அரசினர் விறகு காலை ஸ்தாபிப்பதற்கு ஏற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும்.

(2) கோப்பாய் மகளிர் கலாசாலையை மூட வேண்டாமெனக் கல்வி மந்திரி, பிரதம மந்திரி ஆகியோருக்குத் தந்திமூலம் தெரிவிக்க வேண்டும்.

—

### பிரிவு உபசாரம்

கோப்பாய் காரியாதிகாரி இடமாற்றலாகிச்செல்வதை முன்னிட்டு புத்தூர் கிராம சபை மைதானத்தில் 29-12-62 வலி கிழக்கு பொதுமக்களால் பிரிவு உபசாரக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அச்சுவேலி கிராம சபையிலிருந்து காரியாதிகாரி ஊர்வலமாக அழைத்துவரப்பட்டார். வழிநெடுகிலும் மிகப் பிரமாண்டமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

வரவேற்பு, சங்கீத பூஷணம், பி. இளையதம்பி அவர்களால் வாசித்தளிக்கப்பட்டது.

திரு. ஏ. குமாரசுவாமி, திரு. எம். கந்தசாமி, திருமதி வேதவல்லி கந்தையா, ஆகியோரும் பேசினர்கள்.

முடிவில் கொக்குவில் கலாபவன மாணவிகளால் மிகவும் உயர்ந்த முறையில் நாட்டியக் கச்சேரியும் நடாத்தப்பட்டது.

—

### நல்லூர் தெற்கு சனசமூக நிலையம்

30-12-62 இரவு 9 மணியளவில் நிறைவேறிய 13-ம் வருடத்தைய மகா சபைக் கூட்டத்தை ஆரம்பித்து வைத்த அதன் தலைவர் திரு. த. இராசரத்தினம் சொற்பொழிவாற்றுகையில் இச் சனசமூக நிலைய ஆதரவில் இளம் விவசாயிகள் கழகம் வாலிபர் சங்கம், பஞ்சாயத் சபை மாதர் சங்கம் ஆகியன மக்களின் ஒற்றுமையால் இயங்குகின்றன வென்றும் இவற்றுள் பஞ்சாயத் சபை மக்கள் நீதிஸ்லத்திற்குச் சென்று பொருட்செலவு செய்யாமல் தடைசெய்து சிவில் கிறிமினல் குற்றங்களை சுமார் பதினெட்டு வருடங்களாக விசாரணை செய்து ஒற்றுமையை நிலைநாட்டி வருகின்றதெனவும், மென்மேலும் யாவரையும் ஒத்துழைக்கும்படியும் வேண்டிக் கொண்டு, இளம் வாலிபர்களை அரசாங்க உத்தியோக மோகத்தை நீக்கிக் கைத்தொழில்களை உற்பத்தி செய்ய இந்நிலையம் திட்டமிட்டிருக்கிறதெனவும் குறிப்பிட்டார்.

திருவாளர்கள் அ. இரத்தினம், இ. செல்வமாணிக்கராசா, ஆசிரியர் பொ. ஏரம்பு, சி. வயித்திலிங்கம், சி. துரைராசா, மு. காசிப்பிள்ளை ஆகியோரும் சொற்பொழிவாற்றினர். கூட்ட நிகழ்ச்சிகளின் பின்னர் பின்வருவோர் 14-ம் ஆண்டின் உத்தியோகத்தராகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் : திரு. த. இராசரத்தினம், உபதலைவர்: திரு. சி. வயித்திலிங்கம், காரியதரிசி: திரு. பொ. புண்ணியசிங்கம், உபகாரியதரிசி, திரு. எம். எஸ். துரைராசா, தனதிகாரி: திரு.இ. செல்வமாணிக்கராசா உபதனதிகாரி: திரு. அ. இரத்தினம், விளையாட்டுத் தலைவர்: திரு. ஆ. சண்முகலிங்கம், விளையாட்டுக் காரியதரிசி: திரு.எஸ். முத்துராசா, கணக்குப் பரிசோதகர்: திரு. பொ. ஏரம்பு.

நிர்வாகசபை உறுப்பினர்: திருவாளர்கள்:—மு. காசிப்பிள்ளை, க. செல்லத்துரை, செ. சிவரெத்தினம், சு. புனிதலிங்கம், ப. நவரத்தினம், செ. மகேந்திரநாதன்.

—

### கொழும்பு அருளொளி நிலையம்

#### எட்டாவது ஆண்டு விழா

கொழும்பு அருளொளி நிலையத்தின் எட்டாவது ஆண்டு விழா கடந்த 31-12-62 மாலை வெள்ளவத்தை ஸ்டேஷன் வீதியிலுள்ள 'யோகா' இல்லத்தில், திரு. புலேந்திரன் தலைமையில் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

தலைவர், தமது தலைமையுரையில், நிலையத்தின் சேவை பற்றியும், சுவாமி சித்திரமுத்து அடிகளாரின் பெற்றி பற்றியும் குறிப்பிட்டார்.

திருவாளர்கள்: சொய்ஸா, மனேகரன் மயில்வாகனம், ஆர். எஸ். சோதிநாதன் ஆகியோரும் விழாவில் பங்கு பற்றிப் பேசினர்.

திரு. எஸ். விசுவலிங்கம், 'யோகாசனத்தின் மகிமை' பற்றிப் பேசினர். செல்வன் வி. பாலசுப்பிரமணியம் யோகாசனப் பயிற்சிகள் செய்து காட்டினர்.

நிலையச் செயலாளர் செல்வன் எஸ். விமலநாதன் நன்றியுரை கூறினர்.

பிரசாதம் வழங்கப்பட்டதுடன், விழா இனிது முடிவுற்றது.

—

### பெரிய கல்லாறு பிரயாணிகள் சங்கம்

தலைவர் திரு. எம். தம்பிராசா அவர்கள் தலைமையில் பெரியகல்லாறு அம்மன் ஆலய வீதியில் 30—12—62 பி. ப. 3-00 மணிக்குக் கூடிய பெரிய கல்லாறு பிரயாணிகள் சங்க முதலாவது செயற்குழுக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன:

1. சங்க விதிக்கமைய புதிய உறுப்பினரைச் சேர்த்தல்.

2. பஸ் நிறுத்தும் நிலையங்கள் அமைப்பது பற்றிச் சம்பந்தப்பட்ட கிராமச் சபைகளுக்கும் மட்டுநகர் இ. போ.ச. பிராந்தியக் கந்தோருக்கும் விண்ணப்பித்தல்.

3. நடைமுறையில் இருந்து தடைப்பட்டுள்ள மட்டக்களப்பு—கல்லாறு பஸ் போக்குவரத்துச் சேவையை மீண்டும் நிலைநாட்டல்.

4. தினசரி 500க் கதிகமான பிரயாணிகள் கல்லாற்றில் இருந்து பயணஞ் செய்வதால் கல்லாறு—கல்முனைக்கிடையில் பஸ் சேவை ஒன்றை ஏற்படுத்த ஏற்பாடு செய்தல.

5. கல்லாற்றில் அடுத்துள்ள கிராமங்களிலிருந்தும் தினசரி 150க் கதிகமானேர் கல்லோயாவுக்குத் தொழிலுக்குச் செல்வதால் அம்பாறை — கல்லாறு பஸ் சேவை ஒன்றை ஏற்படுத்துவது பற்றி அம்பாறை இ. போ. ச. அதிபருக்கு விண்ணப்பித்தல்.

6. பெரிய கல்லாறு, கோட்டைக் கல்லாறு ஆகிய கிராமங்களுக்கு தெரிவு செய்துள்ள ஒன்பது பஸ் நிலையங்களுக்குமாக மொத்தம் 20 பஸ் நிறுத்து அடையாளத் தகடுகள் பெறுதல் சம்பந்தமாக முறையே கரவாகு வடக்கு கிராமச் சங்கத் தலைவருக்கும், எருவில் போரதிவு கிராமச் சங்கத் தலைவருக்கும் விண்ணப்பிப்பதின் நகல் கிழக்குப் பிராந்திய இ. போ. ச. தலைவருக்கும் அனுப்பி வைத்தல்.

7. கிழக்கு மாகாணத்தின் தலைநகரான மட்டக்களப்பு இ. போ. சபை பிரதேசக் கந்தோரின் நிருவாகங்களை அம்பாறைக்கும், பண்டாரவளைக்கும் மாற்றுவதன் மூலம் இலங்கை டிப்போக்களில் அதிக வருமானத்தைக் கொண்டுவந்த இந்த டிப்போவினுல் இ.போ.சபைக்கு அதிக நட்டமேற்படுவதுடன் மக்கள் தேவையும் வெகுவாகப் பாதிக்கும் என்பதை அநுதாபத்துடன் அரசாங்கத்திடம் தெரிவித்துக் கொள்கிறது.

—

### ஆலயங்களில் சமயக் கல்வி

வண்ணர்பண்ணை சாத்தனையர் மடம் ஸ்ரீகற்பக விநாயகர் ஆலய சபையின் எட்டாவது வருடாந்தக் கூட்டம் 2-1-63 புதன் இரவு 7 மணிக்கு திரு. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இன்றைய சூழ் நிலையிலே சமயக் கல்வி போதிக்கப்பட வேண்டும். அதனுல் அருள் நிறைந்த கல்வியை பெற வேண்டும்; எனவும் சைவப் புலவர் திரு. வ. கந்தசாமி கூறினர். திரு. மு. க. வேலுப்பிள்ளை, திரு. சி. கந்தவேல், ஆகியோர் கூட்டு வழிபாட்டின் அவசியம் பற்றிப் பேசிய பின் புதுவருட உத்தியோகத்தர் தெரிவு நடைபெற்றது. பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: திரு. வ. கந்தசாமி, உப தலைவர்: திரு. மு. க. இ. வேலுப்பிள்ளை, சதியாகராசா. போஷகர்கள்: திருவாளர்கள் வை. செல்லையா, செ. சுப்பிரமணியம், நா. சுப்பிரமணியம், செ. சண்முகசுந்தரம். செயலாளர்: திரு. மு. க. கதிர்காமநாதன், உப செயலாளர்: திரு. சி. யோகரத்தினம், பொருளாளர்: திரு. சி. கந்தவேல், உதவிப் பொருளாளர்: திரு. தி. கைலாசநாதன். பதினன்கு அங்கத்தவர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

பின் வரும் பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டன:

(1) ஏழு வருடத்துக்கு ஒரு முறை இந்தியாவிற்குச் செல்லலாம் என்ற சட்டம் நீக்கப்பட வேண்டும். சமய சம்பந்தமான யாத்திரைகளுக்கு இச் சட்டம் தடையாகவுள்ளது.

(2) சமய அறிவுப் போட்டி, திருமுறைப் போட்டி நடத்திப் பரிசில் வழங்கல்.

(3) ஒவ்வொரு ஞாயிறு தோறும் ஒவ்வொரு அன்பர்கள் வீடுகளிலும் சென்று பஜனை செய்தல்.

(4) சமய நூல் நிலையம் நிறுவல்.

—

### திருக்கோணேஸ்வர ஆலய மகா கும்பாபிஷேகம்

புராதனப் பெருமை வாய்ந்த திருகோணமலைத் திகோணேஸ்வர ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம், எதிர் வரும் ஏப்பிரல் மாதம் மூன்றும் திகதியான புதன் கிழமையன்று மிகச் சிறப்பாக நடைபெறும்.

1950-ம் ஆண்டில் இவ்வாலயத்தைப் புதுப்பிக்கும் முயற்சி ஆரம்பிக்கப்பட்டு, இன்று நிறைவேறும் நிலையை எய்திவிட்டது.

ஆகவே, கும்பாபிஷேக வைபவத்தைச் சிறந்த முறையில் நடாத்த, நிறைந்த பொருளுதவியை ஆலய அன்பர்களும், பக்தர்களும் அளித்துதவுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

## மகோன்னத இரண்டாவது வாரம் !

**செண்ட்ரல்** (மருதானை) **சபையர்** (வெள்ளவத்தை)

18-ம் திகதி வெள்ளி முதல் **செண்ட்ரல்** (நாவலப்பிட்டி)

**ராணி** (யாழ்ப்பாணம்) **ராஜேஸ்வரா** (மட்டக்களப்பு) **ஜோதி** (திருகோணமலை) **லிபர்ட்டி** (பதுளை)

* பாலையா * மனோகர் * கல்யாணகுமார் * முத்துகிருஷ்ணன் * ராமராவ்
* நாகேஷ் * எம். வி. ராஜம்மா * விஜயலக்ஷ்மி நடித்த வெற்றிச் சித்திரம்.

இந்தியாவில் 100 நாட்களுக்கு மேல் ஓடியது!

# தாயில்லாப் பிள்ளை



வசனம் : மு. கருணாநிதி எம். எல். ஏ.

'மனோகரா' புகழ் டைரக்டர் பிரசாத் சொந்தத்தில் தயாரித்து
டைரக்ட் செய்திருக்கும் படம்.

இசை : கே. வி. மஹாதேவன்

பாடல் : கவிஞர் கண்ணதாசன் — கொத்தமங்கலம் சுப்பு — மருதகாசி

"மனிதன் பிறக்கும்போது ஜாதியுடன் பிறப்பதில்லை. இடையில் வந்து புகுவதுதான் அது" என்ற உயரிய கருத்தைக் கொண்ட படம்.

---

## இப்பொழுது மக்கள் ஆதரவை அமோகமாகப் பெற்று வெற்றியுடன் ஓடிக்கொண்டிருக்கிறது!

**எல்பின்ஸ்டன்** (மருதானை) **ரெக்ஸி** (வெள்ளவத்தை) **வேல்ஸ்** (கண்டி) **இம்பீரியல்** (மட்டக்களப்பு) **கிங்ஸ்** (பதுளை)



திலிப் குமார்—மதுபாலா
துர்கா கோட்டே—சுரேந்திரா
பிரிதிவிராஜ் கபூர்—குமார்
நிகார் சுல்தானா
கோபி கிருஷ்ணா
நடித்த

# அக்பர்

சங்கீதம்:
நௌசாத்
பாடல்கள்:
கம்பதாசன்
பின்னணி:
ராதா, ஜெயலெட்சுமி,
பி. சுசிலா



7 வருடங்களாகத் தயாரிக்கப்பட்டு, ரூபா 125 லட்சம் செலவு செய்யப்பட்டு, பம்பாயில் 2 வருடங்கள் ஓடிய சிறந்த இந்திப் படமான 'முகால் ஏ அஸா'மின் தமிழ்ப் பிரதி

சக்கரவர்த்தி அக்பரின் மகன், இளவரசன் சலீமின் கதையை—அழகிய நாட்டியக்காரி அனார்க்கலியிடம் அவன் கொண்ட காதலை—சித்தரிக்கும் சிரஞ்சீவிக் காவியம்!

கண்கவர் 'டெக்னிக் கல'ரில் அழகான நடனங்கள்!

---

## விரைவில் வருகிறது!

**செல்லமஹால்**
மற்றும் 7 திரையில்



ஜெமினி கணேசன்,
சரோஜாதேவி,
தங்கவேலு,
பாலையா,
எஸ். வி. சுப்பையா,
எம். சரோஜா,
சுந்தரிபாய்
நடிக்கும்

# பனித்திரை



சங்கீதம்:
கே. மகாதேவன்

பாடல்கள்:
கண்ணதாசன்,
கொத்தமங்கலம் சுப்பு

பின்னணி:
ஸ்ரீனிவாஸ், ராகவன்,
சுசிலா,
சீர்காழி கோவிந்தராஜன்

---

## இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!


**கிங்ஸ்லி** (கொழும்பு) **பிளாஸா** (வெள்ளவத்தை) **வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
**ராஜ்** (நீர்கொழும்பு) **வெம்பிளி** (கண்டி) **விஜயா** (மட்டக்களப்பு) **ஸ்ரீகிருஷ்ணா** (திருகோணமலை)
**மொடர்ன்** (பதுளை) **லக்ஷ்மி** (இரத்தினபுரி) **ஜுபிடர்** (குருணாகலை) **தீபவாளி** (நுவரெலியா)
**விஜிதா** (ஹட்டன்) **ஜெமினி** (ராகலை)

காமினி திரையில்
வார நாட்களில் தினசரி
பிற்பகல் 2-00 மணி

காதலன் அவளுடைய தந்தையின் எதிரி. ஆனாலும் காதலி தயங்கவில்லை. மனதால் வரித்தவனையே மாலை யிடுகிறாள் மங்கை. திரண்டெழுந்த எதிர்ப்புகளைத் திரணமென மதித்த காதலர்கள் தியாகபுரி நோக்கி விரைய வேண்டியேற்பட்டது — விதியின் செயலா? வஞ்சகரின் சூழ்ச்சியா? — வெண் திரை பதிலளிக்கும்.

எம். ஜி. ராமச்சந்திரன்—பத்மினி—ராகினி—எஸ். வி. சகஸ்ரநாமம்
எம். என். நம்பியார் எம். ஜி. சக்ரபாணி—எம். என். ராஜம்
கே. ஏ. தங்கவேலு எம் எஸ். சரோஜா
மற்றும் பலர் நடித்த

# ராணி சம்யுக்தா



திரை கதை, வசனம், பாடல்கள்
**கவிஞர் கண்ணதாசன்**

டைரக்ஷன்:
யோகானந்

இசை:
கே. வி. மகாதேவன்

பின்னணி : டி. எம். சௌந்தரராஜன், பி. சுசீலா, ஜமுனாராணி

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு, பண்டாரநாயக்க மாவத்த, 19ஏ, இலக்கத்தில் 1963-ம் வருடம் ஜனவரி மாதம் 20-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.